# ஞானசம்பந்தம்

மலர் 14] மன்மத ஆண்டு ஆனித்திங்கள் 10—7—55 [இதழ்



ஸ்ரீ ஆனந்த நடராஜப்பெருமான்

ஆசிரியர் வித்துவான், சோமசுந்தரத் தம்பிரான்

தருமபுர ஆதீன

# உட்பொருள்

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | கோயில் - கும்பாபிடேகம் | ... | i-vi |
| 2. | ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திறப்புரை | ... | க-கஎ |
| 3. | கூடலையாற்றூரில் வழிபாடு | ... | கஅ |
| 4. | திருவருட்பயன் ஆராய்ச்சி | ... | 1 |
| 5. | சேக்கிழார் கண்ட இசைத் தமிழ் | ... | 5 |
| 6. | பூலோக விமர்சனம் | ... | 10 |
| 7. | கனிந்த கவிதை | ... | 13 |
| 8. | ஆனந்த தாண்டவம் | ... | 17 |
| 9. | " கலை " | .. | 23 |
| 10. | கற்பனையும் கடவுட் கொள்கையும் | ... | 27 |
| 11. | மாசில் வீணை | ... | 33 |
| 12. | அறமும் அன்னையரும் | ... | 38 |
| 13. | தமிழ் நாட்டுத் தம்பி ! | ... | 40 |
| 14. | மூடப் பழக்கமா ? | ... | 41 |
| 15. | 7-ஆவது திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு | ... | 44 |
| 16. | பாராட்டு விழா | ... | 57 |
| 17. | ஆதீனத்திலும் ஆதீன தேவஸ்தானங்களிலும் | ... | 60 |
| 18. | வருங்காலம் | ... | 62 |
| 19. | மதிப்புரை | | 22, 32, 39, 61 |
| 20. | திருக்கேதார யாத்திரை (அநுபந்தம்) | ... | 33-40 |

## சிதம்பரத்தில் அன்னதானம்

சிதம்பத்தில் உள்ள திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துக்கு உரிய கட்டளை மடத்தில், தருமபுர ஆதீனம் 25-ஆவது குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவுள்ளப்பாங்கின்வண்ணம் சிறப்பாக அன்னதானம் செய்யப்பெற்றது. மகா கும்பாபிஷேகத்தைத் தரிசிக்க வந்த ஏழைகள் அநேகர் ஒவ்வொருநாளும் உண்டு உவந்து வாழ்த்தி வணங்கிச் சென்றூர்கள்.

தருமபுர ஆதீன மடாலயத்தில்



ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும்
உயர்திரு. சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்களும்

தருமபுர ஆதீனத் திருநெறிய தெய்வத்தமிழ் மன்றம்



திறப்புவிழா



ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்
சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரவர்களுக்கு பொன்னுடைப் போர்த்தல்



உயர்திரு சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்கள்
திறப்புரையாற்றுதல்

557

உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 14 } மன்மதஹூ ஆனிமீ 10—7—55 { இதழ் 8

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

## கோயில் - கும்பாபிடேகம்

சைவர்க்குச் சிதம்பரமும் வைணவர்க்குச் சீரங்கமும் 'கோயில்' என்று சிறப்பொடு விளங்குகின்றன. ஏனைய தலங்களை ஊர்ப்பெயரொடு சேர்த்து, திருவாரூர்க்கோயில், மதுரைக் கோயில் என்று குறித்தால்தான் தெளிவாகும். சிதம்பரத்தைக் கோயில் என்று குறித்தலே அமையும். 'கோயில் நான்மணி மாலை' என்று சொன்னதும் நம் நினைவில் சிதம்பரம் வருமே அன்றிப் பிற தலம் யாதும் வாராது.

சிதம்பரம் தில்லையில் உள்ள கோயிலுக்குள் ஒரு பகுதிக்கு உரிய சிறப்புப் பெயர். சித் - ஞானம். அம்பரம் - ஆகாசம். சிதம்பரம் - ஞானாகாசம். ஞானாகாசம் என்ற பகுதி, நடராசப் பெருமான் ஆடும் இடத்திற்கு மேற்கில், வழிபடுவோர்க்குக் காட்டும் இடம் ஆயினும், இப்பொழுது சிதம்பரம் என்ற

பெயர் திருக்கோயில் முழுவதையும் உணர்த்துவதொடும் அமையாமல், நகரையே உணர்த்தி நிற்கின்றது. தில்லை என்று நகரையும், கோயில் என்று சிவாலயத்தையும், சிதம்பரம் என்று இரகசியத்தையும் குறித்தனர் முதலில். பின்னர் அவ்வழக்கம் இந்நிலையில் வளர்ந்தது.

திருமூலட்டானத்தைச் சிதம்பரம் என்றோ, சிதம்பரத்தைத் திருமூலட்டானம் என்றோ வழங்கலாமோ? ஐந்து சபைகளுள் ஒன்றன் பெயரால் மற்றொன்று வழங்கப்பெறலாமோ? ஆகாது. ஒவ்வொன்றற்கும் தனித்தனியாகப் பெயர் இருந்த உண்மை இன்றும் புலப்படுகின்றது.

சிதம்பரம் முதலிய திருக்கோயிற் பகுதிகள் பலவற்றிற்கும் சம்ப்ரோக்ஷணம் (- நன்கு தெளித்தல்) 7—7—'55 வியாழக் கிழமை காலை 10 மணிக்கு நடந்தது. மகா கும்பாபிஷேகம் என்பது அதற்கே பொருந்தும். இந்நூற்றாண்டில், எங்கும் எவரும் செய்திராத - கண்டிராத வண்ணம் அது நிகழ்ந்தது.

கோயிலை ஆலயம் என்பர் வடமொழியில். அதற்கு ஆ - பசு. லயம் - ஒடுங்குதல் என்று பொருள் கூறினர். வடமொழிப்புலவரோ தமிழ்ப்பெரும்புலவரோ அப்பொருள் பொருந்தும் என்று கொள்ளார். ஆ - பசு என்று தமிழிலும், லயம் - ஒடுங்குதல் என்று வடமொழியிலும் கூறுவதே அதன் பொருந்தாமையைப் புலப்படுத்தும். ஆ - உபசர்க்கம் என்பதே செவ்விது.

சிவாலயம் தான்தோன்றிகள் தம் விருப்பம்போலக் கட்டிக் கொள்ளத் தக்கது அன்று. சிவாகம விதிப்படி அமைக்கப் பெறத் தக்கது. பிற சமயங்களின் ஆலயத்துக்கும் சிவாலயத் திற்கும் வேற்றுமை பெரிது.

சிவாலயத்தின் ஒவ்வோர் உறுப்பும் ஒவ்வோர் உண் மையை உணர்த்தும். கர்ப்பகிருகம், அர்த்தமண்டபம், மகா மண்டபம், ஸ்நபநமண்டபம், ஸ்தம்பமண்டபம், நிருத்தமண்ட பம் முதலிய மண்டபங்களும், ஐந்துசுற்று, கோபுரம், யாகசாலை, நந்திபீடம், பலிபீடம், கொடிமரம் முதலியனவும் சிவாலயத்தின் உறுப்பாகும்.

559

அண்டத்திலும் பிண்டத்திலும் உள்ள பிரிவுகளைக் குறிப்பது சிவாலயம். ஆறத்துவாக்களால் அண்டமாம். உடலுறுப்புக் களைப் போல்வதால் பிண்டமாம். தியாநம் பற்றிப் பாவிக்கப் பெறும் ஆதாரம் ஆறும் போல் அமைந்திருப்பதாலும் பிண்ட மாகும்.

கர்ப்பகிருகம் சுத்தமாயை, மகாமண்டபம் சுத்தாசுத்த மாயை, மற்றைய சுற்றுக்கள் அசுத்தமாயை. அண்டத்தில் சாந்தியதீதை, சாந்தி, வித்தை, பிரதிட்டை, நிவிர்த்தி என்று ஐந்து கலை(-பிரிவு) உள்ளன. சிவாலயத்தின்கண் உள்ள ஐந்து சுற்றுக்களும் அந்த ஐந்து கலைகளின் குறிப்பாகும். நிவிர்த்திகலை வெளிச்சுற்று. சாந்தியதீதை கர்ப்பகிருகத்தைச் சுற்றிய பகுதி. ஐந்துடம்பும் ஐந்து கோசமுமாகச் சொல்லியும் இருக்கின்றனர். பிரணவத்தின் ஐங்கலையாயும் ஐந்தெழுத்தா யும் கூறினர் திருமூலர்.

இருதயம் ஒரு தாமரை வடிவாகப் பாவிக்கப்பெறும். அது தத்துவரூபமான தாமரை. இருதயகமலம்போல்வது கர்ப்பகிருகத்தின்மேல் விளங்கும். தூபியுடன் கூடிய கர்ப்ப கிருகத்தில் சிவலிங்கம் திகழ்வது, இருதயத்தில் சதாசிவம் வீற்றிருந்தருள்வதைக் குறிக்கும். மூலாதாரம் கர்ப்பகிருகம்; சுவாதிட்டானம் அர்த்தமண்டபம்; மணிபூரகம் மகாமண்டபம்; அநாகதம் ஸ்தபநமண்டபம்; விசுத்தி தம்பமண்டபம்; ஆஞ்ஞை நிருத்தமண்டபம். இவ் ஆறுதாரக் குறிப்பாயுள்ள அமைப்பே அம்மண்டபக்ரமம்.

சிவலிங்கம் சதாசிவம். சோமாஸ்கந்தர் மகேசுரர். சந்திர சேகரர் உருத்திரமூர்த்தி. கொடிமரம் பதி. நந்தி பசு. பலி பீடம் பாசம். பாசம் நீங்கிப் பசு, பதியை அடைந்த குறிப்பே, பலிபீடத்தைக் கடந்து நந்தி சிவலிங்கத்தை நோக்கி நிற்கும் அமைப்பு.

அவ்வவ்வாதாரத்திலும் அவ்வத்தத்துவத்திலும் வைத்துக் கூறப்பெறும் மூர்த்திகளை அவ்வப் பரிவார தேவர்களாகக் கோயில்களில் இன்றும் பார்க்கின்றோம். அம்முறை மாறிய கோயில்கள் இருப்பின், அவையும் விளங்கா. ஊரும் நலம் அடையாது.

யாகசாலை கொப்பூழ். தீர்த்தம் சிவசத்தி சொரூபம். அஸ்திரதேவர் திரோதானசத்தி. ஆரணி, ஜனனி, ரோதயித்திரி என்னும் மூன்றன் வடிவம் அது. இடபவாகனம் ஆன்மா.

முப்பத்தாறு தத்துவங்களும் பஞ்சகோசங்களாய் - உடம்பாய் இருக்க, உள்ளத் தாமரையில், "தீங்கில் உயிர் சிவலிங்கம்." ஆகக்கொண்டு, சதாசிவமூர்த்தி வீற்றிருக்கும் பிண்டத்தின் அமைப்பே சிவாலயம். எல்லாத் தத்துவங்களும் பஞ்சகலைகளில் அடங்கும். அக்கலை நிலயத்தில் சாதாக்கிய தத்துவத்தில் சதாசிவமூர்த்தி வீற்றிருப்பதை, அண்ட பிண்டங்களில் அறியாதாரும் ஆலயத்தில் அறிவது எளிது. அண்டத்தில் உள்ளது ஆலயம். ஆலயத்தை நன்கு அறிந்தால் அதுகொண்டு அண்டத்தையும் அறியலாம். பிண்டத்தில் வைத்து அறிய, சிவபூஜையில் அந்தர் யாகம் துணைசெய்யும்.

சிவாலயம் பிண்டமாகிய நம் உடல்போல்வது. கர்ப்பகிருகம் தலை. அர்த்தமண்டபம் கழுத்து. மகாமண்டபம் மார்பு. யாகசாலை நாபி. கோபுரம் பாதம். இவ்வாறு படமும் எழுதிக் காட்டியிருக்கின்றனர். சிவாலயம் உடல். கோபுரம் வாய். நந்தி நாக்கு. கொடிமரம் அண்ணாக்கு. தீபங்கள் ஐம்பொறிகள். கர்ப்பகிருகம் இதயம். சிவலிங்கம் உயிர். அதில் உள்ள சதாசிவம் சிவஞானத்தால் அறியத்தக்கது.

அத்துவாவடிவம் தூலலிங்கம். மந்திரவடிவம் சூக்குமலிங்கம். சிவஞானசொரூபம் காரணலிங்கம்.

சிவாலயத்தில் கோபுரம் தூலலிங்கம். கர்ப்பகிருக விமானம் சூக்குமலிங்கம். சிவலிங்கம் காரணலிங்கம்.

அருவம், அருவுருவம், உருவம் இம் மூன்றும் கடந்த சிவஞானசொரூபம் ஆகிய நான்கும் சிவபெருமானுக்கு உண்டு.

அர்த்தயாம காலத்திலும் உதயத்திலும் கண்ணாடியில் காட்டப்பெறும் சத்தி சிவசோதியின் சாயை அருவம். சிவலிங்கம் அருவுருவம். சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், விநாயகர் முதலிய விக்கிரகங்கள் உருவம். இவற்றால் சிவாலயம் சிவசொரூபம். பள்ளியறையில் தரிசனம் அருவ சிவவழிபாடு. பள்ளியறையில் உதயத்தில் வழிபாடு தோற்றத்தையும் அர்த்தயாமத்தில் வழிபாடு ஒடுக்கத்தையும் உணர்த்தும். இவ்வுண்மை உணராமல் பிதற்றுதல் நரகிற்கே செலுத்தும்.

கொடிமரம் பதி. அதில் ஏற்றப்படும் தர்மரிஷபக்கொடி பசு. அதைக் கட்டும் கயிறு பாசம். கற்பூரதீபம் பதி. தீபம் பசு. தூபம் பாசம்.

இன்னும் பல உள. அவற்றை ஆகமங்களிலும், சைவம் 1920. ஆருவது மலர் (பக்கம். 157-160 ஞானசித்திப்ரசுரம் ஆலயங்களின் அமைவு) பஞ்சாக்கரபுரம் ஸ்ரீமத் சச்சிதாநந்த அடிகள் எழுதியருளிய சிவாலயமும் கும்பாபிடேகமும் முதலிய வற்றிலும் அறிந்துகொள்க.

தத்துவாதீதத்தில், பூஜையாகிய தீட்சையும் விபூதி பெறு தலாகிய திருவருட்பேறும் உற்று, நாள்தோறும் அபரமுத்தியை அடைந்து, பரமுத்தி சாதகனுகிவருவதே கோயில் வழிபாட்டின் முடிவான பயன். அப்பயனே அக்கோயில் தரல்வேண்டும். அதற்குப் பன்னீராண்டிற்கு ஒருமுறையாதல் மகாகும்பாபி டேகம் நிகழ்தல்வேண்டும். இன்றேல், வழிபடுவோர்க்குத் திருவருள்கிடைக்க வழி இல்லை. கும்பாபிடேகத்தின் தத்துவம் பின்னர் எழுதப்பெறும்.

சிதம்பரத்தில் மகாகும்பாபிஷேகம் நடந்து இற்றைக்கு அறுபத்துநான்கு ஆண்டுகளாயின. அதுநடத்தப் பல திங்களாக அதற்கு என அமைந்த ஒரு குழு சிறந்த பல ஏற்பாடுகளைச் செய்துவந்தது. அக் குழுவினர் பெருமையோ கும்பாபிஷேகப் பெருமையொடு விளங்குவதாயிற்று.

யாகசாலை அமைப்பும், தமிழ்மறை வடமொழி வேதாகம பாராயணங்களை நியமித்த மாண்பும், சமயச்சொற்பொழிவுகளை நிகழ்த்திய வகையும், இசையின்பம் உண்டாக்கச்செய்த ஒழுங் கும், வழிபடுவோர்க்கு இடர்ப்பாடில்லாத வழிகளை வகுத்த திறனும், நகரில் துன்பம் ஏற்படாதவாறு எதிரதாக் காத்த ஆற்றலும் அக் குழுவினர்க்குச் சிறப்பில் உரியன. புகை வண்டி நிலயத்தில் செய்திருந்த வசதிகள் அதன் அதிகாரிகளின் உயரிய பண்புகளை உணர்த்தும்.

மக்கள் திரள்திரளாக வெளியூரிலிருந்து வந்து பலநாள் இருந்து வழிபட்டு இன்புற்றனர். ஸ்ரீ நடராசமூர்த்தியாகவே திகழும் ஸ்ரீமந். ஞானமூர்த்தி தீக்ஷிதர் அவர்களைத் தலைமையா கக்கொண்டு செயலாற்றும் தில்லைவாழந்தணர்பலரும், காலத் திற்குத் தக்கவாறு மக்களோடு ஒத்து நடந்தது மிகப் பாராட்டத்

தக்கது. உலகியலுணர்வு மேலும் மேலும் சிறக்கப்பெற்றுப் புகழொடு விளங்குகின்றனர். எங்கும் எவ்வுயிரும் ஆளும் கூத்தனைத்தமக்கே உரியவன் என்று எண்ணுதலும், சொல்லலும், செய்தலும் எவர்க்குஆகும்? புலிக்காலரும் பாம்பின்காலரும் தம்பொருள் என்று பாராட்டியிருப்பரேல், நம் நடராசப்பிரானைப் பார்க்கத்தான் வாய்க்குமோ? அவர்கள் உலகோர் எல்லார்க்கும் அளித்த சிதாநந்தச் செல்வத்தை யாவர்க்கும் வாரிவாரி வழங்கிவருகின்றவர்கள் தில்லைவாழந்தணர்கள்.

அத்தகு பெருமைமிக்க அவர்கள் இம்மகா கும்பாபிடேகத்தில் செய்த நன்மைகளுக்கு ஓர் எல்லையும் உண்டோ? அவர்களுக்கு அக் கூத்தப்பெருமான் திருவருள் என்றும் இன்பம் பெருக்குக என்று வாழ்த்துவதே நாம் செய்யும் கைம்மாறு.

தருமை யாதீனத்தின் தேவார பாராயணக் குழுவினர், ஸ்ரீமத். சுந்தரலிங்கத் தம்பிரான் சுவாமிகளையும், வித்துவான் ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளையும் தலைமையாகக் கொண்டு காலை, மாலைகளில் காசிமடத்து வீதியில் உள்ள திருப்பனந்தாள் கட்டளை மடத்திலிருந்து பல விருதுகளுடன் யாகசாலை யிடத்திற்குச் சென்று, தமிழ் வேதபாராயணம் செய்து மக்களைச் சிவபக்தியில் திளைத்து இன்புறச் செய்த சிவபுண்ணியத்தைக் கொண்டாடாத மக்கள் இல்லை. வழி நெடுகக் கண்டு வணங்கிக் கசிந்துருகியவர்கள் கணக்கிலார். திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் சார்பில் தேவாரப் பண்ணிசைப் பெரும் புலவர்கள் பலர் திருமுறையை வழங்கி அதன் பெருமையை ஒருமுறையாய் விளக்கிய வள்ளல்களாய் விளங்கினார்கள். தருமைக் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் 4—7—55 காலைமுதல் தில்லையிலேயே எழுந்தருளியிருந்து அக் கும்பாபிடேகத்தின் மகத்துவத்தைக் காத்தருளினார்கள். இவ்வுண்மை அந்நகர்ப் பெருமக்களும் குழுவினரும் நன்குணர்வர். அவரினும் தில்லைவாழந்தணர்கள் பெரிதுணர்வர். எல்லாம் திருவருட்செயல்.

மன்னுக தில்லை. வளர்க பத்தர்கள். பொலிக பொன்னின் செய்மண்டபம். விளங்க புவனியெல்லாம். பல்லாண்டு கூறுவோம்; பல்லாண்டு என்னும் பதம் கடந்த திருக்கூத்தப்பிரானுக்கு. என்றும் இன்பம் பெறுக இவ்வையகம்.

**துணை ஆசிரியர்**

563

உ

குருபாதம்

## தருமபுர ஆதீனம்

# ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின்

# *திறப்புரை

இன்று புனிதமான ஒரு நன்னாள். ஏனெனில், இன்று காலையிலிருந்து ஆத்மார்த்த மூர்த்தியான ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் சிறப்பு வழிபாடுகள் நடைபெறச்செய்து, அன்பர்கள் பலரும் உடனிருந்து தரிசித்த நல்ல நாள். அத்துடன் சமீபத்தில் நான் சென்றுவந்த ஒரு பெரிய கேதார யாத்திரையை நினைவுறுத்திய நல்லநாள். அதுமட்டுமன்றி இன்று நம் வட்டாரத்திலே சிறந்த கல்வித் தொண்டு செய்ய இருக்கும் ஒரு கல்லூரியைத் தொடங்கிவைக்கும்படியாக என்னை அழைத்து இங்கே இவ்வளவுபேரும் ஒருங்குகூடிப் பெருமைசெய்ய வந்திருக்கும் நல்லநாள். இந்த நல்லநாள் என் நினைவிலே என்றும் பெறாத பேறு பெற்ற நாளாக நிலைத்திருக்கும். நான் ஒரு சந்நியாசி. திருவருள் துணை ஒன்றையே நாடி நிற்பவன். நான் ஏதோ இவ்வளவு பெரிய ஒரு பொதுத் தொண்டின் தொடக்கத்தைச் செய்துவைத்ததாகக் கொள்ளவேண்டாம். ஸ்ரீ மாயூரநாதர் திருவருள் துணைசெய்ய நான் ஏதோ ஒரு கருவியாகப் பயன் பட்டதாகக் கொள்ளவேண்டும்.

கல்வி வெறும் மொழியறிவு பெருக்குவதாக மட்டும் இருந்தால் அது பயன்தருவதாக அமையாது. நாம் தமிழர்கள். தமிழர்கள் என்றுமே வீண் நினைப்பு, வீண் பொழுதுபோக்கு

---

* தருமபுர ஆதீனம் ௨௫ ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் மாயூரம் அன்பநாதபுரம் வகையரு தருமஸ்தாபனத்தைச் சேர்ந்த கலைக் கல்லூரியை 29—6—55 புதன் கிழமையன்று திறந்துவைத்துத் தங்களுக்கு அளிக்கப்பெற்ற கேதார யாத்திரைப் பாராட்டு விழாவை ஒட்டி ஆற்றிய அருளுரை.

இவைகளில் ஈடுபடுபவர்கள் அல்லர். தமிழன் யாருக்கும் தலைகுனியான். சிறந்து நிற்பவன். ஆகவே, திருக்குறளின் இலட்சிய வாழ்க்கை வாழ விரும்புவான். திருக்குறள், கல்வி யினுலாய பயன், வாலறிவன் நற்றுள் தொழுதல் என்று நமக்கு வலியுறுத்துகிறதல்லவா ? இந்தக் குறளுக்கிலக்கியமாக இக் கல்லூரியின் குறிக்கோள் அமையுமாக! மாணவர்கள் இலட்சிய புருஷர்களாக வெளிவருவார்களாக!

பொதுவாக, நாமெல்லோரும் எத்தனையோ சினிமாக் களைப் பார்த்திருக்கிறோம். அங்கே நாம் என்ன காண்கிறோம்? ஒரு வெள்ளைத் திரை. படம் விட்டவுடன் அந்த நிழற்காட்சி அப்படியே அந்த வெள்ளைத் திரையைக் கப்பிக்கொள்கிறதல் லவா? அதுபோல, நம்முடைய மனத்திரையிலேயும் நல்ல கல்வியானது கப்பிக்கொள்ளவேண்டும். இந்தக் கல்லூரி யிலிருந்து வெளிவரும் மாணவர்களின் வெள்ளை உள்ளத்தில் இதுவரை சொல்லியதுபோல நல்ல கல்வி பதியப்பெற்றுச் சிறந்த குடிமக்களாக வெளிவந்து சேவைசெய்வார்களாக!

முன்னே சொன்னேன் நான் ஒரு சந்நியாசி என்று. சந்நியாசிக்கும் கடமை உண்டு; சட்டத்திட்டமும் உண்டு. சந்நியாசி என்றுலே உழைப்பவன் என்று பொருள். நான் என்னுடைய கடமையைச் சரிவரச் செய்யவேண்டாமா ? ஏதோ இந்த ஊரிலே ஸ்ரீ காசி விசுவநாத சுவாமி கோயிலைக் கட்டிக் கும்பாபிஷேகம் செய்வதில் ஈடுபட்டிருக்கிறேன். நான் செய்யவேண்டிய கடமைகள் எவ்வளவோ உள்ளன. இயன்ற அளவு ஓடி ஓடிப் பணிசெய்வதிலே எனக்கு ஆர்வம் அதிகம்.

திருவாளர். சுந்தரேசம் பிள்ளை அவர்கள் என்னை அணுகிக் கேதார யாத்திரையினுடைய நினைவாக எனக்கொரு பாராட்டு நடத்தவேண்டுமென்று கேட்டார்கள். எனக்கு யாத்திரை பல எப்பொழுதும் செய்யவேண்டும். செய்துகொண்டே இருக்க வேண்டும் என்ற ஆர்வம் அதிகம் உண்டு. அதுவும் என் னுடைய கடமைகளில் ஒன்று. இவ்விதமாக இம்முறை கேதாரம் சென்றிருந்தேன். சிறப்பாக அது நிறைவுற்றது. இதற்கு இங்கே ஒரு பாராட்டு. இந்தப் பாராட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டியவர் ஸ்ரீ காசி மடத்துக் குமரகுருபரரின்

565



வழிவழிவந்த அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் ஆவார்கள். அவர்கள் பலமுறையும் சென்றுவந்த அநுபவத்தினுல் என்னே யும் அதில் ஈடுபடுத்திக் கேதாரநாதருடைய பேரருள் எனக்குங் கிட்டும்படியாகச் செய்துவைத்தார்கள். அவர்களுக்கு இந்தப் பாராட்டுச் செய்திருக்கவேண்டும். இப்படியே பாராட்டுப் பத்திரத்தில் சொல்லிய அத்தனையும் அவர்களேயே சாரும். ஒரு மடம்; அதற்கு வரும் சிறு வருவாயைக் கொண்டு முப்பத்தாறு இலட்சம் ரூபாய் கல்விப்பணி, மொழிப்பணி, கடவுட்பணியாக எத்தனே எத்தனேயோ செய்து வருகிருர்கள். ஆகவே, இந்தப் பாராட்டைத் தந்தி மூலமாகவேனும் அவர் களுக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

கல்லூரித் திறப்பு விழாவுக்குத் தருமபுர ஆதீனத்து ஒரு மகாசந்நிதானத்தை வரவேற்றுத் திறந்துவைக்கும்படியாகக் கேட்டுக்கொண்டு வாழ்த்துரை வழங்கப்பெற்றிருக்கின்றது. அதில் என்ன சிறப்பு? ஒரு தருமஸ்தாபனம் மற்ருெரு பெரிய தருமஸ்தாபனத்தை அழைத்து அதனேக்கொண்டு ஒரு திறப்பு விழா நிகழ்த்தச்செய்தது என்பதிலே பெருமை இருக்கிறது. தருமஸ்தாபனம் என்றதுமே அது வளர்ந்த விதமும், வளர்த்த பெருமக்களின் நினேவுந்தான் நமக்கு வருகிறது. இங்கேயும் தமிழருடைய பண்பாடு நமக்குத் தோன்றும். திருவள்ளுவர் இதனே எவ்விதம் சொல்லுகிருர் பாருங்கள்! அறிவு நிரம்பப் பெற்றவர்களிடம் உள்ள பொருள் ஊரிலே குடிதண்ணீருக் காகப் பயன்படும் ஊருணியை ஒக்கும். எவ்விதம் எடுக்க எடுக்க வற்ருததாக - மக்களுக்குப் பாகுபாடற்ற நிலேயிலே மன நிறைவைக் கொடுப்பதாக - ஒருசேரப் பயன்படக்கூடிய தாக - ஊருணி பயன்படுகிறதோ அவ்விதமே நல்ல கல்வி அறிவுடையவர்கள் பணமும் பயன்படும்.

“ ஊருணி நீர் நிறைந்தற்றே; உலகவாம்
பேரறி வாளன் திரு ”

இது மற்ருெரு பண்பாட்டை நமக்கு நினேவுக்குக் கொண்டு வருகிறது. சோழநாட்டான் - அதிலும் தஞ்சை ஜில்லா வாசி - அதிலும் சிறப்பாக மாயூரத்துப் பெருமகன் என்ன செய்வான்? சோழநாடு சோறுடைத்தல்லவா? சோறு உண்ணும் சோறு

மட்டுமல்ல; முத்திப் பேறும் ஆகும். ஆகவே, இவன் என்ன செய்கிருன்? வந்தவர்களுக்கு விருந்துபண்ணி உபசரித்து அனுப்பிவிட்டு வரப்போவோரை எதிர்பார்த்துநிற்பான், தான் உண்ண. இவனுக்கு வேருரிடத்தில் பெரிய விருந்தொன்று காத்திருக்கிறது. அதுதான் வானவர் வழங்கும் விருந்து. இவனை எதிர்நோக்கி நிற்பர் வரவேற்க.

"செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு."

அன்பநாதபுரம் வகையரு தருமஸ்தாபனத்தைச் சேர்ந்த பெருமக்கள் இயல்பு இப்படி அமைந்திருக்கிறது. பல நல்ல காரியங்களைச் செய்து மீதப்படும் ஒரு சிறு தொகையையும் பெரிய கல்விஸ்தாபனத்துக்கு அளிக்க முன்வந்திருக்கிருர்கள். அதனைத் தொடங்கியும்விட்டார்கள். தொடக்கம் நல்ல தொடக்கம்.

சைவர்களுக்குள்ளே நல்ல ஒற்றுமை வளரவேண்டும். கடவுள் நம்பிக்கை நிலைக்கவேண்டும். இவ்விதம் சொல்வதால் மற்ற மதங்களோடு நமக்கு மாறுபாடு இல்லை. எல்லாம் ஒன்றையே நாடிநிற்கின்றன. மக்கள் அரசியல் எல்லாம் ஒன்று. மக்கள் மதம் இரண்டும் ஒன்று. அரசியலுக்கும் மத இயலுக்கும் மக்கள் பொது. அரசியல் கடவுளியல் இரண்டும் ஒன்று. அரசன் வாழ் இடம் கோயில். கடவுளை வழிபடுமிடம் கோயில். அரசன் இறை எனப்படுவான். கடவுள் இறை எனப்படும். நாட்டு மக்களுடைய நலம் அரசனிடம் தங்குவதால் இறைவன். உலக உயிர்களின் உயிர்நலம் தங்குமிடம் கடவுள். அல்லது இறைவன். ஆகவே, நம்முடைய கொள்கையின்படி அரசியல் வேறல்ல; மத இயல் வேறல்ல. இரண்டும் ஒன்றுக்கொன்று இன்றியமையாது வேண்டப்படுபவை. இது உலக மொத்தத்திலே ஒப்புக்கொள்ளப்பட்ட செய்தி.

நான் காசி சென்றிருந்தபொழுது **சாரநாத்** என்னும் புத்த மதஸ்தலத்திற்குச் சென்றிருந்தேன். அங்கே ஒரு பௌத்த மடம் இருக்கிறது. புத்தர் ஆலயமும் இருக்கிறது. அதற்கு

ஜப்பான் தேசத்திலிருந்து பண உதவி கிடைக்கிறது. இவ்விதமாக நம் நாட்டிலுள்ள பல பிற மதஸ்தாபனங்களுக்கும் வெளிதேசங்களிலிருந்து உதவி கிடைக்கிறதென்பது நமக்குத் தெரியும். ஆகவே, அங்கங்கும் உள்ள மக்கள் அவரவர் மதம் செழிக்க உதவிவருகிறார்கள். அதற்கு அரசியல் உதவிசெய்கிறது. இந்நிலை நமக்கும் கிட்டவேண்டும்.

காணப்படும் பொருள் அத்தனையும் அழியும். காந்தி என்ற பெரியார் நம்மிடையே வாழ்ந்தார். பாடுபட்டுச் சுதந்திரத்தை வாங்கித் தந்தார். காந்தீயத் தத்துவம் என்னும் ஒரு பேருண்மையையும் உலகிலே வளர்த்துவிட்டார். அவரும் மறைந்தார். அவர் வழிவந்த தொண்டர்கள் இப்போது நம்மையாள்கின்றனர். இங்கே இப்பொழுது பதவிமோகம் வலுத்துவிட்டது. பதவிமோகம், பணச்செருக்கு இரண்டுமே நம்முடைய நல்ல சிந்தையைக் கெடுத்துவிடும்.

காந்தி வெறும் அரசியல் கொள்கையை வகுத்தாரில்லை. அங்கே கடவுட் கொள்கையை முன்வைத்து அரசியலைப் பின் வைத்தார். தமிழன் வையத்திலே வாழ்வாங்கு வாழத் தெரிந்தவன். அப்படி வாழ்பவர்களைத் தெய்வத்துள் வைக்கப்படும் என்ற நீதியையும் அறிந்தவன். தலைநிமிர்ந்தவன் என்று சொன்னேன். அது இங்கேயும் இருக்கிறது. எதுசெய்தாலும் அங்கே திருவருள் துணை இருப்பதைக் கண்டான். சேரன் இமயம் சென்றான். கல்லெடுத்தான். எதைச் செய்ய ? தெய்வச் சிலையைச் செய்ய. அந்தத் தெய்வம் காலம் கடந்தது. நான் இவ்விதமே பேசிக்கொண்டுபோனால் காலத்தைக் கடந்துவிடுவேன். நான் காலத்துக்குள் கட்டுப்பட்டவன். பரம்பொருள் ஒன்றே எல்லையற்ற காலத்துக்கு அப்பாற்பட்டது. "முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருள்". கடவுளைக் காலாதீதன் என்று பெரியோர் சொல்லுவர். அந்தக் கடவுள் ஒன்றே நமக்கு வழிபடும்பொருள்.

ஆண்டவனை வழிபட்டால்தான் உய்யலாம். நினைத்தது கிடைக்கும். வேண்டிய வேண்டியாங்குப் பெறலாம். இம்மைக்கு மட்டுமல்ல. அம்மைக்கும் நல்லகதி ஐயனே! அரனே! என்று அரற்றினால்தான் கிடைக்கும். இப்பிறப்பிலேயே அம்மை

நலம் பெறுமாறு அருளுபவன் பரமன் ஒருவனே. மணிவாசகப் பெருமான் திருவாசகத்தில் சொல்லியிருக்கிறார்கள், கற்றுவல்ல அறிஞர்களல்லவா ? எங்கே அந்தப் பாடலைச் சிந்தனைக்குக் கொண்டுவாருங்கள்:

> "அம்மை எனக்கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே!"

இம்மையிலேயே, காட்டாதன எல்லாம் காட்டிச் சிவம் காட்டித் தாட்டாமரை காட்டி மணிவாசகப் பெருமானுக்கு அம்மை நலம் அருளியிருக்கிறான் ஆண்டவன். இது தோத்திரம்.

சாத்திரத்திலே இந்தக் கருத்தைப் பார்க்கலாம். சிவஞான சித்தியார் பதினொராம்சூத்திரத்திலே, "இந்நிலைமை அந்நிலைமை அடைந்த முறையாலே". எவ்வளவு தெளிவான விளக்கம்! பாருங்கள். இதேகருத்தைச் சுந்தரர்பெருமான் திருப்புகலூரிலே தெளிவாகச் சொல்கிறார்கள்! புலவர்களுக்கெல்லாம் ஒரு அறிவுரை. "புலவர்களே! பொய்ம்மையாளர்களைப் பாடா தீர்கள்! அவர்கள் தம்மையே புகழ்ந்து பாடினாலும் பொருள் தாராத இனத்தார்கள். திருப்புகலூரிலே இருக்கும் அப்பனைப் பாடுங்கள். இம்மைக்கு உணவு கிடைக்கும்; உடை கிடைக்கும். அம்மைக்கு ஒரு ஆட்சி கிடைக்கும். என்ன ஆட்சி ? ஓட்டுவாங்கி மந்திரியாகி அரசியலில் இருக்கும் ஜனநாயக ஆட்சியா? இல்லை! சிவலோக ஆட்சி! அதை ஆளலாம். சந்தேகமில்லை என்கிறார்களல்லவா சுந்தரர் பெருமான்! இம்மைக்கும் அம்மைக்கும் பயன்கொடுக்கும் பரமனைப் பணிந்தால்தான் உய்யலாம். உய்வதுமட்டுமல்ல; உலகத்தை ஆளவும் வைப்பர் என்கின்றார்கள் திருநாவுக்கரசு சுவாமிகள். எங்கே ? திருமாற்பேறு தேவாரத்திலே.

> "ஐயனே அரனே என்று அரற்றினல்
> உய்யலாம் உலகத்தவர் பேணுவர்
> செய்ய பாதங்கள் இரண்டும் நினையவே
> வைய மாளவும் வைப்பர்மாற் பேறரே"

அப்படியானால் ஆண்டவனை எவ்வாறு வணங்குவது? வழி படுவது? சிந்திக்கவேண்டுமல்லவா? எப்படிச் சிந்திப்பது? 'சிவ சிவ' என்று சொல்லித் திருநீறணிந்து சிந்திக்கவேண்டும்.

சிவசிவ என்றுசொல்வார்கள் நல்வினையுள்ளவர்கள்; பாருங்கள்! தீவினை உள்ளவர்கள், தீயசிந்தனை உடையவர்கள் சிவ சிவ என்று சொல்லாமல் செத்தொழிவார்கள். சிவ சிவ என்பதால் மனிதன் தேவனுகலாம். ஆம்! வாழத்தக்க முறைப்படி வாழ்ந்தால் மனிதன் தேவனுவான் என்று திருவள்ளுவரும் சொல்லவில்லையா? தீய தீர எண்ணுவார்கள் தேவராவர் என்று சம்பந்தப் பெருமானும் சொல்லவில்லையா? அதுமட்டுமில்லை, சிவசிந்தனையால் சிவகதியும் பெறலாம் என்று சொல்கிருர்கள் திருமூலர் பெருமான்! சிவ சிவ தாரக மந்திரத்தை இப்போது தமிழ்நாடெங்கும் பார்க்கிருேமல்லவா? இது காசி மடத்தின் சிவத்தொண்டு.

> "சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
> சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
> சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
> சிவசிவ என்றிடச் சிவகதி தானே."

ஔவை தமிழ்நாட்டின் ஞானத்தாய். ஒரு பெரிய தத்துவ வடிவமே ஔவைத்தாய். ஒற்றுமையைத் தேசத்தில் எவ்வாறெல்லாம் வளர்த்தார்கள் என்பதை எல்லாரும் அறிவார்கள் அல்லவா? அந்தப் பெருமாட்டி, ஒரு உபாயம் சொல்லிக் கொடுக்கிருர்கள். என்ன உபாயம் அது? எதற்கு அந்த உபாயம்? அபாயம் சூழ்ந்த உலகத்தில் அது நீங்க ஒரு உபாயம். 'சிவாய நம' என்று சொல்லுங்கள்; அதுவே அபாயம் போக்கும் என்கிறது பாட்டியின் மூதுரை.

> "சிவாயநம என்று சிந்தித் திருப்போர்க்கு
> அபாயம் ஒருநாளும் இல்லை"

இருவினைப்பாசம் மலக்கல் ஆர்த்தலின், வருபவக் கடல் வீழ் மாக்கள் ஏறிட, அருளும் அஞ்செழுத்து என்று சேக்கிழார் பெருமான் சிந்தையினிக்கப் பாடுகின்ருர்கள். விண்ணுற அடுக்கிய வினையெனும் வெவ்வழலை நீருக்குவது பஞ்சாட்சரம் என்று நெஞ்சாரப் பாடுகிருர்கள் செஞ்சொல் நாவரசுப் பெருமான். அந்திசெய் மந்திரம் அஞ்செழுத்தே என அறுதியிட்டு

இன்னும் பேசுகிறுர்கள் அப்பர்பெருமான். நானேயோ தவம் செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன் என்று இறுமாந்து பேசுகிறுர்கள் மணிவாசகப்பெருமான். மற்ருென்று, பஞ்சாட் சரத்தைச் சொல்லியே திருவாசகத்தை ஆரம்பிக்கின்ருர்கள். சொல்வதுமட்டுமல்ல, வாழ்க என்று வாழ்த்தியும் தொடங்கு கிருர்கள்.

வாழ்க என்று சொன்னுல் அதிலே உயிர்த்தன்மை இருக் கிறது. வீழ்க என்று சொன்னுலோ அதிலே இறப்புத் தன்மை இருக்கிறது. நீங்கள் உடல்நூல் அறிந்தவர்கள். பாருங்கள்! வீழ்க என்று சொல்லும்போது இரத்தம் கொதிக்கிறது. சூடேறு கிறது. அதனுல் உடம்புக்கே கெடுதி என்று சொல்கிருர்கள். ஆனுல் வாழ்க என்று சொன்னுலோ அதிலே குழைவு இருக் கிறது; வாழவைக்கும் எண்ணம் இருக்கிறது; அமைதி இருக் கிறது; பண்பாடு இருக்கிறது. எனவே நல்லனவற்றை எப்போதும் வாழ்க! வாழ்க! என்று கூறிக்கொண்டே இருங்கள்; அப்போதுதான் நாம் வாழலாம். “வாழ்த்துவதும் வானேர்கள் தாம் வாழ்வான்” என்று திருவாசகத்திலே பெருமான் சொல்லவில்லையா?

வாழவேண்டும். எது வாழவேண்டும்? ஆனினங்கள் வாழவேண்டும் என்கிறது ஞானக்குழந்தை. அந்தணர்கள் வாழவேண்டும் என்கிறது அடுத்து. அந்தணர்கள் யார்? அறவோர். மற்ற உயிர்களுக்குக் கருணை செய்யும் மனப்பாங் கொடு கூடிய மாதவர்கள் அல்லவா? திருக்குறளில் தேர்ந்த உங்களுக்கா சொல்லிக்காட்ட வேண்டும்!

> “அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
> செந்தண்மை பூண் டொழுகலான்.”

மழை விழவேண்டும். மழைமட்டும் போதுமா? மாநிலங்காவல் மாண்போடு நடக்கவேண்டாமா? வேந்தனும் ஓங்கவேண்டும். கெட்டன எல்லாம் ஆழ்ந்துபோகவேண்டும். எங்கும் சிவ நாமமே முழங்கவேண்டும். உலகம் எல்லாம் துயரம் தீர வேண்டும் என்கிறது சிவஞானம். பாருங்கள்! தமிழ்நாடு மட்டும் வாழ்க என்று சொல்லவில்லை. தென்னுடுமட்டும்

என்று சொல்லவில்லை. இந்தியா என்று கூறவில்லை. அல்லாமல் ஆசியாக்கண்டம் மட்டும் என்று சொல்லவில்லை. உலகம் முழுதும் வாழவேண்டும். உலகம் முழுதும் துன்பம் ஒழிய வேண்டும். ஆம்! இதுதான் சைவத்தின் சமரசம். பரந்த மனப்பாங்கு.

> "வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
> வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
> ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
> சூழ்க வையகமும் துயர் தீர்கவே."

"வான்முகில் வழாது பெய்க" என்று வாழ்த்துக்கூறுகிற நம் சைவ சமயம் குறைவிலாது உயிர்கள் வாழ்க என்றல்லவா சொல்கிறது! உயிர்கள் எல்லாம் வாழவேண்டும். உயிர்த் திணையும் உயிரல்திணையும் எல்லாம் வாழ நினைப்பது எத்துணை விரிவுள்ளம்? இங்கே நாடு மொழி பேதங்களுக்கு இடமில்லை.

துவேஷம் பொல்லாதது. அதிலும் நாடு அடிப்படையான துவேஷமனம், மொழி அடிப்படையான பாகுபாடு இவை கூடவே கூடாது. அவை மனத்தைக் கெடுப்பவை. அறிவைக் கெடுப்பவை. நம் நாட்டிலே இந்த துவேஷங்களாலல்லவா பெரிதும் கொடுமை ஏற்பட்டுள்ளது! இவை ஒழியவேண்டும். உண்மையான உலக சகோதர சகோதரித்துவம், ஆத்மீக ஒற்றுமை, பாரமார்த்திக உழைப்பு இவை இன்றியமையாது வேண்டும். அப்படியிருந்தால்தான் தமிழன் என்ற பெருமை நிலைக்கும். அதற்கேற்ற பணிகளையெல்லாம் செய்ய தமிழர்கள் இன்றே முற்படவேண்டும். நாளை நாளை எனல் கூடாது.

இந்த ஆக்கை இருக்கிறதே இது நிலை இல்லாதது. தூங்குவதுபோலச் செத்துப் போகும் மனிதன் தூங்கி விழிப்பது போலப் பிறக்கிறான். இப்படிப் பிறப்பும் இறப்பும் மாறிமாறி மனிதனைத் தாக்குகின்றன. இந்த உலகத்தின் பெருமை என்ன தெரியுமா? பணப்பெருமையோ, படைப்பெருமையோ, இனப்பெருமையோ, வேறு எப்பெருமையோ அல்ல. பின் என்ன பெருமை? 'நேற்று இருந்த ஒரு மனிதன் இன்று இல்லை' என்ற பெருமைதான் அந்தப்பெருமை என்கிறார் திருவள்ளுவர். எங்கே அந்தக் குறளைக் கொஞ்சம் நினைவுக்குக் கொண்டுவாருங்கள்!

" நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் உலகம்."

இந்த நிலையில்லாத உலகத்திலே நாம் என்னதான் செய்ய வேண்டும்? காலையிலே எழுந்திருத்தல்வேண்டும்; பெரும்புலர் காலையிலே, களித்துக் கலந்ததோர் காதற்கசிவொடு காவிரி வாய்க் குளிக்கவேண்டும். பார்த்தீர்களா? மாயூரம் நகரத்துப் பெருமக்களுக்கு அந்த வாய்ப்பு நன்ருக இருக்கிறது. காவிரித் தாயாரின் கருணைக் கரத்திலே தவழும் குழந்தைதானே மாயூரம்! நாவினுல் சிவநாமத்தைச் செபிக்கவேண்டும். இப்படிச் செய்யவேண்டுமே ஒழிய இந்த உடம்பை வளர்க்கவே காலமெல்லாம் செலவழித்துக் கடைசியில் காக்கைக்கே இரையாகிச் செத்துப்போகின்ருர்களே இந்த உலகத்து மக்கள் என்று இரங்குகின்ருர்கள் திருநாவுக்கரசுப்பெருமான்!

" பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக்கே இரைதேடி அலமந்து
காக்கைக்கே இரையாகிக் கழிவரே."

அவர்கள் ஆக்கைக்கு இரைதேடி அங்குமிங்கும் அலைகிருர்கள். பின்பு காக்கைக்கு இரையாகிருர்கள். எவ்வளவு துணிவான உண்மை! இதை உணர்ந்தாவது நல்ல செயலைச் செய்ய நாம் முற்படவேண்டாமா? முற்படுவதுதானே அறிவுடைமைக்கு அழகு!

நல்ல தண்ணீர். அதில் தோன்றும் குமிழிகளைப்பாருங்கள்! தோன்றி மறைந்துவிடுகின்றன. அதில் சிறு காற்ருல் வீசும் சிறு அலைகள்! அந்த நீரிலே எழுதுகிற எழுத்து இருக்கிறதே; அது எழுதும்போதே மறைந்துவிடுகிறது. இவற்றை இளமைக்கும், செல்வத்துக்கும், உடம்புக்கும் உவமையாகக் குமர குருபரர் சொல்கிருர். ஆம்! இப்படித்தானே இந்த வாழ்க்கை! வேறு என்ன இருக்கிறது சொல்ல? 'நீரிற் குமிழி இளமை' என்று தொடங்கும் நீதிநெறியின் விளக்கமே நிலவுலக வாழ்வெல்லாம்.

ஆக்கையின் நிலையாமையைப் பெரியவர்கள் சொல்வ தெல்லாம் எதற்காக? நம்மை அச்சுறுத்துவதற்காகவா? இல்லை இல்லை. வாழ்நாளை வீணுளாக்கி வாளா பொழுது கழிக்கும் மனித சமுதாயத்தின் போக்கைத் தடுத்தி நிறுத்தி, 'மனிதனே! நீ உன் குறிக்கோளை மறந்து எங்கோ போகின்ருயே! நீ தங்கி யுள்ள உடல் 'புன்புலால் யாக்கை' அல்லவா? அதனைப் 'பொன்னெடுங் கோயிலா'க்குவது பொன்ஞர் மேனியனின் திருவருள் வெள்ளமல்லவா? நிலையில்லா யாக்கையை ஓம்பி ஓம்பி அழியாதே' என்று சொல்லுகின்ற திருவுளக் குறிப்புத் தான் ஆக்கை நிலையாமை பேசும் கருத்தில் இருக்கின்றது. இவ்வாறு மனிதர்களில் பொழுது கழிக்கின்ருர்கள் சிலர்; சிலர் புல்லறிவாண்மை கைவிட்டுப் புண்ணியவசத்தால் ஆண்டவ னைத் தொழுகிருர்கள்; மலர்தூவித் துதிக்கின்ருர்கள்; நின்று அழுகின்ருர்கள்; காதல்வசப்பட்டு ஐயனே! அரனே! என்று அரற்றுகிருர்கள். இவர்களையெல்லாம் இறைவன் நோக்கு கிருராம். நோக்குவதுமட்டுமல்ல, பேரேடு ஒன்று வைத்து அதில் புண்ணிய வசத்தால் புலம்புறும் மாக்களையும், பக்குவ மின்மையால் வீண் பொழுது போக்கும் மாக்களையும் குறித்து வைத்துக் கொள்கிருராம்; திருநாவுக்கரசுப் பெருமான் தேவா ரத்தாற் பாடுகிருர்கள்;

> "தொழுதுதூமலர் தூவித் துதித்து நின்று
> அழுது காமுற்று அரற்றுகின் ருரையும்
> பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
> எழுதும் கீழ்க்கணக்கு இன்னம்பர் ஈசனே."

ஜனத்தொகையைக் கணக்கெடுக்கும் ஜனக்கணிதம் (Census) முறையை உலகியலிற் காணுகிருேம் நாம். இங்கே சமய இயலிலும் அந்த முறை உண்டு. எச்சரிக்கையாயிருந்து இறை வனை ஏத்தவேண்டும் என்று குறிக்கிறது பெருமான் திருவுள்ளம்.

அவ்வாறு தொழுது துதிக்கிற மனிதர்களுக்கு ஆண்டவன் அருள் கிட்டுமோ கிட்டாதோ என்று சிலர் எண்ணலாம். ஆண்டவன் அருள் அவர்களுக்கு நிச்சயமாக உண்டு என்று தான் கூறவேண்டும். எங்கே? எந்ததேசத்திலே? மனித ராகவோ - அஃறிணைப் பொருளாகவோ பிறக்கநேரிட்டாலும்,

வழிபட்டால் அவர்களுக்கு இங்கே இங்கே என்று முந்திக் கொண்டு அருள்செய்வானும் ஆண்டவன். எவ்வளவு அருமை யாகத் திருமுறை சொல்கிறது !

"எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும்
இங்கே என்று அருள் செய்வான்."

இயேசுநாதர் இதே கருத்தையே தம் மலைப் பிரசங்கத்தில் சொல்லியிருக்கிருர் பாருங்கள்; இந்நேரம் உங்கள் நினைவுக் குக்கூட வந்திருக்குமே !

"தட்டுங்கள் திறக்கப்படும்
கேளுங்கள் கொடுக்கப்படும்"

எவ்வளவு அருமையான வாசகம் இது! நாம் ஒரு அடி பெயர்த்து வைத்தால் ஆண்டவன் நம்மையணுகி ஓடோடி வருவான் என்கிறது ஒரு ஆங்கிலப் பழமொழி. ஆண்டவன் நிச்சயமாக அருள்வான் என்ற நம்பிக்கையோடு அழுது காமுற்று அரற்ற வேண்டும். நிச்சயம் பலன் உண்டு.

ஆண்டவனிடத்திலே செய்யும் அன்புதான் சிறந்த அன்பு. மற்றபடி மனைவியிடத்திலே, மக்களிடத்திலே, சுற்றத்தினிடத் திலே வைக்கிற அன்பெல்லாம் அதற்கு அடுத்தபடிதான். ஆண்டவன் அன்புக்குக் கட்டுப்படுபவன். பக்தி வலையில் அவனைப் பிடித்துவிடலாம்.

"பக்தி வலையிற் படுவோன் காண்க"

மாணிக்கவாசகப்பெருமான் தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். ஆண்டவனே அப்படி என்றுல் நாம் எம்மாத்திரம்? மாயூரத்து அன்பர்கள் எல்லாருடைய அன்பும் சேர்ந்து வலையாக என்னைப் பிணித்துவிட்டது. அந்த அன்பு வலைக்கு முன் நான் எங்கே? 'அன்பெனும் வலையில் அகப்படும் அரசு' தானே! வலையால் பிணித்துவிட்டார்கள்; பாராட்டும் நிகழ்த்தியே விட்டார்கள்.

திருவாளர். சுந்தரேசம் பிள்ளை அவர்கள் வந்து என்னிடம் விண்ணப்பித்துக்கொண்டபோது, ‘ எனக்குப் பாராட்டு நடத்துவதுபற்றி ஓட்டுவிட்டுப் பின் தீர்மானம் செய்வோம் ’ என்று வேடிக்கையாகச் சொன்னேன். அப்படியென்றால் ‘ குருமகா சந்நிதானத்தில் இந்தத் தேர்தலில் வெல்ல முடியாது; தோற்றே தீரும். ஏனென்றால், மாயூரம் நகரத்து அன்பர் கூட்டம் எல்லாம் என் பக்கந்தானே ’ என்றார்கள். நானும் அன்பை வியந்து அரைகுறையாக ஒப்புக்கொண்டேன். எல்லாம் அன்பின் விளைவுதான்.

பெரியபுராணத்திலே வருகின்ற திருத்தொண்டர்கள் எல்லாம் அன்பின் உருவங்கள்தாம். அவர்கள் பேரன்பை வெளிப்படுத்தவே ஆண்டவன் செய்த சோதனைகளை நாம் அங்கங்குக் காணுகிறோம். சிவபூசையிலே சிறந்ததாகச் சேரன் மரபு. அதிலும் சேரமான்பெருமாள் பற்றிச் சேக்கிழார் சொல்வதைச் சிந்திப்போமானால், அந்த அன்பின் திறத்தை நன்றாக உணரலாம். செல்வம், வாழ்வு, உற்றார், உறவினர் எல்லாம் ‘ சிற்றம் பலத்து ஆடும் கழலே ’ எனத் தெளிந்தவர் அப்பெருமான். இந்த உலகியல், பொய்யாகவந்த அரசியல் இரண்டும் உறுதியானவை அல்ல. அழியுந்தரத்தவை என்பதிலே அப்பெருமானார்க்குத் துணிவு இருந்ததாம். பாருங்கள்! சேக்கிழார் செம்மொழியை.

“ உலகியலும் அரசியலும்
உறுதியல்ல என உணர்வார் ”

உண்மைதானே ! உலகியலிலே மனைவி, மக்கள், உற்றார்; அரசியலிலே அமைச்சர், ஏவலர், சிற்றரசு எல்லாரும் நாடகப் பாத்திரங்கள்போலத்தானே ! இவர் எல்லாரினும் இனிமையும் மேன்மையும் உடையவன் இறைவன் ஒருவனே என்பதிலே என்ன ஐயம் இருக்கிறது? அதிலும் திருநாவுக்கரசுப்பெருமான் தெளிவாகச் சொல்லிவைத்திருந்த பிறகும் ஐயுறவுக்கு யாதும் இடம் உண்டோ?

—

பல் முளைக்காத குழந்தை. கனியைக் கண்டால் தாவுகிறது. கையும் காலும் ஆட்டிப் பழத்தைத் தொடப் பரபரக்

கிறது. பழத்தின் வண்ணமும் அழகும் அப்படிக் குழந்தையின் மனத்தை இழுக்கின்றன. கொஞ்சம் பல்முளைத்த குழந்தைக்கு வெல்லக்கட்டியைக் கண்டால் வெகு ஆனந்தம். கட்டி வெல்லத்தைப் புட்டு உண்ண ஓடி ஓடி அலைகிறது அந்தப் பருவத்திலே. குழந்தை வளர்ந்து வாலிபனுகிருன். நல்ல காளைப் பருவம். அப்போது வாலிபன் விரும்புவது கனியும் அல்ல; கரும்புக்கட்டியுமல்ல. கனிமொழி பேசும் காரிகையர் களையே விரும்புகிருன். இன்னும் கொஞ்சகாலம் போனதும், வாலிபனுக்கு அந்த வனப்புமிக்க மங்கையோடு இருப்பதும் அலுத்துப்போகிறதல்லவா? நாட்டின் அரசியலிலே பங்கு கொண்டு ஆட்சி நடத்தவேண்டுமென்று ஆசை பிடித்துக் கொள்கிறது. பதவி மோகம் அவனைப் பிடித்துக்கொண்டு விடுகிறது. இந்தப் பதவி மோகம் மிகமிகப் பொல்லாதது. இந்திரபதவி, திருமால்பதவி, பிரமபதவி முதலியவற்றை நான் கெட்டு என் குடியும் கெட்டாலும் கொள்ளமாட்டேன் என்று மாணிக்கவாசகப் பெருமான் கூறவில்லையா?

"கொள்ளேன் புரந்தரன், மால், அயன் வாழ்வு குடிகெடினும்"

அப்படிப்பட்ட பதவி வந்துவிட்டால் மனம் திரியும். எண்ணம் மாறுபடும். சுயநலம் வலுக்கும். பிறர்நலம் மறையும் அல்லவா? இவை எல்லாம் உலகியலும் அரசியலும்தானே! படிப்படியாக இனிமைதரும் பொருள்களை அடுக்கிவருகின்ற திருநாவுக்கரசுப் பெருமான் இவை எல்லாவற்றையும்விட இனியவன் திரு விடைமருதூரிலே எழுந்தருளியிருக்கும் மகாலிங்கப்பெருமான் ஒருவனே என்று மன உறுதியோடு மனிதர்களுக்குச் சொல்லு கிருர்களே! அதை நாம் சிந்திக்கவேண்டாமா? கனியைவிட இனியவன்; கட்டிக்கரும்பைவிட இனியவன்; அழகிய பெண் களைவிட இனியவன்; அரசபோகத்திலும் இனிய சிவபோகத்தை அருளும் இனியவன் என்று அப்பர்பெருமான் பாடுகிற அழகை யும், உறுதியையும் பார்த்தீர்களா?

"கனியினும் கட்டிபட்ட கரும்பினும்
பனிமலர்க்குழற் பாவைநல் லாரினும்
தனிமுடிகவித் தாளும் அரசினும்
இனியன் தன்னடைந்தார்க்கு இடைமருதனே"

அந்த உறுதி நமக்கும் வரவேண்டும். இந்த உலகியலும் அரசியலும் உறுதியல்ல என்ற உறுதி சேரமான் பெருமாளுக்கு இருந்தது என்கிருர்கள் சேக்கிழார் சுவாமிகள்.

இன்ஞென்று, இந்தப் பிறவி இருக்கிறதே, மனிதப்பிறவி. இது மிகமிக அரிதாகக் கிடைத்த பிறவி. மனிதப்பிறவி அடைவதற்கு முன்னேசெய்யும் சீவயாத்திரையைத் திருவாசகத்திலே காணலாம். புல்லாகிப், பூடாய்ப், புழுவாய், மரமாகிக், கல்லாய்ப் பின்பு மனிதப் பிறவி அடைந்திருக்கிருேம். இப் பிறவி கிடைத்தது நம் முற்றவப்பயனேயாகும். ஆனல் சங்க காலப் புலவன் ஒருவன் சொன்ன கருத்து நம் சிந்தையைத் தூண்டும் அல்லவா?

"பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் பெறுவது பெரும்பே ரின்பம்"

பிறப்பை வெறுத்துப் பேசுகிறது அந்தப் புலவன் உள்ளம். ஆனல் வந்த பிறப்பை வரவேற்றுப் பேசுகிருர்கள் நம் பெரியோர்கள். திருநாவுக்கரசுப் பெருமான் தெரிவிக்கின்ருர்கள் அல்லவா? தில்லைத்தரிசனம்; குனித்தபுருவம், கொவ்வைச் செவ்வாய், பனித்த சடை, பவளமேனி, பால்போலும் வெண்ணீறு, எடுத்த பொற்பாதம். இவற்றையெல்லாம் காணப் பெற்ருல் மனித்தப் பிறவி இந்த மாநிலத்து வேண்டுவதுதான் என்று துணிகிருர்கள் பெருமான்.

"மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்தமாநிலத்தே"

இது தோத்திரம். சாத்திரத்திலேயும் இதேகருத்து. சிவஞான சித்தியாரிலே வரும் செம்மொழி. இம்மானுடப்பிறவி வகுத்தது.........அரன் பணிக்காகத்தான் என்று அறிவுரை கூறும் ஒரு அழகு விருத்தம்.

"மானுடப் பிறவிதானும் வகுத்தது......
அரன் பணிக்காக அன்றே"

ஆகவே, அரிதாய மனிதப் பிறவியை அடைந்த நாம் அருமை உணர்ந்து ஆண்டவனிடத்து அன்பு செய்து உய்யவேண்டும் அல்லவா? ஆண்டவனிடத்து அன்பில்லாத வாழ்வு வாழ் வாகாது. ஆண்டவனை நினைக்காத உள்ளம் உள்ளமாகாது. ஆண்டவனைத் தியானிக்காத எண்ணம் எண்ணமாகாது. 'நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்' என்கிறது திருமுறை. இடைவிடாது நினைத்தலே நம்மைப் பிறவிக் கடலினின்று கரையேற்றும். அந்த நினைப்பின் விரிவே பஞ்சாட்சர செபம். 'அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக் கின்றேனை' என்ற மாணிக்கவாசகப் பெருமான் திருவாக்கு நம் மனத்தகத்தே நிலைபெற வேண்டும்.

உலகியலை நோக்கும்போது நாகரிகத்தைப்பற்றிக் கூருமல் இருக்கமுடியவில்லை. நாகரிகம் நாகரிகம் என்று நாம் அலை கிரோம். அழகான மூக்குக்கண்ணுடி, மினுக்கும் மேற்பூச்சு, மெல்லிய ஆடை, சுண்ணம், வண்ணம், அழகான முடி அலங்காரம் இவையே நாகரிகம் என்று நம்புகிறது மக்கள் சமுதாயம். ஆனுல் உண்மையான நாகரிகம் எது என்று உணர்ந்துகொள்ள வேண்டாமா? உண்மையான நாகரிகந் தான் எது? அகநாகரிகம்தான் நாகரிகம். ஆம்! தமிழர்களின் நீதிநூலாகிய திருக்குறள் பேசுவதைச் செவிகொடுத்துக் கேட் பதில்லைநாம். அது நம்குறை. திருக்குறள் சொல்லுகிறது, 'நஞ்சு கொடுத்தாலும் பெற்று உண்டு அமைவர் பெரியோர்' என்று. அதுதான் நாகரிகம் விரும்புவோர் நடைமுறை என்று வள்ளுவர் பேசுகிருர். தன்னைச் சார்ந்தவர் நஞ்சு கொடுத்தாலும் மறுக்காது திருவருளையே நம்பிப் பருகுபவரிடத்திலேதான் நாகரிகம் இருக்கிறதென்று சொன்னுல், உண்மையான நாக ரிகம் இதுவென்று உணரலாமல்லவா? குறளைப்பாருங்கள்!

> ''பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க
> நாகரிகம் வேண்டுபவர்''

இந்தக்கல்லூரியிலே பயில இருக்கிற மாணவர்கள் இந்தப் பண்பாடுகள் நிறைந்தவர்களாக இருக்கவேண்டும். நல்ல கடவுள் பக்தி, தூய்மையான வாழ்வு, அமைதியான உள்ளம், அகநாகரிகம், திருவருள் உறைப்பு இத்தனையும் பெற்ற நல்ல

தமிழர்களாக விளங்கவேண்டும் செம்மையான வாழ்க்கை நடத்தும் செந்தமிழ் வீரர்களாகச் சிறக்க வேண்டும்.

ஏன் நாம் பிறரைப்பார்த்து அவரைப்போல இருக்க வேண்டுமென்று எண்ணவேண்டும்? ஆசைப்படவேண்டும்? நாம் ஏன் அதனிலும் சிறந்து நிற்கக் கூடாது? இக் கல்லூரி ஒரு ஆக்ஸ்போர்டாக விளங்கவேண்டும் என்று சிலர் சொன்னார்கள். கேம்பிரிட்ஜாகச் சுடர்விடவேண்டும் என்று சிலர் கூறினார்கள். ஆனால் என்னுடைய இதயம் எண்ணுவதேவேறு. இது உலகத்துக்கே ஒரு தனிச்சிறப்புடைய கல்லூரியாக விளங்கவேண்டும் என்பதே என் ஆசி. ஆம்! ஒன்றை எல்லை காட்டி அந்த அளவிலே அமையவேண்டும் என்று நான் வாழ்த்தவில்லை. உலகத்துக்கே வழிகாட்டியாகக் கல்வித்துறையில் ஒரு சான்றுக் கூடமாக இது திகழவேண்டும்; அதற்குச் செந்தமிழ்ச்சொக்கர் திருவருள் துணைசெய்வாராக!

இந்தக்கல்லூரியிலே தமிழுக்குரிய சிறப்பு வகுப்புக்களும் தொடங்குகின்றன. தமிழைக் கூடியுண்ணுவதிலும், உண்ணச் செய்வதிலும் ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானுக்குத் திருவுள்ளம் மிகுதி.

"தமரநீர்ப் புவனம் முழுதொருங்கீன்றாள்
தடாதகாதேவி என்றொருபேர்
தரிக்க வந்ததுவும் தனிமுதலொருநீ
சவுந்தர மாறனானதுவும்
குமரவேள் வழுதி உக்கிரன்எனப்பேர்
கொண்டதும் தண்டமிழ்மதுரம்
கூட்டுண எழுந்த வேட்கையால் எனில்இக்
கொழிதமிழ்ப் பெருமை யாரறிவார்?"

என்று பாடுகிறார்கள் குமரகுருபர சுவாமிகள். தமிழ் இனிமையைக் கூட்டாக உண்பதற்கு ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் சவுந்தரமாறனாக மதுரையில் அவதரித்து ஆட்சிபுரிந்ததாகச் சுவாமிகள் சொல்கின்றார்கள். அவ்வாறு தமிழ் ஆராய்ச்சியிலே-கலை வளர்ச்சியிலே திருவுளம் மிகுந்த ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானின் திருவருளால் இக் கலைக் கல்லூரி திகழ்ந்தோங்க வேண்டுமென்று சிந்திக்கின்றோம்.

580

# கூடலையாற்றூரில் வழிபாடு

27-6-'55 திங்கட்கிழமை கூடலையாற்றூர்த் திருக் கோயிலை வழிபடத் திருவுளங்கொண்ட ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம்அவர்கள் சிதம்பரத்திலிருந்து எழுந்தருளியானுர்கள். உடன் சென்ற பலர்க்கு அத்தலம் புதியதாகலின் ஆதீனத் தொண்டர் திரு. கோ. சிவஞானம் அவர்களும் தேவாரம் திரு. சுப்பிரமணிய முதலியார் அவர்களும் வழிகாட்டும் அன்பர் களானுர்கள். எல்லோரும் மாலையில் அத்தலத்தைக் கூடினேம்.

கூடலையாற்றூர் 'கொம்பனுர் ஆடல் நீடு கூடலை யாற்றூர்' என்று சேக்கிழார் பெருமானுல் குறிக்கப்பெற்றிருக்கின்றது. அதற்கேற்ற இயற்கை வளம் மிகுந்த ஊராகவே காணப்படு கின்றது. சுந்தரமூர்த்தி நாயனுர் அவ்வூரில் புகாமல் ஒரு பக்கமாகத் திருமுதுகுன்றத்தை நோக்கிச் செல்லும் வழியில் மெய்ப்பரம்பொருள் மைக்கருங்கண்ணியொடு முப்புரிநூல் தாங்கிய விப்பிரராய் நம்பியாரூரர் முன்பு வந்து நின்றுர். பழ மலைக்கு வழி எது என்றுர் ஆரூரர். இவ்வழிதான் என்று அழைத் துச் சென்றுர் கூடலையாற்றூர் ஆடலையர். தொடர்ந்து சென்ற நாவலாரூரர் அழைத்துச்சென்று வழிகாட்டிய வான்பொருளை மண்ணிலுங்காணுர் வானிலுங்காணுர். அடிகள் 'இவ்வழி போந்த அதிசயம் அறியேனே' என்று முடியும் பதிகத்தைப் பாடியருளினுர். அத்தகைய அதிசயத்துக்கு உரியது அத்தலம்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அங்கு எய்தியதும் அதிசயமே. விதிப்படி ஓதுவாமூர்த்திகள் திருப்பதிக இசைபாட வழிபட்டுப் பேரானந்தம் எய்தினுர்கள். வன்றெண்டர்க்கு வழிகாட்டிய ஞானம்பிகையைத் தரிசித்த காலத்துப் பெரு மகிழ்ச்சி உண்டாயிற்று. அத்திருக்கோயிலில் அழகிய முறை யில் பன்னிரு திருமுறைகளும் வைத்துப் பூசிக்கப்பெறுதல் எங்கும் காணுத ஓர் அதிசயம். கோயில் பரிபாலகர் முதலிய பலர் முன்னேற்பாடு இன்றியும் கூட்டமாக வந்து உடனிருந்து நம் குருமணியை வழிபட்டு இன்புற்றனர். வாழ்க வழிகாட்டிய திருவருள்.

முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்.

சாத்திரப் பகுதி

# திருவருட்பயன் ஆராய்ச்சி

தருமபுர ஆதீனப் புலவர், சித்தாந்த ரத்நாகரம்,
திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்

[முன் தொடர்ச்சி]

ஊமன்கண் போல வொளியு மிகவிருளே
யாமன்கண் காணு தவை 10

இதனுரையில், 'அவை' என்னுஞ் சுட்டுச் சொல்லின்பொருளாக 'முற்கூறிய வுயிர்கள்' என்றிருத்தலாலும் 'காணமாட்டா' என வினைப்பயனிலை கொடுத்தமையாலும் ஸ்ரீ நிரம்பவழகிய தேசிகர் திருவுள்ளத்திற்கேற்ற பாடம் "காணு அவை" என்பதேயாகும். ஆயினும், எல்லாப்பதிப்புள்ளும் 'காணுதவை' என்றே காணப் படுகின்றது. எதிர்மறை வினைப்பெயராக் கொண்டுரைத்தனர் அப்பாடத்திற்குப் பொருளெழுதியவருட் சிலர். "அவை மன் (கருத்தாவாகிய சிவனுடைய) கண் (ஞானத்தினைக்) காணு" என்றும் "ஒளியும் (அந்த ஞானமும்) மிக விருளேயாம் (அந்தக் கூகையினது கண்ணுக்குச் சூரியன் சிறிதுந் தோன்றுது நின்றுற் போல உயிர்களுக்குந் தோன்றுது நின்றதாம்") என்றும் எழுதிப் பொருள் விளக்கிய தேசிகரது உரைப் போக்கினையுணர்வது ஈண்டுப் பயனுடைத்து. 'காணுதவை'யெனக் கொண்டு கூறும் பொருள் அமைதியுடையதன்று. காணுதவைக்கு என நான்கனுருபு விரித்துக்கூறல் இலக்கணமாகாது.

ஐயுங் கண்ணும் அல்லாப் பொருள் வயின்
மெய்யுருபு தொகாஅ விறுதி யான

என்னுந் தொல்காப்பியச் சூத்திரப்படி ஒரு தொடரீற்றில் ஐயுருபும் கண்ணுருபும் தொக்கால் தத்தம் பொருளில் தொகுமேயன்றித் தாமல்லாத பிறவேற்றுமைப் பொருளில் தொகா. அவ்விரண்டுமல்லாதவை தம் பொருளில் தொகாது; தாமல்லாத பிறவேற்றுமைப் பொருளில் தொகும் ஈற்றின்கண்.

காத்தான் நாட்டை என்பதைக் காத்தான் நாடு என்றக்காலும் ஐயுருபு தன் பொருளிற்ருெக்கதேயன்றிப் பிறிதொரு வேற்றுமைப் பொருளிற்ருெகாமை காண்க. சென்ருர் இரவின்கண் என்பது சென்ருர் இரவு என்றக்காலும் ஏழனுருபு தன் பொருளில்தொக்கதே யாதலறிக. ஏனைய வேற்றுமையுருபுகள் கொடுத்தான் இரக்கத்தால், கொடுத்தான் கூலிக்கு, நீங்கினுன் துன்பத்தின் என்பவற்றைக் கொடுத்தான் இரக்கம், கொடுத்தான் கூலி, நீங்கினுன் துன்பம் எனத் தொகுத்தால் தத்தம் பொருளல்லாப் பிறபொருள் பயத்தலறிக. இச்சூத்திரத்தில் உள்ள "ஐயுங்கண்ணும்" என்பது எழுவாய், "மெய்யுருபு தொகாஅ" என்பது பயனிலை. "அல்லாப்பொருள்," "இறுதி" என்னுமிரண்டும் முறையே பொருளிடமும் சொல்லிடமுமாய் நின்று, அவ்வீருருபும் தொகாமைக்கு இடமாயின. இப்பொருளொடு தொல்காப்பியவுரைகளை ஒத்துநோக்குங் கூர்த்தவுணர்வினர் ஈண்டுக் களிகூரப் பெறுவர். இத்தொகைமுறை உணராது, பண்டைச் செய்யுட்கு உரையிட்டாரும் உளர்.

> பாலாழி மீனுளும் பான்மைத் தருளுயிர்கண்
> மாலாழி யாழு மறித்து 35

இதற்கெழுதியுள்ள வுரைப்படி சொற்பொருள் வருமாறு:-

அருள் உயிர்கள் - (மேலாய) அருளின்கட்பட்ட உயிர்கள் மறித்து - அதனெடு பொருந்தி நின்று பேரின்பத்தை நுகராமல், மால்ஆழி - (மாயாபோகமாகிய) மயக்க வேலையுள், ஆழும் - (ஆழ்ந்து) அழுந்தும் (தன்மை), பால் ஆழி - திருப்பாற்கடலின் கண்வைகிய, மீன் ஆளும் பான்மைத்து - மீன்கள் பாலைப் பருகாது அதனுள் சிறியவாம் பிராணிகளை வருந்தித் தேடியுண்ணு முறைமையினையுடைத்து.

இவ்வாறு எழுதுவது புலவர் நெறியன்று. இதனை யாம் ஈண்டுக் காட்டியது குற்றமாகாது; இதனுள் உணரப்படும் பாடாந்தரத்தைக் கருதியதாதலின். இந்நெறியுங்கொள்ளற்பாலதேயாகும்; முன்னேர் மேற்கொண்டதால்.

ஸ்ரீ நிரம்பவழகிய தேசிகர் 'ஆளும் மறித்து' என்ற பாடங்கொண்டிலர் என்பதும், 'ஆழும்மறித்து' என்றே கருதியுரை

யிட்டருளினர் என்பதும், "ஆழ்ந்து அழுந்துந்தன்மை" என்பதால் விளங்கும்.

இவற்றை வரையிசைந்து மேதும் பழக்கமிலா
வெற்றுயிர்க்கு வீடு மிகை. 40

இதில் 'இயைந்து' என்றே யிருத்தல் நன்று. மூன்று பதிப்பில் மட்டும் 'இசைந்து' என்றுளது. அஃது இடையில் வந்த போலியேயாகும்; முதலில் இயைந்து நின்றதெனினும், கடையில் இடைந்து ஓடற்கு உரியதே.

எமக்கென் எவனுக் கெவை தெரியும் அவ்வத்
தமக்கவனே வேண்டத் தவிர் 46

ஞானபாநு சங்கத்தார் அநுமதிபெற்றுப் பதிப்பித்த சுதேசபுத்தக சபையாரும், ஆரணியிலிருந்த வித்துவான், மதுரைநாயகம் பிள்ளையவர்களும் வெளியிட்டவற்றில் 'அவ்வ' என்றுளது. பல பதிப்புக்களில் மேற்காட்டியவாறே இது காணப்படுகின்றது.

ஸ்ரீ நிரம்பவழகிய தேசிகர் உரையில், 'அந்நூற்பொருள்கள்' என்றுள்ளதால் 'அவ்வ' என்பதே அவர் கொண்ட பாடமென்க. அவ்வுரைக்கீழ், "குருவுண்மை கொள்ளாயாயின் என்பது எஞ்சி நின்றது" என்றுள்ளதை நோக்கியாவது உரைத் தொடக்கத்துள்ள 'கொண்டமையால்' என்றதைத் திருத்தியிருக்கலாம். பொருளது முரண்பாடும் புலப்பட்டிலது. ஏட்டிலுள்ளவாறே அச்சிட்டதாகக் கூறலாம். அது புலமையுடைமைக்கும் பொருந்தாது. உலகுபகாரமும் ஆகாது. முன்னோரிடத்து நமக்குப் பத்தி வேண்டுவதே. இவ்வாறுயது பத்தியின் பாற்படாது. அவர்பாற் பிழையாக்குவதாக முடியும்.

இத் திருக்குறட்கு உதாரணக் கலித்துறையில்,

"எமக்கே னெவனுக் கெவையே தெரியு மிருவினைநோய்
தமக்கே யிரையென்று சர்ப்பத்தின் வாயிற் றவளையொப்பர்
சுமக்கே னுடற்சுமை யென்றே குருவினைச் சூழ்ந்திடுவார்
தமக்கே யுடனல மென்றே பிறருக் கமைப்பர்களே"

(தருமை ஆதீன வெளியீடு).

என்றுளது. இங்கு இது திருத்திக் காட்டப்பட்டது.

வேறு சில பதிப்பிற் சிறிது வேறுபட்டிருக்கும். எமக்கென், தமக்கேயினி உடல்சுமை என்றிருத்தலே வேறுபாடு. இக் கலித்துறையால் விளங்குவது "அவ்வ" என்ற நான்காவது சீர் "எவ்வம்" என்றிருந்தால்தான் "இருவினை நோய்" என்று குறிக்கலாகும் என்பது. இது தவறுமேல் அதற்குக் காரணங் காட்டல்வேண்டும்.

"எமக்கென் எவனுக் கெவைதெரியும் எவ்வந்
தமக்கவனை வேண்டத் தவிர்.

என்று கொண்டாலும் 'எவை' என்னும் வினாவிற்கேற்ப 'அவை' என்று வருவித்தல் வேண்டும். அவ்விடைக்கு ஏற்பப் பயனிலை கூறல்வேண்டும். அஃதாவது, எவை தெரியும் என்பதற்கு ஏற்ப. அவை - என்னவேண்டும். 'எவை' என்றதற்கு அவ்வ (அவை) என்பதே பொருந்தும். இக்குறளின் தொல்லுருவம் இன்னதென்று தோன்றுமையாலும் இப்புத்துருவம் பிழையுடையது என்று தோன்றுவதாலும் இதற்குப் பலர் உரைத்த பொருளும் பொருந்தாமை உணரப் படும். யூகத்தால் எமக்குத் தோன்றிய பொருளைச் சொல்லவும் துணிவு பிறந்திலது. என் செய்வது? திருவருட்பயனை ஒட்டி ஆக்கிய "திருமெய்ஞ்ஞானப் பயன்" (சித்தாந்தம் மலர் 15, இதழ் 10; பக்கம் 376 - 384) என்பதிலும் இதற்கு விளக்கம்-யாதும் காணப்பட்டிலது. (ஐயுற்ற இடத்துக் கைவிட்டுப் போதல் தமிழாசிரியர் மூவகையார்க்கும் (எமக்கும்) பழக்கமும் வழக்கமுமாம்.) அதிற்பத்தியலும் விளக்கமே. எவனுக்கெவை தெரியும்? அவை அவனை வேண்டத் தமக்குத் தவிரும் என்றதாகக் கருதி, அதற்கேற்பத் திருவெண்பா,

"எமக்கென் எவனுக்கெவை தெரியும் அவ்வ
தமக்கவனை வேண்டத் தவிர்ம்."

என்றிருந்ததோ என்று உன்னுகின்றோம். 'எவனுக்கெவந் தெரியும்' ('எவ்வம்') என்றிருந்ததுமாகலாம்.

"ஆகமங்களெங்கே" என முதலுந் திருக்களிற்றின் கருத்தாகக் கொண்டார் என்ன இடனுண்டு; திருமெய்ஞ் ஞானப் பயன் 45-ஆவது வெண்பாவை நோக்கின். பின்னர் இதன் பொருளைத் தனியே எழுதுவோம். "சித்தாந்தம்"

n85



# சேக்கிழார் கண்ட இசைத் தமிழ்

சங்கீதம், திரு. ப. சுந்தரேசனார் அவர்கள்
தேவார ஆசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.

தொண்டர் சீர் பரவுவாராகிய நம் சேக்கிழார் பெருமான் தில்லையிலாடும் பொன்னம்பலவன் திருவருளால் இயற்றியருளிய தண்டமிழ்நாட்டுத் திருத்தொண்டர் உண்மை வரலாற்றினுள், முதன்முதலாகக் கூறப்படுவது தடுத்தாட்கொண்ட வரலாறு அன்றோ! அவ்வரலாற்றினுள், ஆசிரியர் நம்பியாரூரரைத் தம்பிரான்தோழனாய் இத் தமிழ்நாட்டில் இரங்கிவந்து தடுத்தாட்கொள்ளவேண்டிக் கற்றைவார் செஞ்சடைக் கரந்த நம் சிவபெருமான் வந்து பல விந்தைகள் பேசியதும் வலிய வழக்கிட்டதும் ஆவண ஓலை காட்டி அடிமைத்திறங் கூறியதும் முடிவில் திருவெண்ணெய்நல்லூருக்கு அழைத்துச் சென்று தன்னை இறைவனென அறியச் செய்ததும் போன்ற பல நிகழ்ச்சிகளை நம் கண்முன்னே தோன்றுமாறு கூறிப் போந்துள்ளமையை சிவநெறி திறம்பாத சீருடைச் செல்வ மக்கள் யாவரும் ஒருங்கு அறிவர்.

மேற்கூறிய நிகழ்ச்சிகட்குச் சான்றாகச் சேக்கிழார் என்ற அப்பெருமானார்க்கும் இக்காலம் நம்மனோர்க்கும் விளங்கும் பாடற் பகுதி "பித்தாபிறைசூடீ" என்ற திருப்பதிகமேயாகும். ஆரூரர் இறைவனை உணர்ந்த பின்னர் அவரை முன்னர் சினந்து கூறிய "பித்தா" என்ற ஒரு சொல்லினையே முதலாகக் கொண்டு பாடிய இப்பகுதியை அருள் வழியே உணர்ந்த (சேக்கிழார்) பெருந்தகையார் நலமேதிகழ் முத்தமிழின் நீர்மையால் ஒருங்குணர்ந்தே வரலாறு பாடத் தொடங்குகிறார் என்பதை நாம் எற்றைக்கும் மறவாது வாழ்வேமாக.

நம்பியாரூரர் பெருமானைப் பாடிய பாடலின் முதற்சொல்லினை இயல்வகையில் நம்மனோர்க்கு அறிவுறுத்திய சேக்கிழார் இசைவகையில் அப்பாடல் எந்தப் பண்ணில் ஆரூரர்வாயிலாக எழுந்தது என்பதனையும் விளக்கவேண்டிப் பாடல் எழுந்த

ஓசையின் வழியே பண்ணின் சீரிய இலக்கணத்தையும் அறிவித்துவிட்டார். அஃதும் ஒரேபாடலில், இவ்வாறு (உண்மை கூறும்) இசைப் பகுதியையும் விளக்கிய சேக்கிழாரின் அருள் வழித் திறத்தினை எண்ணி எண்ணி இறும்பூதெய்தாத மக்கள் இந்நாட்டில் யாரேனும் இருப்பரேல் தவக்குறையன்றி வேறில்லை. நிற்க, இனி அறிவின் உருவாம் ஐயாறன் திருவருட்டுணை கொண்டு அப்பாடலினுட் புகுந்து இசைத் தமிழ் உள்ளத்தோடு உரைகாணப் புகுவாம். நம்பியாரூரர் இறைவனை இறைவனுகக் கண்டு முதன் முதலில் விண்ணப்பித்த திருப்பாடல் இதுவன்றோ?

"பித்தா பிறைசூடி பெருமானே யருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத்தென்பால் வெண்ணைநல்லூ ரருட்டுறையுள்
அத்தா வுனக்காளா யினியல்லே னெனலாமே."

இப்பாடலைப் பண்ணோடுணர்ந்த பைந்தமிழ்ப் பெரியாராய சேக்கிழாரால் இப்பாடலோடு பொருந்தும் பண்ணின் இலக்கணத்தைக் கூறப்படும் பாடலினைக் கீழே தருவாம். இஃது இலக்கணத்துடன் தாளத்திலமைத்துப் பாடிய முறையையும் கூறுகின்றது.

"முறையால்வரு மதுரத்துடன் மொழியிந்தள முதலில்
குறையாநிலை மும்மைப்படி கூடுங்கிழ மையினுல்
நிறைபாணியின் இசைகோள்புணர் நீடும்புகழ் வகையால்
இறையான்மகிழ் இசைபாடினன் எல்லாநிகர் இல்லான்."

இனி இதன் வழியே உரை காணல் வேண்டும்.

## பதவுரை

முறையால் - முறைமையால். வரு - வருகின்ற. மதுரத்துடன் - இனிமையுடன். மொழி - இசைத் தமிழ் மொழியில். இந்தளம் - இந்தளப் பண். முதலில் - முறையே தோன்றிய முதலில். குறையா நிலை - இசைநிலையலகு குறைவுபடாமல். மும்மைப்படி - தோன்றிய முறையில் மூன்றும் முறைப்படி. கூடும் - பொருந்துகின்ற. கிழமையினுல் - உரிமையினுல். நிறை - (சீர்) நிறைவுடைய. பாணியில் - தாளத்தில். இசை -

587

இசையின். கோள் - நிலைகள். புணர் - ஒன்றிப் பொருந்த. நீடும் புகழ் - நீடிய காலம் வரை புகழும். வகையால் - இயல் வகையாலும் இசை வகையாலும். இறையான் மகிழ் - தடுத் தாட்கொண்ட இறைவன் மகிழுமாறு. எல்லா நிகர் இல்லான் - இறைவனருளால் எல்லாவற்றிற்கும் நிகரிலாத தன்மையான சுந்தரன். இசைபாடினன் - 'பித்தாபிறைசூடி' என்ற பாடலினை இசையால் பாடினான் என்பதாம்.

## பொழிப்புரை

எல்லாம்வல்ல இறைவன் அருளைப்பெற்ற பெற்றிமை யினாலே எல்லாம் நிகரிலாத தன்மையைப் பெற்ற நம்பியாரூரர் (சுந்தரர்) முதன் முதலாக இறைவனை 'பித்தாபிறை சூடீ' என இசைத்தமிழில் இசைதோன்றிய வரன்முறையில் இனிமை யொடுவருகின்றதும் இசைநிலையலகு குறைவுபடாமல் வருகின் றதும் முறையே தோன்றிய வகையில் மூன்றும் முறைப்படி (இசைத்தமிழ் மொழியில்) வந்த இந்தளப் பண்ணில் உரிமை யோடுபொருந்துகின்றவகையில் பொருத்திச் சீரின்தன்மையாம் தாளத்தில், பண்ணில் அமைந்த இசைநிலைகள் ஒன்றிப் பொருந்த, நீடியபுகழ் நிலைபெற்று விளங்க (தம்மைத் தடுத்தாட் கொண்ட இறைவன் மகிழுமாறு) இசையால் பாடினார் என் பதாம்.

## விரிவுரை

முறையால் என்ற சொல்லின் பொருள் இசை தோன்றிய வரன்முறையால் எனப் பொருள்படுதலின், அதனை நன்கறிதல் வேண்டும். அம்முறையைப் பண்டைய தமிழ்நூல் தாரமுறை எனக் கூறும். இதுவே இசைதோன்றிய முதன்முறையாகும். தாரமுறையின் இசைநிலைகள் தாரம், குரல், துத்தம், உழை, இளி என நிற்கும். இம் முறையே பழைய ஐந்திசை முறை யாகும். இவற்றின் அலகு நிலைகள், தாரம் ௦ - குரல் ச - துத்தம் அ - உழை ௰௩ - இளி ௰எ எனக் கூறப்படும். இந்த முறையை ஒரு நிரலாகக் கொள்ளுமிடத்து இவ்வாறு நிற்கும்.

க. தார முறை:—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தாரம் | குரல் | துத்தம் | உழை | இளி | இசைநிலை |
| ௦ | ச | அ | ௰௩ | ௰எ | அலகுநிலை |

588



தாரம் முதலாக வரும் இம்முறையே நம் தமிழ் வழங்கு நாட்டில் பழய முல்லை நில மக்களால் குழற்கருவியில் ஐம்புழையிட்டு முதன்முதலில் (காணப்பட்டு) வாய்வைத்தூதி அறியப்பட்டது. பின்னர் இதே முறையினை அம்மக்கள் வில்யாழ் எனுங்கருவி வாயிலாகவும் அறிந்தனர் எனவும் கூறப்படுகின்றது.

மேற்காட்டிய இந்நிரல் குழலிலும் யாழிலும் இசைத்து உணரப்பட்டு அதாவது ஐந்திசைகளையும் பலவாருக இசைத்து அவ்வொலிகளின் (தொகுதியொலிப்பினுல்) உணர்வினுல் உணர்ந்தவாறு, அவ்வொலித்தொகுதி தோன்றிய நிலையை உள்ளத்தில் வைத்துப் பெயரும் அமைக்கப் பெற்றது. அப் பெயரும் முதன் முதலில் தாரம் எனவே வைக்கப்பெற்றது. இப்பண்ணின் விரிவான ஆராய்ச்சியை நாம் இனி எழுதப் போகும் தாரப்பண் ஆராய்ச்சி எனுங் கட்டுரை வாயிலாக ஞானசம்பந்தம் பெறுபவர் அறியலாம்.

இந்நிரல் பண்டைய வில்யாழில் இருநிரலாகக் கட்டப் பட்டு ஒவ்வொரு நரம்பினை விடுத்து விடுத்து அறியப்பட்ட காலத்தே தாரம்முதலாக வந்த நிரல் குரல் முதலாகவும். துத்தம் முதலாகவும் உழை முதலாகவும் இளி முதலாகவும் என ஐந்துவகையாக உணரப்பட்டது. அவ்வகையில் இரண்டாம் நிரல் இவ்வாறு நிற்கும்.

உ. குரல் முறை:—

குரல் — துத்தம் — உழை — இளி — தாரம் — இசைநிலை
௦ — ச — கூ — ௰ரு — ௰அ — அலகுநிலை

இனி மூன்றும் நிரல் இவ்வாறு நிற்கும்.

ங. துத்த முறை:—

துத்தம் — உழை — இளி — தாரம் — குரல் — இசைநிலை
௦ — ரு — கூ — ௰ச — ௰அ — அலகுநிலை

இம்மூன்றும் முறையையே நம் சேக்கிழார் பெருமான் மும்மைப்படி என்ற சொற்களாலே நமக்கு அறிவுறுத்துகின்ருர். இவ்வழி முதல்முறை நின்ற அலகுநிலை அவ்வாறே குறையாது நின்ற தன்மையை மூதலில்குறையாநிலை என நன்கு விளங்கக் கூறுகின்ருர். இங்கு இக்கருத்து நேரே விளக்கம் தந்தாலன்றி

589

விளங்கா. முதல்நிரலின் அலகுநிலைகள் கணித்துக் காணு மிடத்து வேருக நிற்பன போன்று தோன்றினும் உண்மையில் வேறுபடவில்லை. இஃது உள்ளத்தால் உகந்து உணரப்படுவது பற்றியே குறையாநிலை எனக் கூறுமிடத்து முதலில் குறையாநிலை எனத் தெளிவுபடஉரைத்து நம்மனேரை உய்த் துணர வைக்கின்ருர். இவ்வொலித் தொகுதிக்குப் பண்டைய தமிழ்மக்களால் இடப்பட்ட பெயரே இந்தளம் எனப்படும். இம்முறையும் வழங்கும் பெயர்களும் கி. பி. பன்னிரண்டாம் நூற்ருண்டுவரை நம் தழிழகத்தில் எத்தகைய மாறுபாடும் எய்த வில்லை என நன்கு உணர்தலே நலம். இப்பண் இக்கால இசையுலகில் இந்தோளம் எனச் சற்று மருவி வழங்கி வருவது. மேலே நாம் கணித்துக் கணக்கிட்டு வரும் முறையால் நன்கு தெளிவாக அறிந்துணரலாம்.

இனி நான்காம் முறை ஐந்தாம்முறை ஆகுமிரண்டும் ஏற்றபெற்றி மேல்வரும் கட்டுரைகளால் (உழைப்பண் - இளிப் பண் ஆராய்ச்சி) அறியலாம்.

ஆகவே இந்தளம் இந்தோளமான முறை யாதொரு வியப்பு மில்லையே! நம்மனேர் அறியாதிருப்பது ஒன்றே வியப்பாகும். இவ்வாறு தாரமுறையால் இசைமுறையில் மூன்றும் முறை யாகிய இந்தளப் பண்ணில் நம் சுந்தரர் முதன்முதலாகப் பதியம் பாடிய வகையினை 'முறையால் வரு மனத்துடன் மொழி இந்தள முதலில் குறையாநிலை மும்மைப்படி எனச் சேக்கிழார் பெருமானுல் கூறநேரிட்டது. பின்னர் இப்பண்ணின் இசைநிலை பித்தாபிறை சூட என்ற பாடலோடு எவ்வாறு பொருந்தும் எனக்கூறும் பகுதி இன்னும் மிக்க ஆழமான இயலிசைக் கருத்தினை விளக்குகின்றது.

கூடும்கிழமை: எனக்கூறப்பட்ட சொற்களின் பொருள் பொருந்தும் உரிமை எனப் பொருள்பட நின்று இங்கே இசை நிலை உரிமைபற்றிப் பொருந்தும் வகையென விரிவுபடுகிறது. இது பாடியவர் உள்ளத்துணர்வுபற்றி அறியப்படுமாதலினுலே நம்பியாரூரரின் உள்ளநிலையினை இவ்விடத்து நினைவுபடுத்திய பின்னரே அறியவேண்டும். (தொடரும்)

---

குறிப்பு ;— நிரல் வேறுபடுமிடத்து நின்ற இசையின் அலகினை மற்றைய இசையலகுதொகையின் எண்ணில் கழித்துக் கணிக்கவேண்டும்.

590



# பூலோக விமர்சனம்

## (பதினேழாம் நூற்றுண்டு வேங்கடாத்வரி)

தமிழில் ஆக்கியவர்
பிர்மஸ்ரீ ய. மகாலிங்க சாஸ்திரிகள் அவர்கள் M. A., B. L.,
தருமபுர ஆதீனப் பல்கலைக்கல்லூரி முதல்வர்.

(முன் இதழ் தொடர்ச்சி)

பின்பு விமானத்தை வெகுதூரம் செலுத்திக்கொண்டு சென்று அந்தக்கந்தர்வர்கள் பூலோகத்திலுள்ள காடுகள் நாடுகள் ஆறுகள் மலைகள் இவற்றைக்கண்ணுற்றுர்கள்; ஆச்சரியமடைந்தார்கள். எவ்வளவு செடி கொடிகள்! எவ்வளவு விதமான மரங்கள்! எவ்வளவு நதிகள்! ஆங்காங்கு மலைகள்! இறுதியில் ஸமுத்திரங்கள்! எவ்வளவு தேசங்கள். ஆங்காங்கு எவ்வளவு விதமான மனுஷ்யர்களும், ஸ்திரீகளும்! பார்க்கப் பார்க்க இவ்வுலகம் புதிதாகயிருக்கிறதே. இதை சிருஷ்டி செய்த பகவானின் பெருமையே பெருமை!!

இருவரும் மகாராஷ்ட்ர தேசத்தைக் கண்டார்கள். விச்வாவசு கூறினன். இதோ பார் மஹாராஷ்ட்ரதேசத்தை. இது நீர்வளம் பொருந்திய பூமி. எங்கும் இனிப்பான தண்ணீர் நிரம்பியது. இந்தத் தேசத்திற்குச் சமமாக வேறு எந்த தேசத்தையும் சொல்லமுடியாது. இது கீர்த்தி வாய்ந்தது. தேவலோகத்திற்கு ஒப்பானது. இங்கிருக்கும் கிருஹஸ்தர்கள் குணவான்கள், தனவான்கள், சீலவான்கள் சிரத்தையுடன் அதிதி பூஜை செய்பவர்கள்.

கிருசானு:- நண்பா! நீ சொல்வதெல்லாம் முன்ஞெரு காலத்தில் இந்தக் கலிகாலத்திலோ, இப்பெருமையெல்லாம் மஹாராஷ்ட்ர தேசத்தில் காண அரிது. ஏனெனில், இங்குள்ளவர்கள் சிலெளகிகமான பல கார்யங்களில் முற்றிலும் ஈடுபட்டவர்களாகப் பொருளீட்டுவதில் முனைந்திருக்கிருர்கள். அவர்களின் கார்யங்களுக்குப்பகலேபோதாது. ஆகையால் அவர்கள்

591

சாப்பாட்டு நேரத்தில்தான் ஸ்நானம் செய்கிறார்கள். காலத்தில் ஸந்தியாவந்தனம் முதலிய நித்யவிதிகளைச் செய்வதில்லை. பிராம்மண தர்மத்தை விட்டு விட்டு கிராமக் கணக்கர்களாக ஆகித் தங்கள் வாழ்க்கையை நடத்துகிறார்கள்.

உசிதகாலத்தில் உபநயனம் விவாஹம் முதலிய ஸம்ஸ்காரங்களை இவர்கள் செய்வதில்லை. மேற்படி ஸம்ஸ்காரங்கள் லௌகிகமான கொண்டாட்டங்களாகத் திகழ்கின்றனவே ஒழிய அவற்றின் வைதிகத் தன்மை மறைந்துபோய்விட்டது. இவர்களிடம் வேதாத்தி யயனமும் குன்றிப்போய்விடாது. வேதாத்தியயனம் செய்யவேண்டிய காலத்தில் பிள்ளைகளை இவர்கள் துருக்க பாஷையைக் கற்றுக்கொள்ளச் செய்கிறார்கள்.

மேலும் லௌகிக பாஷைகளைக் கற்றுணர்ந்து சொந்த பாஷையை மறந்துவிட்ட இவர்கள் வைதிக கர்மாக்களைச் செய்யும்போது மந்திரங்களை உச்சரிக்காமல் மௌனமாகவே இருந்துவிடுகிறார்கள். ஊர் வரவு செலவு கணக்குகளை எழுதும் தொழிலை மேற்கொண்ட இவர்கள் பரம்பரையாக வந்த பிராம்மண தர்மங்களை மறக்கிறார்கள். மேலும் வயிறு வளர்ப்பதற்காகத் துருக்க அரசர்களுக்குச் சேவைபுரிந்துகொண்டு மாதச்சம்பளத்திற்குத் தங்கள் உடல்களை விற்றுவிடுகிறார்கள். அதுமட்டுமல்ல அயோக்யர்களாகவும் ஆகிவிட்டார்கள். பிராம்மணராய்ப்பிறந்தும் பொய்க்கணக்குகள்எழுதும் சாமர்த்தியத்தால் மேல் அதிகாரிகளை வஞ்சனைசெய்து திருட்டுத்தொழிலும் செய்துவருகிறார்கள். எஜமான துரோகம் திருட்டுத் தொழிலைக்காட்டிலும் கொடிய பாபம். வீட்டில் கன்னம் வைத்துத் திருடுபவர்களைக்காட்டிலும் காடுகளில் வழிப்பறி செய்பவர்களைக்காட்டிலும் நம்பிக்கைத் துரோகம்செய்து பிழைப்பவர்களான இந்தப் பொய்க்கணக்கர்கள் இழிவுடையவர்கள். அப்படி இருந்தும் ஜனங்களின் மத்தியில் அவர்கள் பெரிய மனிதர்கள் என்று போற்றப்படுகிறார்கள். ஆஹா கலியின் மகிமை என்ன?

இந்த தேசத்தை நிகரற்ற தேசம் என்று நீ புகழ்ந்தாயே அது எப்படித்தகும்? இங்கு இப்பொழுது படித்தவர்களே கிடையாதே. சிஷ்டர்களும் கிடைக்கமாட்டார்களே; இங்கு இன்று நிலவும் படிப்புப் பஞ்சத்தில் நான்கு வேத அக்ஷரங்களை

சொல்லக்கூடியவன்தான் வேத வியாஸராக விளங்குகிருன். ஒரு சுலோகத்தை முழுசாகச் சொல்லத் தெரிந்தவன் பிரஹஸ்பதியாக விளங்குகிருன். ஔபாஸனத்தை மாத்திரம் விடாமல் ஒருவன் செய்துவருவானே ஆனுல் அவன்தான் இந்ததேசத்தில் ஆபஸ்தம்ப மஹர்ஷியாய் விளங்குகிருன். கலிமஹிமையினுல் படிப்பின் பெருமையெல்லாம் எங்கோ மறைந்துபோய்விட்டது. இதை நினைக்க, எவ்வளவு துக்கமாக விருக்கிறது.

விச்வாவசு:- கிருசானு நீ தோஷத்தையேசொல்லிவிட்டாய் இருக்கட்டும். ஆனுலும் நான் சொல்வதைக்கேள். இன்றைக்கும் இந்தத்தேசத்தில் அக்னிஹோத்திரம்செய்பவர்களும் சாஸ்திர பண்டிதர்களும் சாந்திபெற்ற பெரியோர்களும் ஆத்ம சிந்தனை செய்யும் யோகிகளுமான சிஷ்டர் சிலரேனும் இருக்கிருர்கள் என்பதை மறுக்கமுடியாது.

இன்றும் இந்தமஹாராஷ்ட்ர தேசத்தில் கிருஹஸ்தர்கள் சுத்தமாக ஸ்னனம்செய்துவிட்டு புராணச்ரவணம் செய்துவிட்டு நியமத்துடன் இருந்துகொண்டு அனுசாரமான ஸ்பர்ஸ தோஷங்களை அணுகவிடாமல் சிரத்தையுடன் தேவதா பூஜையைசெய்து முடித்துக்கொண்டு பின்புதான் புனிதமான அன்னம் அருந்துகிருர்கள்.

மேலும் சிலர் அரசாங்க அதிகாரங்களை நிர்வகிப்பதால் தேசத்திற்கு நன்மை நிலவுகிறதே ஒழிய தீமை யாதொன்றும் கிடையாது. இப்படிச் சிலர் சேனுபதிகளாகவும் நாட்டின்பகுதிகளை ஆளும் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களாகவும் பணி புரியாவிட்டால் துருக்கர்களால் ஆக்ரமிக்கப்பட்ட இந்தப் பிரதேசங்களில் பிராம்மணர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்திவர முடியுமா? அவர்கள் எப்போதோ அழிந்துபோயிருப்பார்களே!

நீ சொன்ன மற்ற தோஷங்களுக்கும் பரிகாரம் உண்டு. அந்த அந்தப் பதவியில் இருந்து இவர்கள் அநேகம் பிராமணர்களுக்கு உபகாரம் செய்துவருவதால் அவர்கள் செய்யும் பாபங்களுக்கும் பிராயச்சித்தம் ஏற்பட்டுவிடுகிறது கவனிக்கத்தக்கது.

(தொடரும்)

593



# கனிந்த கவிதை

பேராசிரியர் பண்டித, வித்துவான்,
திரு. திருநாராயண இராமாநுஜ ஐயங்கார் அவர்கள்
சிவகங்கை

கவிதையைப் பற்றிய கருத்து ஒன்று. மேனாட்டு அறிஞன் 'பிராட்லி' பேசுகிறான் – "கவிதை எதைச் சொல்லுகிறது என்பது சிறப்பில்லை; எப்படிச் சொல்கிறது என்றுதான் காண வேண்டும்" இது அவனது அளவுகோல். ஆனால் இதற்கு மறுதலையும் உண்டு. பொய்யை 'நல்ல முறையிலே' சொல்லுகிறோம். அதுமெய்யாய்ப்பயன்தருமா? தீமையை நன்குவிதைத்தாலும் கேடுதான். ஆகவே "கவிதைக்கு முறை சிறப்பில்லை; குறிக்கும் செய்தியே சிறந்தது". நல்ல கவிதை 'சொல்லும் செய்தி' யாலேயே சிறப்புறும். இப்படி ஒரு சாரார் வேண்டுவர்.

இக்காலத்தவர், இரண்டுடன் நிற்பதில்லை. கவிதை "எதையும் சொல்லலாம்; எப்படியும் சொல்லலாம்" என்கின்றனர். பாடுவன எல்லாம் பாட்டே என்றநிலை வந்துவிட்டது. நேற்றுவரை இருந்த புலவர்நிலை அப்படியில்லை. குமரகுருபரர் தமிழில் பெரும் புலவர். கவிநலம்சான்ற தெய்வக் கவிஞர். கலைமகளை நோக்கி வேண்டுகின்றார்:-

"பாட்டும் பொருளும் பொருளால் பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும்படி நின் கடைக்கண் நல்காய்"

இவ்வேண்டுதலில் ஆழ்ந்த கருத்துண்டு. பாட்டிற்கு மூன்று உறுப்புக்கள் சிறப்புத் தரும். அவை: பாட்டின் வடிவம் - சுட்டும் பொருள் - பயனுறுத்தும் வன்மை என்பன. இம்மூன்றும் செம்மை பெறச் சேரில் 'சீரிய கவிதை' வரும். வடிவு: பொருள், பயன் மூன்றும் ஒத்து இயங்க அருள்புரி என்பதே குறிப்பு. செய்தியை விட்டு வடிவத்தையோ - அன்றி வடிவத்தை விட்டுச் செய்தியையோ மட்டும் வேண்டுவது தமிழ் வழக்கில்லை. சீரிய பொருள் கவிதைக்கு உரிய உயிர்நிலை,

சொல்லும் அணியும் அதற்கு உடல்என அமையும். "பொருட்கு இடனாய் வல்லவர் அணிபெறச் செய்வன" – செய்யுள். இது நன்னூலார் சூத்திரம்.

அதிவீரராம பாண்டியனார் அரசப் புலவர். அவர் தம் நூலைக் "குட்டித் திருவாசகம்" என்பர். பொருளால் சிறந்து வடிவால் உயர்ந்து; பயனால் நயமுடையதையே எவரும் சீரிய கவிதை எனப் போற்றுவர். இத்தகைய கவிதைகளையே அவர் "கனிந்த கவிதை" என ஏத்தியுள்ளார். உண்மைக் கவிதை இயல்புக்குச் சில உவமைகள் காட்டுகிறார். இறைவனைப் பாமாலையால் துதித்தல் பெரும்பேறு. அப்பேற்றினைத் தப்பாது பெற்றார் அவர். இப்படிப் பாடும் புலமை எப்படி வந்தது என மயங்கினார். தவமும் தவமுடையார்க் கன்றோ ஆகும்? முற்பிறவியில் தவம் புரியில் இப்பிறவி ஏன் வந்தது? முன்வினைப் பயன் அல்ல காரணம். முழுதும்அறியா மூடன் இவன் – என இறைவன் இரங்கியிருக்க வேண்டும். இல்லையேல் எனக்கு நல்ல கவிதைகள் வாரா. நான் பாடிய பாடல்களா இவை? எளிய புன்கவிதை அல்லவா எனக்கு உரியது! இப்படிக் கருதி அவர் பேசுகிறார்:-

"முன்னைப் பிறவித் தவப்பயனோ முழுதும் அறியா மூடனிவன்
என்னக் கருத்தில் இரங்கியோ யாதோ அறியேன்"

என்று தவப்பயனோ–இறையருளோ–எனக்கு இப்பேறுதந்தது என்பது கருத்து. அப்பேற்றின் சிறப்பினை,

"கன்னல் பாகில் கோல்தேனில் கனியில் கனிந்த கவிபாட
அன்னம் தொகுதி வயற்கருவை ஆண்டான் என்னை ஆண்டதுவே"

என்று வியந்து காட்டுகிறார். தனது கவி இனியது என்பதற்கு மூன்று உவமைகள் தருகிறார். கன்னல் பாகுபோல் - கோல் தேன் போல் – கனிந்த கனிபோல – என்பன அவ்வுவமைகள். 'கவி இனியது' என, 'கூறியது கூறலாய்' மூன்றுவமை வேண்டுமா? கனி, தேன் பாகு - எல்லாம் இனிக்கத்தானே செய்யும்? ஒன்று போதாதா எனக் கேள்வி எழும். உண்மை தான். ஆனால், கருத்தின்றிப் பல உவமைகள் வாரா. ஒவ்வொன்றிலும் கருத்துமாற்றமும் பயனுடையநயமும் பிறிதுண்டு.

5595

கரும்பின் நின்று கட்டிபடுவது எளிதில்லை. கரும்பினை நன்கு பேணவேண்டும். உரிய காலம் தவறல் ஆகாது. பருவம் அறிந்து முற்றிய நிலையில் ஆலையில் இட வேண்டும். கசக்கிப் பிழிந்து சாறு எடுத்தல் இயல்பு. இப்படி அரும்பாடு பட்டுப் பெறுவதே கரும்பின் பாகு. கல்வி கேள்விகளால் வருந்தித் தேறவேண்டும். வருந்திய முயற்சியோடு திருந்திய பயிற்சியும் வேண்டும். சொற்களைத் திறமறிந்து தகும் இடத்தில் இடல் வேண்டும். இங்ஙனம் அரும்பாடுபட்டுப் பாடுவதே மேலான கவிதை ஆகும்

கோல் தேன் கொம்புத்தேன். தேனீக்களால் பல பூக்கள் தோறும் சென்று ஈட்டப்பெறுவது. உண்பதற்கு நனிமிக இனிய தாய்ச் சுவை தருவது. கவிஞரும் பலநூல்களைப் படித்தறிய வேண்டும். நல்ல கருத்துக்களைப் பொறுக்குதல் வேண்டும். பொறுக்கியதைப் புதுக்கியும் திருத்தியும் ஆக்கல்வேண்டும். இங்ஙனம் சுவையுற அமைவதே பழுதறு கவிதை. பல நூல் பயிற்சியால் விளைவதே சீரிய கவிதை. இதனைக் 'கோல்தேன்' உவமை நன்கு காட்டும்.

இனி 'கனிந்தகனி' க்கு வருவோம். நல்ல கனிகள் ஊத்தம் வைத்துப் பழுப்பன அல்ல. பழுக்க வைத்த கனி விழுப்பம் தராது. பருவத்தளவும் மரத்திலிருந்து பழுப்பனவே விழுமிய கனிகள் ஆகும். பருவத்தால் அன்றி அவை பழா என்பர். அப்படியே நினைத்தவுடன் வெளியிடுவது கவிதை இல்லை. சொல்லும் கருத்திலே திருந்திய காதல்உற வேண்டும். அகத்துள் நின்று அக்கருத்துக் கனிதல்வேண்டும். மனம் கனிந்த நிலையில் புறம் உருகி வெளிவரும். இப்படி வழிந்து புறப்படும் கவிதைகளேமேலானவை. அனுபவமுதிர்ச்சியால் உதிப்பனவே சீரிய கவிதை ஆகும்.

இம் முத்திற நலனும் கூடி அமைவது அருமை. செயற் கரிய செயலும் ஆகும். வெறும் பயிற்சியாலும் முயற்சியாலும் மட்டும் வராது. முற் பிறப்பின் தவ இயல்பும் துணைபுரியும். இறையருளும் நிறையவேண்டும். கவிஞன் கவிஞனாகவே பிறக்கிறான் என்பதன் கருத்திதுவே. சிறந்த கவிகள் நிறைந்த புலமை பெற்றவர்கள். எனினும் பாடுவதனைத் "தன்செயல்"

596



எனப் பேணுவதில்லை. இறையருளே உள்ளிருந்து பாடுகிற தென்பர். அதிவீரராமரும் அப்படியே சொல்லுகிறார். "கவி பாடக் கருவை ஆண்டான் என்னை ஆண்டான்" என்பர்அவர்.

கம்பரது வரலாற்றில் ஒரு நிகழ்ச்சி. சிலர் சென்று, குறித்த ஒரு சொற்குப் பொருள் கேட்டனர். கம்பர் அதனைத் தமது நூலுள் வழங்கியுள்ளார். மேற்கோளாட்சியும் வேண்டினார்கள். அவருக்கு எளிதிலே சொல்லவரவில்லை. அதற்குக் கம்பர் சொன்ன பதில்என்ன? அதனைத்தீரக்கருதுதல் இங்குச்சாலவும் நயமுடையது. "என் நூலை நான்பாடவில்லை; பாடியவள் கலை மகளே ஆவள். நான் எப்படிப் பொருளறிவேன்; ஆனால் அவள் பொய் கூறமாட்டாள்; ஏதேனும் சீரிய பொருள் இருக்கும் நீங்களே சென்று காணுங்கள்" – என்று கம்பர் பதிலிறுத்ததாகக் கதை." "நானும் அறியேன்; அவளும் பொய் சொல்லாள்" என்றது கம்பரது விடையாகும். கதையாயினும் இதனுள் கருத்து நலம் சிறக்கும்.

---

உ

## "ஞானசம்பந்தம்"

### அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது.

ஆண்டுக் கையொப்பம்

| | | |
|---|---|---|
| உள்நாடு | ரூ. | 1—8—0 |
| வெளிநாடு | ரூ | 2—0—0 |

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்
தருமபுரம், மாயூரம் P. O.

597



# ஆனந்த தாண்டவம்

வித்துவான், திரு. வி. சா. குருசாமி அவர்கள்

தமிழ்ப் பேராசிரியர், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

தென்னாட்டின் தெய்வக் கலை வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக இருப்பது ஆனந்தக் கூத்தனின் அருள் திருமேனி. கலை தெய்வத்தேனில் குழைத்தே வளர்க்கப் பெற்றிருக்கின்றது தென்னாட்டில். ஆடவரும் பெண்டிரும் அறுபத்துநான்கு கலைகளை அழகுற வளர்த்தனர். அவற்றுள் ஒரு பிரிவு நாட்டியக் கலை. நாட்டியத்தில் தமிழ்நாட்டு நங்கையர் சிறந்துவிளங்கினர். ஆடவரும் நாட்டியக் கலையில் சிறந்திருந்தமையைப் பழங்காலக் கல்வெட்டுக்களிலிருந்து நாம் உணரலாம். சிவபெருமான் ஆடியருளிய தாண்டவங்களை ஆடிக்காட்டுவார் சாக்கையர் எனப்படுவார். ஆலயங்களில் ஆடிக் களிப்பூட்டும் ஆடவர்க்கு நிலங்கள் வழங்கப்பெற்றிருந்தது. அதற்குச் சாக்கைக்காணி என்று பெயர். பறையூர் கூத்தச் சாக்கையன் என்பான் செங்குட்டுவன் முன்னர் ‘கொடுகொட்டி’ என்ற கூத்தை ஆடிக் காட்டியதாகச் சிலப்பதிகாரம் கூறும். திருக்கடவூர், திருவிடைமருதூர், தஞ்சை முதலிய தலங்களின் திருக்கோயில்களில் நடைபெறும் திருவிழாக்களில் ஆண்டுதோறும் கூத்தாடுவதற்கு கூத்தர்களை நியமித்திருந்தனர் அரசர்கள் என்ற செய்திகளைக் கல்வெட்டுக்களிலிருந்து உணரலாம்.

தில்லையம்பதியில் எல்லையிலானந்த இன்பத் திருநடனம் புரியும் இறைவனைப்பற்றிப் போற்றிப் புகழாத நூல் இல்லை. புலவர் இல்லை. நாட்டியக் கலையை நன்குவிளக்கும் சிற்பங்கள் ஆலயங்கள்தோறும் அமைக்கப்பெற்றுள்ளன. அவ்வுருவங்கள் பலவகைப்படும். சிதம்பரத்திலே பொன்னம்பலத்தில் எழுந்தருளியிருந்து புலிக்கால்முனிவர்க்கும், பதஞ்சலிமுனிவர்க்கும் அருட்காட்சி நல்கும் தாண்டவம் ‘ஆனந்த தாண்டவம்’ என்று பெயர்பெறும். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய பஞ்சகிருத்தியங்களின் தத்துவங்களை விளக்குவது இத் திருவுருவம்.

598



" தோற்றம் துடியதனில் தோயும் திதிஅமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமா
ஊன்றுமலர்ப் பதத்தில் உற்றதிரோ தம்முத்தி
நான்றமலர்ப் பதத்தே நாடு "

என்பது உண்மைவிளக்கம். இறைவனது நான்கு திருக்கரங்களின் அமைப்பை மனங்கொள்க. ஒருகையில் துடி இருப்பது படைத்தலைக் குறிப்பது. அபயகரமாக அமைந்திருக்கும் கை காத்தலைக் குறிப்பது. நெருப்பு அமைந்திருப்பது அழித்தலைக் குறிக்க. கால்கள் இரண்டில் ஒன்று ஊன்றிய கால் இது மறைத்தலைக் குறிப்பது. தூக்கிய திருவடியாகிய குஞ்சிதபாதம் அருளலைக் குறிப்பது. வளைந்து தூக்கிய காலைக் குறிக்கும் திருக்கை அருளலைச் சுட்டிக்காட்டுவதுபோலமைந்தது. இப்படி நடராசப்பெருமான் திருவுருவ அமைப்பை விளக்குகின்றது இப்பாடல். மற்று, ஐந்தெழுத்தை விளக்குவதாகவும் மற்றும் சில தத்துவங்களை விளக்குவதாகவும் கீழ் வரும் பாடல்கள் குறிப்பிடுகின்றன.

" ஓங்கார மேநல் திருவாசி உற்றதனில்
நீங்கா எழுத்தே நிறை சுடராம். "

" மாயைதனை உதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாயஅமுக்கி அருள் தானெடுத்து—நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாத் தானமுத்தல்
தானெந்தையார் பரதந் தான். "

" சேர்க்கும் துடிசிகரம் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம்—பார்க்கிலிறைக்கு
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கும் மகரமது தான். "

தில்லைக் கூத்தனின் திருப்புகழ் பாடி எல்லையிலாப் பெருமைகொள்ளும் இலக்கியங்கள் எண்ணற்றவை. திருமூலர் திருமந்திரம் நடராசப்பெருமானின் திருக்கூத்தின் உண்மை, திருவம்பலச்சக்கரத்தின் உண்மை முதலியவைகளைக் கூறும். தெய்வத் தமிழாம் தேவாரமும் திருவாசகமும், மற்றும் பல நூல்களும் ஆனந்த தாண்டவத்தின் அருள்வெள்ளத்தில் திளைத்துப் பாடுகின்றன; பரவுகின்றன. " குனித்த புருவமும் கொவ்

599

வைச்செவ்வாயிற் குமிண்சிரிப்பும், பணித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால்வெண்ணீறும், இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்ருல் மீண்டுமொருபிறவி எனக்குக் கொடுத்தருள்க" என்று வேண்டுகின்ருர் திருநாவுக்கரசர். 'தில்லைச் சிற்றம்பலத்தானது ஆடல், திருவடி, உடுத்த உடை, கச்சு, கை, சிரித்த முகம் இவைகளைக் கண்ட கண்களே கண்கள்' என்றும் கூறுகின்ருர். எம்பெருமான் குறிப்பு 'என்று வந்தாய் என்று கேட்பதுபோல உள்ளது' என்றும் கூறுகின்ருர். மற்றும் திருஞானசம்பந்தரும், சுந்தரரும், மணிவாசகரும் தில்லைக்கு முதலிடம் தந்து திருப்பதிகங்கள் பாடியுள்ளனர். மணிவாசகரின் திருக்கோவையாரை இவ்விறைவனே எழுதியதாகக் கூறுவர். திருவாசகம் தில்லைச் சிற்றம்பலவன் பெருமையை விரிவுறக் கூறும் நூல்.

இனி, சங்க இலக்கியங்களில் இறைவனுடிய கூத்துக்களாக உள்ளனவற்றைக் காண்போம். செந்தமிழ்த்தேனும் சிலப்பதிகாரம் இறைவனுடிய ஆடல்களாக மூன்று ஆடல்களைக் கூறுகிறது. கலித்தொகைக் கடவுள் வாழ்த்து இறைவன் திருக்கூத்துக்கள் சிலவற்றைச் செப்பும். இறைவன் ஆடிய ஆடல்கள் பல என்றும் அவை நூற்றுக்கு மேற்பட்டவை என்றும் புராணங்க்ள் கூறும். அவற்றுள் எழுவகைத் தாண்டவங்கள் சிறப்புள்ளவை. இசையில் ஏழு எழுத்துக்கள் சிறப்புள்ளவை போல நாட்டியத்திலும் இறைவன் ஆடிய இவ்வேழு ஆடல்கள் சிறப்புள்ளவை. அவற்றுள் ஐந்தொழில் விளக்கும் ஆனந்த தாண்டவமே சிறப்புடையது. இது இறைவன்மட்டும் ஆடிக் காட்டுதற்குரியது. திருவாரூர்த் தியாகேசப் பெருமான் ஏழு தலங்களில் எழுந்தருளி ஏழு நடனங்கள் செய்வர். இவை மேற்கூறிய ஏழு ஆடல்களின் வேருனவை. தியாகேசர் திருவாரூர், திருநள்ளாறு, நாகை, திருவாய்மூர், வேதாரண்யம், திருக்குவளை, திருஒற்றியூர் ஆகிய ஏழு தலங்களில் எழுந்தருளியிருக்கிருர். இதற்குச் சப்த விடங்கத் தலங்கள் என்று பெயர். வீதிவிடங்கர், நகரவிடங்கர், சுந்தரவிடங்கர், நீலவிடங்கர், புவனிவிடங்கர், அவனிவிடங்கர், மாணிக்கவிடங்கர் என்று இவ்வேழு மூர்த்திகளுக்கும் பெயர். இங்கு ஆடிய நடனங்கள் அசபா நடனம், உன்மத்த நடனம், அலை நடனம், கமல நடனம், அமிர்த நடனம், பிரம நடனம், வகுள நடனம் என்பன. நடராசப்பெருமான் ஆடிய ஏழு ஆடல்கள் காளிகாதாண்டவம்,

கௌரிதாண்டவம், சந்தியாதாண்டவம், சங்காரதாண்டவம், திரிபுரதாண்டவம், ஊர்த்துவதாண்டவம் என்னும் ஐந்தொழில் களைத் தனித்தனி புரிவன ஆறு. அவற்றை ஒருமிக்கச் செய்வ தாகிய ஆனந்த தாண்டவம் மற்ருென்று. ஆக ஏழு.

கலித்தொகையில் கடவுள் வாழ்த்துப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவஞர். அம்பிகை அருகில் நிற்கிருள். அங்கு வேறு யாருமில்லை. காலம் சர்வசங்கார காலம். எல்லா உயிர்களும் ஒடுங்கிய அந்நேரத்தில் இறைவன் சினங் கொண்டு ஆடும் ஆடல் அது. ஆடலின் பெயர் 'கொடு கொட்டி' ஆடுகின்ற அசைவிற்கு ஏற்ப அம்பிகை சீர் இசைக் கின்ருள்.

"படுபறைபல இயம்பப் பல்லுருவம் பெயர்த்துநீ
கொடுகொட்டி ஆடுங்கால் கோடுயர் அகலல்குல்
கொடிபுரை நுசுப்பினுள் கொண்டசீர் தருவாளோ"

சினங்கொண்ட அந்த செஞ்சடைக் கடவுளைச் சிரித்த முகங் காட்டிச் சீரிசைத்துத் தணிவிக்கும் மென்மை அம்பிகைக்குத் தானே உண்டு?

இவ்வாடலைச் சிலப்பதிகாரம் விரிவாகக் கூறும். திரிபுர சங்கார காலத்து இவ்வாடல் ஆடியதாக இளங்கோவடிகள் கூறுகின்ருர். காவிரிப்பூம்பட்டினத்தின் கவின் பெறு காட்சி களையும், கடைவீதிகளையும், இந்த ஊரில் நடைபெறும் இந்திரவிழாவின் விதவிதமான கேளிக்கைகள் ஐவகை மன்றங்களின் அமைதி இவைகளையும், இமையாத கண் கொண்டு கண்டு காதலிக்கும் காண்பிக்கும் வித்தியாதர வீரனும் அவன் மனைவியும் மணிமண்டபத்தில் மாதவி ஆடிய பதினொரு ஆடல்களையும் பார்த்து மகிழ்கின்றனர். ஆண் பெண் இந்த வடிவங்களைத் தாங்கி அவள் ஆடிய ஆட்டம் 'ஆடவர் மனங்களென்னும் அரங்கின் மேல் ஆடிய' ஆடல் களாகத்தான் இருந்தன. இவ்வாடல்களில் மூன்று சிவ பெருமானுடிய ஆடல்கள். அவற்றுள் கலித்தொகைக் கடவுள் வாழ்த்துக் கூறிய கொடுகொட்டியும் ஒன்று.

"திரிபுர மெரியத் தேவர் வேண்ட
எரிமுகப் பேரம்பு ஏவல் கேட்ப
உமையவள் ஒருதிறனாக ஓங்கிய
இமையவன் ஆடிய கொடுகொட்டி ஆடல்"

என்பது சிலம்பு. இடுகாட்டில் ஆடும் இவ்வாடல் அழித்தற் ருெழிலே உட்பொருளாகக் கொண்டது. கொடுமையான காட்சி கண்டு கைகொட்டி ஆடுதலால் இப்பெயர் பெற்ற தென்று உரையாசிரியர் கூறுவர்.

கண்ணகிக்குக் கல்லெடுத்துக் கங்கை நீராட்டி கனக விசயர் தலையிலேற்றிச் செந்தமிழ் நாட்டிற்குக் கொண்டுவந்த பிறகு சேரன் செங்குட்டுவன் தன் இமயவெற்றியை எண்ணி எண்ணி இன்புற்றிருக்கிருன் ஒருநாள். ஆடகமாடம் என்னும் அரண்மனைப் பகுதியில் அரசியுடன் வீற்றிருக்கிருன். மாலை நேரம். இந்த இன்பப் பொழுதிற்கு ஏற்றவகையில் நாட்டியம் ஒன்று தயாராகிறது. ஆடுவோர் பறையூர்க் கூத்தச் சாக்கை யனும் அவன் மனைவியும். இருவரும் சிவன் உமையவள் வேடந்தாங்கி கொடுகொட்டி என்னும் கூத்து ஆடியதாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

"திருநிலைச்சேவடி சிலம்பு புலம்பவும்
பரிதரு செங்கையிற் படுபறை ஆர்ப்பவும்
செங்கண் ஆயிரம் திருக்குறிப்பு அருளவும்
செஞ்சடை சென்று திசைமுகம் அலம்பவும்
பாடகம் பதையாது சூடகம் துளங்காது
மேகலைஒலியாது மென்முலை அசையாது
வார்குழை ஆடாது மணிக்குழல் அவிழாது
உமையவள் ஒருதிறனுக ஓங்கிய
இமையவன் ஆடிய கொடுகொட்டிச்சேதம்"

என்று இவ்வாடலின் சிறப்பை இளங்கோ எழுதுவர்.

அடுத்துக் கலித்தொகைக் கடவுள்வாழ்த்துக் கூறும் ஆடல் பாண்டரங்கம். பொன், வெள்ளி, இரும்புக்கோட்டைகளைப் பறக்கும்படி அமைத்துக்கொண்டு உலகிற்கு இடர் இழைத் தனர் மூன்று அசுரர்கள். அவர்களைச் சிவபெருமான் புன்முறுவல் பூத்துப் பொடியாக்கினுர் என்பது புராணம். புன்முறுவலால் மும்மலங்களைப் பொடியாக்குதல் இதன் தத்துவம். அந்தப் பொடியைத் தம் பொன்னுர் மேனியிற் பூசிக்கொண்டு இறைவன் இத் திருக்கூத்தை ஆடுகிருர். பாண்டு வெண்மை நிறமல்லவா? பாண்டரங்கத்தினைப் பரமன் ஆடுங்கால் பக்கத் தில் பார்வதி நின்று தூக்கு இசைக்கின்ருள்.

6z 602



"மண்டமர்பல கடந்து மதுகையால் நீறுஅணிந்து
பண்டரங்கம் ஆடுங்கால் பணைஎழில் அணைமென்தோள்
வண்டரற்றும் கூந்தலாள் வளர்தூக்குத் தருவாளோ"

என்பது கலித்தொகைக் கடவுள் வாழ்த்து. திரிபுரசங்கார காலத்து இறைவன் சினங்கொண்டாடிய திருக்கூத்தை இறைவி அருகிலிருந்து அமைவிக்கும் அழகு அறிந்தின்புறற் குரியது. இவ்வாடலைச் சிலப்பதிகாரம் திரிபுரசங்காரகாலத்துத் திசைமுகன் காண ஆடியது என்று கூறும்.

"தேர்முன்னின்ற திசைமுகன் காணப்
பாரதி ஆடிய வியன்பண்டரங்கமும்."

என்பது சிலப்பதிகாரப் பகுதி. இக்கொடுகொட்டி பாண்டரங்கம் ஆகிய இரண்டு கூத்துக்களும் திரிபுரதாண்டவத்தின் பகுதிகள்.

---

## மதிப்புரை

### தேவிமான்மியம்

ஆசிரியர்:- திரு, பொ. நல்லதம்பிப் பிள்ளை அவர்கள். உரை ஆசிரியர்:- ஈரோடு, செங்குந்தர் ஹைஸ்கூல், தலைமைத் தமிழாசிரியர், வித்துவான், திரு. வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் அவர்கள். 100 பக்கங்கள். குறிப்புரை மிக்க தெளிவுண்டாக்கும் சிறப்புடையது. அவர்களால் ஏட்டிலிருந்து வெளியான தமிழ் நூல்கள் பல. இன்றும் பலஏடுகள் அவர்களிடம் உள்ளன. செல்வமும் கல்வியும் சிறப்பும்உடைய திரு. தெய்வசிகாமணியைத் தமிழுலகம் பயன்படுத்திக்கொள்க. இது பதிப்பாசிரியரிடத்தில் கிடைக்கும்.

### தஞ்சைமணி

ஆண்டு மலர். கதிர் 2. மணி 48. ஆசிரியர் :- குடந்தை, திரு. எஸ். கணபதி அவர்கள். தமிழகத்தின் எக்கட்சியிலும் ஈடுபடாத தனிப் பேரிதழ். நல்ல கட்டுரைகள் கொண்டது. பெயர்க்குத் தக்கவாறு தஞ்சை வட்டத்துப் பிரமுகர் பலர் உருவக் குறிகளுடன் கூடியது.

முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்.

# " கலை "

திரு. அ. தா. ப. திருஞானசம்பந்தம் அவர்கள்

## கல்விப்பயன்

இஞ் ஞாலத்தின்கண் வாழும் மக்களுக்குக் கலை அவசியந் தானு? கலையின்றி வாழமுடியாதா? கலையளிக்கும் உயர்வு என்ன? என்பன போன்ற பலவேறு கேள்விகள் கலையைப் பற்றிச் சிந்திக்கும்பொழுது தோன்றுகின்றன. பொதுவாகக் கலையுணர்வு மக்கள் இடையில் இன்றேல் காலப்போக்கில், அவர்கள் மக்கள் இயல்பிற்குமாருன நிலையை எய்துவர் என்பது திண்ணம், கலைதான் மக்கள் உள்ளத்தே மேன்மையானதோர் உணர்வை எழுப்புகின்றது. கலையைக் கீழை நாட்டார் நோக்கும் தன்மை வேறு. மேலை நாட்டார் நோக்கும் தன்மை வேறு. கீழை நாட்டு மக்கள் கலையை அறுபத்துநான்கு கூறுகளாக்கி அறிவித்துள்ளனர். 'ஆயகலைகள் அறுபத்து நான்கனையும், என்றதை நோக்குமின்! மேற்கூறிய கூறுகளுள்ளே பேச்சுக்கலை எழுத்துக்கலை, கணிதக்கலை, நாடகக்கலை, இசைக்கலை, அலங்காரக்கலை, சாத்திரக்கலை, நிகண்டுணர்ச்சி, இதிகாசமியற்றல், காவியம் இயற்றல், குதிரைப்போர், யானைப்போர் முதலியன அடங்கும். மேலைநாட்டு மக்கள் கலையை இரு கூருக ஆக்கி உண்மையை உணர்த்துவர். அவையாவன, 1-கலை 2-விஞ்ஞானம் (Asts & Science) கீழை நாட்டு மக்கள் அறுபத்து நான்கு கலை ஞானங்களுக்கு மேலாக ஆத்மஞானக் கலையை உணர்ந்து அதன் வழி ஒழுகி வந்தனர், கலை அறிவு நிரம்ப நிரம்ப, ஆண்டு, இறைவன்பால் பற்றுள்ளம் இயற்கையாக எழும், அங்ஙனம் எழாதிருக்குமேல் அது மக்களிடத்தில் மனக்கோளாறு தோன்றியுள்ளது என்பதற்கு அறிகுறியாகும், உலகமறை அளித்த பெருந்தகை !கற்றதன் பயன் தூய அறிவு படைத்தவனுன இறைவனின் நற்றுள்களை வணங்குதலாகும் என்று விளக்கியுள்ளார். நூல்களை மட்டில் மிகப் படிப்பதால் ஓரளவிற்கு அறிவு பெருகி வளருமேதவிர இறைநிலை இயைந்த கல்வியறிவாக அது விளங்காது.

கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றுள் தொழாஅ ரெனின்

## கல்வியும் கலையும்

கல் என்ற பகுதியினின்றும் கல்வி, கலை என்ற சொற்கள் தோன்றுகின்றன. மண்ணைத் தோண்டத் தோண்டக் குழி உண்டாகும். அதுபோல ஒரு பெரும் பாறையின் மேல் குழி காணவேண்டுமென்றால், தோண்டினால் பயன் விளையுமோ? விளையாது! பெருங்கருங் கற்பாறையைப் பொத்தினால்தான் குழி தோன்றும். அதிக உழைப்பினால் கல்லும் போதுதான் பறையைக் குழி செய்ய முடிகிறது. அதுபோல அரிவு என்னும் பேருளியின் துணைக்கொண்டு, மனம் என்ற பாறையைக் பொத்தும் பொழுதுதான் கலையுணர்வு என்ற பேரறிவு வளர ஆரம்பித்து, அறியாமை அழிந்தொழிகின்றது. கலையுணர்வின் பெருக்கமே கல்வி முதிர்ச்சியின் அறிகுறி.

உலக மக்கள் தேடும் செல்வமெல்லாம் புறத்துழைப்பினால் நல்கி, அதன் மூலம் பெறும் நன்மையைத் துய்க்கவேண்டியுள்ளன. ஆனால் கல்வியோ அப்படிப்பட்டதல்ல. மக்கள் தனிமையில் அமைதியுற்று இருந்து பல நேரம் சிந்தித்து, சிந்தித்தவற்றை மனத்தகத்தே அமைத்து, அமைத்தவற்றைப் பிறருக்கு ஈந்து பயன் கண்டு உவப்பச்செய்வது புறத்துழைப்பால் தோன்றும் செல்வம் சின்னாட்கள் உளதாகி, பின்னர் மறைந்தொழிகின்றது. அதனோடு அகத்துழைப்பால் தோன்றும் செல்வம் என்றும் நிலைபெற்று நின்று இன்பம் நல்கிச்சிறப்புற விளங்குகின்றது, கல்வி என்னும் உள்ளத்தே பொருள் இருக்க உலகமெலாம் பொருள் தேடி உழல்வதேனோ” என்று ஒரு முது பெரும்புலவர் புகன்றுள்ளார். பெருநாவலரான திருவள்ளுவரும் “கேடில் விழுச்செல்வம் கல்வி, ஒருவற்கு மாடல்ல மற்றயவை” என்று கூறியிருப்பது சிந்தித்து அறியத்தகுந்ததாகும்.

## கலையும் புலவர்களும்

கலைவழி மன்னிய அறிவுகொண்டு புலவர் பெருமக்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை நன்கு அறிகின்றோம். சைவப் பெருமுனிவரான துறைமங்கலம், சிவப்பிரகாச அடிகளார் கலை என்ற சொல்லை எவ்வளவு அழகாக இறைவனுக்கு ஏற்றம் தர வேண்டிய இடத்தில் அமைத்துச் சிறப்பிக்கச் செய்கின்றார் என்பதை நோக்குங்கள். திங்கள் வார்சடைத் தெய்வநாயகன்

605

ஒரு கலையேனும் உணரான்'' – நால்வர் நாண்மணிமாலை இவ்விடத்தில் சிலேடைப் பொருளிலே அமைத்து, கலை என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். ஒரு கலையும் உணராதவன் சிவபெருமான் என்கிற பொருள் தோன்றல் மேலெழுந்த பொருளாகக் காட்டி, கலைகளின் அறிவுக்கெல்லாம் அப்பால் (எல்லாத் தத்துவங்களையும் கடந்து) நிற்கிறான் சிவன் எனும் செம்மேனியம்மான் என்பதை விளக்கமாகத் தெரிவிக்கின்றார் அடிகளார்.

தம் இளமைப் பருவத்திலேயே, செந்திலாண்டவன் இன் அருள் பெற்ற குமரகுருபர அடிகளார் தாம் இயற்றிய சகல கலா வல்லி மாலை என்னும் நூலில் தமிழ்ச் சிறப்புணர்த்தும் பொழுது கலைத்தமிழ் எனப்புகல்கின்றார். வெண்மையான மடப்பம் பொருந்திய அன்னமே! சகலகலாவல்லியே! நின்னடித் தொழும்பர்கள் தீட்டும் கலைத்தமிழான தெள்ளமுதத்தை என்பால் தெளிக்கும் வண்ணம் அருள்புரிவாயாக என்று அடிகளார் வேண்டுதல் செய்கின்றார்.

''பாட்டும் பொருளும் பொருளால் பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும் படிநின் கடைக்கண் நல்காய் உளம்கொண்டு தொண்டர்
தீட்டும் **கலைத்தமிழ்த்** தீம்பால் அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே சகல கலாவல்லியே!''

தீஞ்சுவைத் தேனெனத் தித்திக்கும். அருளாரமுதப் பெரு வெள்ளத்தில் தோயவைக்கும் திருவாசகத்தின் கண்ணே கலை என்ற சொல் எவ்வளவு அழகாக 'ஆளப்பட்டிருக்கிறது என்பதைக்கண்டு இன்புறுங்கள்.

''கலை நவின்ற பொருள்க ளெல்லாம்'' (திருவாசகம்)

சிலப்பதிகார காலம் முத்தமிழ் உயர்ச்சி அடைந்த காலம் எனலாம். பல கலைகள் அந்நேரத்தில் சிறப்புறத் திகழ்ந்தன என்பதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுகள் உள. மாடமலி மதுரையைப்பற்றிச் சிறப்பிக்கவரும் இளங்கோ அடிகள் அம் மாநகரின் தெருக்களைப்பற்றி அழகுறப் பேசுகிறார். கலைஞர்கள் வாழும் தெருக்கள் இரண்டு இருந்தன என்றும், வேறு வேறு

வகைப்பட்ட கலையறிவுடைய அறிஞர்கள் இருபெரு வீதியில் வாழ்ந்தார்கள் என்றும் இளங்கோ அடிகள் தெரிவிக்கின்றார்.

"எண்ணெண் கலையோர் இருபெரும் வீதி".

## கலைஞர் சிறப்பு:

மக்களாய்ப் பிறந்தோர் பிச்சை புகினும் கற்றறிவு படைத்தவர்களாக விளங்கவேண்டும் என்று மூதறிஞர் கூறியுள்ளனர். மக்கள் தோன்றியதன் பயனே நல்லோர் தொடர்பில் இருந்து நல்லன அறிந்து வாழ்தலேயாகும். நல்லன அறிவதின் முகமாக அவனைப் பற்றிய எண்ணங்களை எழுப்பும் அருமை பெருமை வாய்ந்த ஞான நூல்களைப் பயின்று இன்பம் அடைய மக்கள் முயலல் வேண்டும். மிருகங்களையும் மனிதரையும் பார்க்குமிடத்து மனிதர் எவ்வளவு நன்மையுடையவரோ அவ்வளவு தீமையுடையவர், விளங்கிய நூல்களைக் கற்றாரைப் பார்க்குமிடத்துக் கல்லாதவர் என்றார் வள்ளுவர். மிருகத்தைப் பார்க்கினும் நலத்தால் மனிதர் உயர்ந்த அளவும் நூல்களைக் கல்லாதவரைப் பார்க்கினும் கற்றவர் அறிவாலுயர்ந்த அளவும்சமம்என்று தெளிவாக அறியக்கிடக்கின்றது என்பது வள்ளுவர் பெருந்தகையின் கருத்து.

"விலங்கொடு மக்களனைய ரிலங்கு நூல்
கற்றாரோ டேனை யவர்" (குறள் 410)

கலையுணர்வு பெருகுவதற்கு, கலை ஞானமும், ஆத்மஞானமும் ஒருங்கே அமையப்பெற்ற பெரியோர்கள் கூறும் கருத்துக்களைக் காதாற்கேட்டு ஒன்பான் சுவைகளை உணர்தலாகும். வாயால் உணரப்படும் அறுபான் சுவைகளையே உண்ணும் விருப்புடையோர் உலகிடை வாழ்ந்தா லென்ன? இறந்தா லென்ன? என்று வினவுகின்றார் தேவர்.

"செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்?" (குறள் 420)

வாழ்வியல்

# கற்பனையும் கடவுட் கொள்கையும்

திருமதி. க. மீனாட்சியம்மாள் அவர்கள்
தமிழாசிரியர், விருதுநகர்.

மேற்காணும் தலைப்பினை எண்ணியது என்னுள்ளம். இவ் எண்ணத்தை எழுப்பியவன் என்உள்ளுறை உத்தமன். ஆகவே அவன் பெரியார் ஒருவரை என் கண்முன் காட்டினான். அவர் தாம் கற்பனைக்களஞ்சியம் எனப் போற்றப்படும் சிவப்பிரகாசர். இறையருள் பெற்ற இன்பக் கவி; கலையருள் பெற்ற கற்பகம்; குருவருள் பெற்ற குன்று மணி விளக்கு.

இவர், புண்ணியத் தலம் எனப் போற்றும் புனிதத் திரு நகராம் காஞ்சியில் தோன்றியருளினார். இவர் தந்தையார் வேளாண் மரபினுக்கே குருவாயமைந்த குமாரசாமி தேசிகர். இவருடன் பிறந்தார் வேலாயுதம், கருணைப்பிரகாசம், ஞானம்பிகை என்னும் மூவருமாவர்.

கவிதை இன்பம் கண்ட கவிஞர் சிவப்பிரகாசர் "யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்னும் பொன் மொழிக்கு இலக்காய் வாழ்ந்தவர். ஆகவே, நூல் பல இயற்றினார். அவை யாவும் அருள்நெறியொடு நுண்ணறிவைப் பெற்று விளங்கின. அவற்றுள் எல்லாம் சிறந்து கற்பனையும் கடவுட் கொள்கையும் மலிந்து விளங்கியது பிரபுலிங்கலீலை யாகும். இதை இலக்கிய உலகம் கருவூலம் என்று கண்டு போற்றுகின்றது.

இலக்கிய உலகில் ஏற்றம் பெற்றுள்ள இவர், தாம் இயற்றிய பிரபுலிங்கலீலையை இருபத்தைந்து கதிகளாகத் தொகுத்து முடித்துள்ளார். யாவும் தத்துவக் கருத்துக்களோடு காட்சி யளிக்கின்றன. ஒவ்வொரு கதியும் ஒவ்வொரு சிறந்த உண்மையையே உணர்த்திநிற்கின்றது. இவற்றுள் முதற்கண் அமைந்தது துதி கதியாகும்.

இறைவழிபாட்டின் இன்பம்கண்ட இவ்வாசிரியர் பண்டைய மரபினில் மாறுபடாத செம்மையுள்ளம்கொண்ட சீலர்.

ஆகவே, தாம் இயற்றிய பிரபுலிங்கலீலையில் விக்கினம்காக்கும் விநாயகனைத் துதிக்கின்றார். இறைவனை ஒரு மாமணி என உவமிக்கின்றார். இறைவனிடத்து இடைவிடாக் காதல் கொண்ட இவர் அவரைத் தொழுதால் இருவினையும் அகலும் என உறுதிகொண்டவர். இவ்வுறுதி மக்கள் மனத்தில் நிலை பெற்று அவர்கள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டியாக அமைத்தார் சிவப்பிரகாசர்.

இவர், தாம் வழிபடும் இறைவன் மும்மூர்த்திகளுக்கும் முதல்வன் என்கின்றார். "உலக மளந்த மாலும் நான்முகனுங் காவாயென நின்றேத் தெடுப்ப" என்று இவர் கூறியதொடரால் இதனை நாம் அறியலாம்.

இவர் முற்றத்துறந்த முனிவர் ஆயினும், உலகியல் அறிவும் கற்பனைச் செறிவும் கலந்த பாங்கில் தம் நூலை முடித்துள்ளார். தாம் வழிபடும் சிவம், உருவம், அருவம், ருபாருபம் என்ற இயல்பில் நின்று அருள் செய்யும் பேரறிவுப் பெருங்கடல் என்றறிந்தார் இக்கருணைக்கடல். ஆகவே, துதிகதியில் தம் கலையறிவையும் குழைத்துக் கடவுள் வணக்கங்களைக் கூறியுள்ளார்.

நம் கவிஞர் சிகாமணி கவியரசரும் ஆவார். இவர், புவிப் பெருக்கம் பெண்மையும் ஆண்மையும் கலந்த பெற்றிமையால் இறையருள் கொண்டு வளர்கின்றது என்பதை நன்கு அறிந்தவர். உலகினர் போற்றும் உயர்வினுக்குரிய இத்துறவியார் அகப்பொருளின் ஆழத்தையும் தம் உணர்வால் அறிந்து கூறியுள்ளார். கற்பினுக்கு அணிகலனுயமைந்த ஒரு பெண். இவள், தன் ஒழுக்கம் அத்துடன் கணவன் ஒழுக்கம் இரண்டையுமே காக்கும் பொறுப்பிற்குரியவள். இவ்வாறமைந்த மகளிரின் மாண்பு மிக்க உள்ளக்கிடக்கையை இக்குரவர் சிகாமணி நன்கு அறிந்தார். ஆகவே, ஊடற் குறிப்பை உமாதேவியின் மேல் ஏற்றி மொழிந்தருளினர். ஏன்? மகளிரின் மாணிக்கம் அன்றே அவர். உமாதேவியமரும் இறைவனிடத்தில் கங்கையும் அமர்ந்துள்ளாள். மாற்றுள் தனக்குச் சமமாக எவ்வாழ்வில் பங்குகொள்ளினும், இவ்வாழ்வில் பங்குகொள்வது தகாது எனக் கருதுகின்ருளாம் உமாதேவி. என்னே! இக்கவிஞரின் கற்பனை கலந்த உலகியல் அறிவு.

அறிவாற்றலில் மிக்க சிவப்பிரகாசர், புராணத்தின் மூலமாகப் பல தத்துவங்களையுணர்த்தி மக்களின் மனம் நிலைபெற்று வாழக் கருதிய காலத்தவர். கூட்டத்தின் தலைவனும், ஓங்கார வடிவனும் ஆகிய கணபதியை இவர் துதிக்கின்றார். கணபதி காம வயப்படாதவர். இவர் முன்னிலையில் காமனின் கருப்பு வில் ஒடியும்; அவ்வில்லில் அமைக்கும் மலராகிய அம்பு சிதறும்; நாணாகிய வண்டுகள் கலைந்துபோம் என்று கணபதிக்கு நல்ல ஏற்றம் கற்பிக்கின்றார். எத்தொகுதியிலும் தலைமை ஏற்ற முடையதாதல் வேண்டும் என்பதே இவ்வாசிரியரின் எண்ணம் போலும்.

ஒப்பற்ற ஒரு பரம்பொருளே சத்து, சித்து, ஆநந்தம் எனச் சாற்றும் முடிவுக்கு உரியது. இவற்றையே நம் முன்னோர் இறைவன், இறைவி, குழந்தைகள் என்ற முறைமையிலமைத்து உருவவழிபாடு செய்து உண்மை ஞானம் பெற்றனர். ஏனெனின், அருவநாட்டத்தில் அமைதிபெறாத உள்ளம் உருவநாட்டத்தைக் கொண்டாயினும் உய்தி பெறுதல் வேண்டும் என்ற கருணைநோக்கேயாம். இக்கருணைநோக்கினைக் கண்டறிந்த கருணாலயர் அன்றோ இச்சிவப்பிரகாசர்? ஆதலின், குழந்தைகளுள் ஒருவனாகிய சுப்பிரமணியத்தைத் தொழுகின்றார். இறைவனும் இறைவியும் அமர்ந்திருக்கிறார்கள். அப்பொழுது மயிலை ஊர்தியாகக்கொண்ட சுப்பிரமணியன் வருகிறான். தந்தை பாம்பையும் மண்டை ஓட்டையும் அணிகலனாகக் கொண்டவர். ஆகவே, அவர் அணிகலன்களுள் ஒன்றாகிய பாம்பு மயிலைக் கண்டவுடன் அச்சங்கொள்கிறதாம். இறைவன் அணிந்துள்ள மற்றை அணிகலனாகிய மண்டை ஓட்டினுள் நுழைந்து மெள்ளத் தலையை நீட்டிப் பார்த்துத் திரும்பவும் உள்ளே வாங்கிக்கொள்கின்றதாம். இவ்வாறு சித்திரித்துக் காட்டியுள்ளார் சிவப்பிரகாசர். இவ்விடத்தில் கவிஞரின் கற்பனைக் கவின் எப்படி?

கவினுறக் கவியமைக்கும் வன்மை கொண்ட சிவப்பிரகாசர் இந்நூலின் தலைமகனாக ஒரு பரம்பொருளையே குறிப்பிடுகிறார். அப்பொருளாந் தலைவனுக்கு அல்லமன் என்ற பெயருமிட்டுப் பெருமிதங்காண்கிறார். அல்லமனுடைய அருஞ்செயலை நூலினுள் புகுந்தபின் ஆங்காங்கே நாமும் காண்போம். உலகில் எப்பொருளும் நிலைத்து நிற்கும் என்று நம்பச் செய்வது

மாயையாகும். அம்மாயை வயப்படாத மக்களே இவ்வுல கிடையும், எவ்வுலகிடையும் காணுதல் அரிது. இத்தன்மை வாய்ந்த மாயையின் வயப்பட்டோர் அல்லலுறுவர். அறுபத்து நான்கு கலையையும் ஐயமறக் கற்றவரையும் இது வாட்டும். சித்தர் கணத்தையும் செயலறச்செய்யும். தேவரையும் திடுக் கிடச்செய்யும். தத்துவ ஞானம் பெற்ற முனிவர்களையும் மூடமாக்கும். நான்முகனையும் நடுங்கச்செய்யும். கல்லை மிதித்துப் பெண்ணாக்கிய திருநெடுமாலையும் தன்னுள் ஆழ்த் தும். இத்தகைய வன்மை மிக்க மாயையை வென்று மகிழ் வூட்டுபவன் சிவபெருமான் ஒருவனே. அவனன்றே அல்லமன் என்கிறார் இந் நூலாசிரியர். "மாயைத் தலையை மிதிக்கும் அல்லமன்" என்பதே அவர் கூறிய தொடர்.

இந்நூலாசிரியர் தான் கூறும் நூலில் பாத்திரங்களாகப் பலரை அமைக்கின்றார். அப்பாத்திரங்களுக்குள் மிகச் சிறந்த வரும் பக்தியிற் பிணிப்புண்டவருமாகிய புனிதர் ஒருவர் உளர். அவர்தாம் 'வசவேசன்' என்று போற்றும் பேற்றிற்குரியவர். இவரைப்பற்றி நூலினிடத்துப் பின்பு காண்போம். இங்கு அவரை நம் ஆசிரியர் எவ்வாறு போற்றிப் புகழ்கிறார் என்பதை மட்டும் சிறிது நோக்கிக் காண்போம். கள்ள வேடம் பூண்டு வருபவனையும் வேடத்திற்குரிய சிறப்பில் விளங்கச் செய்பவர் வசவேசர். வசவேசரைப்பற்றி ஆசிரியர் கூறிய பாடலை அப்படியே நோக்குவாம்.

"வெள்ளவேணிப் பெருந்தகைக்குயாம் செய்யடிமை மெய்யாகக்
கள்ள வேடம் புனைந்திருந்த கள்வ ரெல்லாங் களங்கமறும்
உள்ள மோடு மெய் யடியாராக வுள்ளத்துள்ளும் அருள்
வள்ளலாகும் வசவேசன் மலர்த்தாள் தலையால் வணங்குவாம்"

உலகில் மக்களுள் சிறந்தவர் தத்தம் தொழிலுக்கென ஏற்பட்ட ஒவ்வோர் அடையாளச் சின்னத்தைத் தரிப்பதை இன்றும் நாம் கண்கூடாகக் காணுகின்றோம். அசோகச் சக்கரமும் அக் கருத்தில் அமைக்கப்பட்டதல்லவா? வேடத்திற்கு ஒத்தசெயல் தான் மக்களிடை விரும்பப்படுகின்றது. பொய்யடியாரையும் மெய்யடியாராக்கும் புனிதத் தன்மை வசவரிடம் அமைந்து இருந்தது என்பதை அவரைக் குறித்துத் துதித்த பாடலால் நாம் அறிகின்றோம்.

611

உலகில் மக்கள் பலர் சேற்றிடை வாழும் பிராணியை யொத்துத் தத்தங் கருத்தில் தோன்றுவதே சரி என்று கடைப் பிடிக்க ஆரம்பித்து வாழ்வைக்கெடுத்துக் கொள்கின்றனர். வாழவகை தெரியாது வழுக்கி வீழும் மக்கட்கு சைவ நெறி யாகிய நன்னெறியை எடுத்தியம்பும் பெரியார் நம்மிடையே பலர் தோன்றினர். அவர்கள் காட்டிய செந் நெறியைக்காட்டும் சீலர் ஒருவரை நம் சிவப்பிரகாசர் சிருட்டித்துள்ளார். அவரே "சென்ன வசவன்" என்று பாராட்டும் பான்மை மிக்கவராவார். கடவுளுடைய பல நிலைகளையும் அறிவிப்பவரே இவர்.

இறைவனைப் புகழ்ந்து பாடி எலும்பைப் பெண்ணுக்கும் ஆற்றல் கண்டவர் சீகாழிப் பெருமான். நீற்றறையைக் கமல மலர்ப்பொய்கையெனக் கண்ட சீர்மை மிக்கவர் நாவுக்கரசர். செங்கல்லைப் பொன்னுகக் கண்டு வேண்டிய வேண்டியாங்கு பெற்று இன்புற்றவர் சுந்தரர். நரியைப் பரியாக்கிப் பரி செலுத்தும் பாகனுய் வரப் பரசிவத்தைப் பணிகொண்டவர் மணிவாசகர். இந்நால்வராகிய சமய குரவர்களின் செயற்கருஞ் செயல்களைச் செப்பமறந்தாரில்லை அருட்செல்வர் சிவப்பிரகாசர்.

தமிழ் மொழியின் ஆக்கம் கருதி அகத்தியம் செய்த பெருந் தகை அகத்தியன். அவ்வகத்தியனே 'சிவப்பிரகாசர்' என்னும் பெயரில் வந்தருளினன் என்று சொல்லத்தக்கவர் இச்சீலர் சிவப்பிரகாசர். இவர் தமிழ்ச் செய்யுட்களாகிய சங்கிலுல் அல்ல மன்சரிதத்தைப் புண்ணியர் நெஞ்சிற் புகச் செய்தாராம் இவ் விடத்தில் நூல் செய்தோன்யாவன்? அதில் கூறப்படுவது யாது? என்பனவற்றை அகச்சான்ருக அறிகின்ருேம். நூல் செய்த வரையும் நுதலிய பொருளையும் அறிவித்த ஆன்ருேர் நூல் ஆசிரியரின் அருமைச் சகோதரராக இருக்கவேண்டும் என்று அறிஞர் உலகம் கருதிப் பாராட்டுகின்றது.

" எல்லார்க்கும் நன்றும் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து "

என்னும் பொய்யா மொழிக்குப் புறம்பல்லர் நம் நூல் ஆசிரியர். ஆகவே நான் கூறிய காரணத்தால் உலக மக்கள் இந்நூலைப் புகழமாட்டார். ஆனுலும் அல்லமன் சரிதம் எனக்கொண்டா

யினும் உலகம் பாராட்டும் என்று பணிந்து மொழிகின்றார். மேலும் உவர்க்கடலிலும் ஒவ்வொரு காலத்தில் உலகினர் முழுகுதல் உண்டு என்கின்றார் இவர்.

இதனை அடுத்து இறைவனடி சேர்ந்து இன்பம்பெற விரும்புவோர் நீக்கத்தக்கன யாவை? அவ்வாறு நீக்க அருள் இறையாய் அமர்பவன் எவன்? என்கின்ற ஐயப்பாடுகளை ஆசிரியர் நீக்குகின்றார், நீக்கும் தத்துவங்கள் இருபத்தைந்து எனக் கொண்டு அத்தத்துவங் கடந்த தனிப்பெருஞ் சோதியாம் அல்லமன் தன்னை அறிபவருக்கு வழிகாட்டியாக வந்தருளினன் என்று வகைப்படுத்தி மொழிகின்றார். 'அல்லமன் சீர்க்கதி யிருபதோடைந்துஞ் செப்புவாம்' என்பதே நூலாசிரியர் கூறிய தொடர். இனி அடுத்துக் கூறப்படுவன வற்றைத் தொடர்ச்சி யாகப் பின்பு காணுவோம்.

---

## மதிப்புரை

### மெய்கண்டார் வரலாறு

எழுதியவர், விருத்தாசலம் வக்கீல், திரு, ச. அரங்கசாமிப் பிள்ளை பி. எ. பி. எல். அவர்கள் பக்கம், 25. திருக்கைலாயமரபு விவரணத்துடன் உள்ளதொரு சிறு நூல். பெண்ணுகடத்தினின்று முதன் முதல் வெளிவரும் வரலாறு இது. இதில் பல புதிய உண்மைகள் அறிவிக்கப் பெற்றுள்ளன. சைவர்க்கு ஞானவிருந்து.

### கலைக்களஞ்சியம்

சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் வெளியீடு. கல்கி ஆசிரியர், திரு. ரா. கி. அவர்களது நினைவுக்கு உரித்தாக்கியது. இகரமுதல் ஆய்தம் ஈருகிய எழுத்துக்களை முதலிற்கொண்டவை இத்தொகுதியில் அடங்கி உள்ளன. முதன் முதலாகத் தமிழ்த்தாய்க்குத், தேடித் தொகுக்கும் இவ் வைப்பு நிதியை நினைக்கும்போதெல்லாம் திரு. தி. சு. அவிநாசிலிங்கம் அவர்களுக்கும் திரு. பெ. தூரன் அவர்களுக்கும் நம் உள்ளம் முதல் இடத்தை அளிக்க முந்துகின்றது. இத்தொகுதியும் முதற்றொகுதி போலப் பல திறப் படங்களுடன் விளங்குகின்றது. அரும்பெரும் பொருட்கடல் ஆகி அழகுடன் அமைந்துள்ள இந்நூலைத் தமிழ்மக்கள் யாண்டும் இனிது ஏற்று மகிழ்வர் என்பது திண்ணம்.

முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்.

613

தொடர்கதை

# மாசில் வீணை

வித்துவான், திரு, சொ. சிங்காரவேலன் அவர்கள்
தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்

**சென்ற இதழ்களில்:** பாண்டியநாட்டுக்கும் பறம்புநாட்டுக்கும் நடந்த போரில் பறம்பு நாட்டரசர் வீரவேள் மடிந்தார். பாரியும், பொன்னியும் தப்பி வாழ்கின்றனர். அவர்களது அஞ்ஞாதவாசத்துக்கு இடம் கொடுக்கிறது திருக்குற்ருலமலை. குற்ருலமலைக்காடுகளில் புலவர் பிறைசூடியாரோடு மறைந்து வாழ்கிருர்கள். பாண்டிய மன்னன் ஆட்களைவிட்டு நாலா புறமும் தேடுகிருன். பாண்டியமன்னன் பறம்புநாட்டுக்கு முதன் முதலாகப் பார்வையிட வரும் செய்தியைப் புலவர்மூலம் இளவரசன் பாரி அறிந்த பிறகு......

'அப்படியானல் நாம் இப்போதே அங்குச்சென்று அவற்றைப் பாதுகாக்க வேண்டும் அண்ணு'

'எப்படியம்மா முடியும்?'

பறம்புநாட்டின் பரம்பரைச் சொத்து பறிபோக வேண்டியது தானு அண்ணு!'

புலவர் எங்கோ பார்த்துக்கொண்டிருந்தார். அவர் சிந்தனை வேகமாகச் சுழன்றது.

'இளவரசே! பொன்னீ! கவலைவேண்டாம், அவற்றைப் பாதுகாப்பது என் கடமை' என்று துணிவாகக் கூறினுர் புலவர்.

'உங்கள் கடமையில் நானும் பங்குகொள்ளலாமல்லவா சுவாமி! எப்போது புறப்படுவோம்? என்ற பாரியின் கேள்வி புலவரைத் திகைக்க வைத்தது.

'நடுப்பகலுக்குப்பின் புறப்படலாம் இளவரசே! என்ற புலவரின் விடை பாரிக்கு மிக்க மகிழ்வைக் கொடுத்தது.

'மருதநம்பீ! நீ இளவரசியார்க்குக் காவல்' என்ருர் புலவர். மருதநம்பி தலைவணங்கி நின்ருன்.

பதினேராம் அத்தியாயம்

## தந்தப் பேழை!

அந்தி மயங்கும் வேளை. கதிரவன் மலைவாயில் விழுந்து கொண்டிருந்தான். பூங்காட்டு மண்டபத்தை ஒட்டிய காடு. எங்கும் 'ஙொய்' என்ற வண்டின் ஒலி குடிகொண்டிருந்தது. இருள் இலேசாக நிலமகளின்மேல் தன் ஆட்சியைச் செலுத்தத் தொடங்கியிருந்தது. பூங்காட்டு மண்டபத்தை அடுத்திருந்த அந்தக் காட்டுப் பாதை வழியாக இரண்டுபேர் வந்துகொண் டிருந்தனர். யார் அவர்கள்? முன்னல் வருபவன் கையில் சிறு கை விளக்கு இருந்தது. அதன் ஒளியில் காலடியைக் கவனமாக உற்றுப் பார்த்தவாறே நடந்துவந்தனர் அவ்விரு வரும். எவ்வளவு துணிச்சல்? அடே...அவனுக்குப் பின்னல் வருபவர் ஒரு பெண்ணுக அல்லவா இருக்கிருள்! அவர்கள் ஏன் அப்படி மண்டபத்தை நோக்கி அந்த இருட்டு வேளையில் வரவேண்டும்?

என்ன ஆச்சரியம்! வருபவர்கள் வேறு யாருமில்லை. மல்லிகையும் நிலாமுடியனுந்தாம்! மண்டபத்தை நெருங்கி வந்த அவர்கள் சற்று விரைவாக அதன் வாயிற் கதவருகில் நின்ருர்கள். இப்போது நிலாமுடியன் கைவிளக்கை மல்லிகை யின் கையில் கொடுத்தான். அவனது கை அவன் மடியைத் துழாவியது. இப்போது அவன் கையில் ஒரு சாவி இருந்தது. மகிழ்ச்சியோடு மல்லிகையின் முகத்தை நோக்கினுன். 'இம் சீக்கிரம்!' என்று அவனைத் தூண்டினுள் மெல்லிய குரலில் மல்லிகை.

சாவியை வாயிற்கதவின் துளையில் இணைத்துக் கதவைத் திறந்தான் நிலாமுடியன். இருவரும் உள்ளே புகுந்தனர். சில கணங்களுக்கெல்லாம் வாயிற் கதவைத் திறந்துகொண்டு வந்தனர் இருவரும். நிலாமுடியனின் கைகளில் இப்போது ஒரு புதிய தந்தப்பேழை இருந்தது. மல்லிகை ஒற்றையடிப் பாதை வழியாக நடந்தாள்.

'மல்லிகை! விளக்கின் சுடரைக் கொஞ்சம் அடக்கிவிட்டு நட' என்று நடந்துகொண்டே சொன்னுன் நிலாமுடியன். ஆம்,

உண்மைதான். விளக்கின் சுடரை அடக்கிவிட்டு மெல்ல நடந்து சற்று நேரத்துக்கெல்லாம் மறைந்துவிட்டனர் அவ்விருவரும்.

* * *

முதல் முதலாகப் பிரான்மலைக்குப் பாண்டிய மன்னன் வருகிறான் என்ற செய்தி நாடெங்கும் பரவியது. மதுரையிலிருந்து ஆயிரக்கணக்கான அரச தூதுவர்கள் பிரான்மலைக்குச் சென்று வரவேற்புக்கான அலுவல்களை வல் விரைந்து முடித்துக் கொண்டிருந்தார்கள்.

இளவரசனும் இளவரசியும் மறைந்து தப்பிவிட்டது மன்னனுக்கு ஒரு மனக் குறைதான்; என்றாலும் பிரான்மலைக்குச் சென்று பறம்புநாட்டைப் பார்வையிடாவிட்டால் அவனுக்கு மனம் சுக்குநூறாகச் சிதறிவிடும்போலிருந்தது. ஆம் அப்படியிருந்தது அவன் மனநிலை. அதனால்தான் அடுத்த திங்களே பிரான்மலை சென்று விடுவதென்று திட்டமிட்டு ஆணையும் பிறப்பித்தான்.

அரசிக்கும் பிரான்மலையைச் சுற்றிப் பார்த்து வருவதில் அளவுகடந்த மகிழ்ச்சியே. பறம்புநாட்டு இளவரசனும் இளவரசியும் தன் கணவன் ஆட்சிக்குத்தம்பி வாழ்வதிலும் அவளுக்கு இன்பமே. ஆனால் பாண்டிய ஆட்கள் நாலா புறங்களிலும் அவர்களைத் தேடித் திரிவதும், பாண்டியர் ஒற்றர் துறை மிக்க பரபரப்போடு பணியாற்றுவதும்தான் அரசிக்குப் பிடிக்கவில்லை.

* * *

பிரான்மலைப் பக்கமெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டுப் பூங்காட்டு மண்டபத்தைப் பார்க்கப் புறப்பட்டான் பாண்டிய மன்னன். சந்தனத்தேவன் முன்பு ஒருகால் வீரவேளின் ஆலோசனையை ஒற்றறிந்துவந்தது அந்த மண்டபத்திலிருந்து தானே! எனவே, மன்னன் அம் மண்டபத்தைப் பார்க்க மிக்க ஆவல்கொண்டான்....

மாந்தோப்பிலிருந்தபடி. தூரத்தில் மண்சாலையில்புழுதியை வாரிக்கொண்டுவரும் குதிரை வீரர்களை நோக்கியதும் மனம் கலங்கிவிட்டாள் மல்லிகை.

'அத்தான்!'

குடிசையின் முன்பக்கத்தில் உட்கார்ந்திருந்தநிலாமுடியன் ஓடிவந்தான்.

'ஏன் மல்லிகை!'

'அதோ ... பாண்டியமன்னர் படை! எனக்கென்னவோ பயமாயிருக்கிறது! நம் குடிசைக்குள் புகுந்து சோதனை செய்யத் தொடங்கிவிட்டால் என்ன செய்வது'

'நீ நினைக்கிறபடி அப்படி எல்லாம் நடந்துவிடாது! தந்தப் பேழையைக் காப்பாற்றுவது என்பொறுப்பு! மனம் கலங்காதே!'

'பறம்பு நாட்டின் பரம்பரைச் சொத்து அது. அதனுல்தான் பயப்படுகிறேன் நான் அத்தான்!'

இதற்குள் மண்சாலையிலிருந்து தோப்புவரும் பாதையில் குதிரைகளும், இரண்டு அரசப் பல்லக்குகளும் வந்துகொண் டிருந்தன.

குடிசைக்கு முன்வந்ததும் பல்லக்குகள் நின்றன. பல்லக் குள்ளிருந்து வெளியே வந்தான் மன்னன் உக்கிரப் பெருவழுதி. நல்ல கம்பீரமான தோற்றத்தோடு கட்டழகனுக விளங்கிய மன்னனைக்கண்டு கலங்கிவிட்டான் நிலாமுடியன். ஆனுல் மன்னன் கண்களில் வீசிய கருணை ஒளி அவனுடைய அச்சத் தைப் போக்கியது.

'வணக்கம் அரசே'

பய பக்தியோடு கும்பிட்டு நின்ற நிலாமுடியனையும், மல்லிகையையும் பெருந்தன்மையோடு பார்த்தான் மன்னன். இதற்குள் அரசி அருகில் வந்துவிட்டாள்.

'நீங்கள்தான் இந்தக் காட்டுப்பகுதிக் காவலோ? மன்ன னின் கண்டிப்பான - ஆனுல் - கவர்ச்சிகரமான குரலுக்கு விடைகூறினுன் நிலாமுடியன்.

'ஆமாம் அரசே! நாங்கள்தான்'

 617

'சாவியை எடுத்துவா! மண்டபத்தைச் சுற்றிப்பார்க்கலாம்' இப்போது மன்னன் அரசியை நோக்கினன். அரசியோ அருகாமையில் தோன்றும் பழைய அந்த மண்டபத்தையே பார்த்தவண்ணம் இருந்தாள்.

'அரசி! இதோ இந்த மண்டபம் இந்த நாட்டின் பழம்பெரு மண்டபம்.

மன்னனும் அரசியும், மற்றும் இரு குதிரை வீரர்களும் நிலாமுடியனோடு புறப்பட்டார்கள்.

அகன்ற அழகான மண்டபத்தின் உள்ளடங்கிய சிற்பவேலைகளைக் கண்டு சிந்தை நிறைந்த மகிழ்வுற்றுன் மன்னன். அவன் அகமும் புறமும் கலை உணர்ச்சியில் ஒன்றுபட்டு நின்றன.

மண்டபத்தின் உட்புறம் இருள் இருப்பினும் அந்தக் குளிர்ந்த காற்று எங்கிருந்து வந்ததென்றே சொல்லமுடியவில்லை நிலாமுடியன் ஒரு கையில் விளக்கோடு அரசனுக்குச் சிற்பங்களையும் சித்திரங்களையும் விளக்கிக்கொண்டே வந்தான்.

மண்டபத்தின் கல்யாண கூடத்தையடுத்து இருந்த வலப் பக்க அறையில் இருந்த அந்த வ்ண்ண ஓவியம் மன்னன் மனதைப் பெரிதும் கவர்ந்தது. ஆம்; அது அத்தகைய அழகுடையதுதான்!

... 'ஒரு பொழில்!, பலவண்ணப்பூக்கள்! பூஞ்செடிகளுக்கு நடுவில் கையில் பூக்குடலையோடு பூங்கொடி போல வருகிறுள் ஒரு பெண்கொடி! அவளுக்குப் பின்புறம் அடர்ந்தோங்கியுள்ள ஒரு மருதமரம்...... கப்பும் கிளையுமாக இருண்டு எழுந்து நிற்கிறது அம்மரம். அதன் பின்னுலிருந்து அவள் பின்னழகைச் சுவைத்து நிற்கிறுன் ஒரு காளை!......

(தொடரும்)

618

மகளிர் பகுதி

# அறமும் அன்னையரும்

வித்துவான், திருமதி. கண்ணுமணி அம்மையார் அவர்கள்

அனுதை இல்லம், வேலூர்.

உலகில் அறத்தைப் பிறப்புரிமையாகக் கொண்டது நம் நாடு. பண்டைக்காலப் பெண்மணிகளுள் சிறந்த ஔவைப் பிராட்டியார் அகரவரிசையாகக் கூறிய நீதிவாக்கியங்களுள் 'அறஞ்செய விரும்பு' என்பது தமிழர் அறிந்ததே. அறம் என்பதற்கு ஒழுக்கத்தை முதலாகக் கொண்ட பல பொருள்கள் இருப்பினும், நாம் இளமையில் ஆசிரியரிடம் அறிந்துகொண்ட பொருள் பிறர்க்கு அளித்தல் என்பதே. அப்பொருள்கொண்டே நடப்பது நம் சமூகத்திற்குப் பெரிதும் நன்மைபயப்பதாகும். அறம் வளர்த்த செல்வியாகிய உமாதேவியார் இறைவனிடம் பெற்ற ஒரு நாழி நெல் கொண்டு, தொண்டைநாட்டுத் தலமாகிய காஞ்சியில் காமக்கோட்டத்தமர்ந்து, ஆன்மாக்கள் உய்யுமாறு முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்துவருகிருர். அபிராமி அந்தாதியில்,

> ஐயனளந்தபடி யிருநாழி கொண்டண்ட மெல்லாம்
> உய்யவறஞ்செயு முன்னையும் போற்றியொருவர் தம்பால்
> செய்யபசுந்தமிழ்ப் பாமாலையுங் கொண்டுசென்று பொய்யும்
> மெய்யும் இயம்பவைத்தாய் இதுவோஉன்றன் மெய்யருளே.

என்று அபிராமிபட்டர் அருளுகின்ருர்.

மார்கழி நோன்பைப்பற்றிக்கூறிய ஆண்டாளும் "ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி உய்யுமாறெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்" என நோன்பின் இலட்சியம் தருமம் செய்வதே என்பதை விளக்கியுள்ளார்.

நமது இந்தியாவானது இம்மையிலேயே மறுமைக்கும் வகைதேடும் பண்பாடுடையது. நமது புராணம், இதிகாசம், சரித்திரத்தில் காணும் பெண்மணிகளின் வாழ்க்கையில் இவ்வுண்மையைக் காணலாம். தமிழ் மறையாகிய திருக்குறளில்

இல்வாழ்க்கையின் பயனைக் கூறிய திருவள்ளுவர், "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப் பண்பும் பயனும்அது" என்றார். (இல்வாழ்க்கையை அன்புடன் கூடி நடத்துவன எல்லாம் பிறர்க்குதவி செய்து வாழ்வதற்கே, அவ்வுதவியே இல் வாழ்க்கையின் பயன் என்றார்) ஆடவர்களை விடப் பெண்கள் தருமசிந்தையுடையவர்களாயிருந்தால்தான் இல்லறம் சிறக்கு மென்பதை ஔவைப்பிராட்டியார் தம் அனுபவத்தில் விளக்கி யுள்ளார். மணிமேகலையின் கையில் அமுதசுரபியென்னும் பாத்திரம் புகுந்ததும் - கற்பரசியாகிய ஆதிரை முதல் முதல் பிச்சையிட்டு வற்ருத வளம்பெறச்செய்ததும், பெண்களே அறம் புரிவதற்குரியவர் என்பதை விளக்குகின்றன. தருமம் பல வகைப்படும் பொருளாலும்உடலாலும்செய்யலாம். முதியோர், அநாதைப்பெண்கள், குழந்தைகள், பிணியாளர் முதலியோ ருக்கு, ஆண்களைவிடப் பெண்களுடைய உதவியே இன்றி யமையாதது. காலம் கருதாது நமக்கு வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம், மனத்தில் மாசின்றிப் பிறர்க்கு உதவுவதே நல்லறமாகும். சிறுபெண்கள் கல்வி கற்பதுடன் நல்லொழுக் கங்களிலும் பயின்று தரும சிந்தையுடன் வளர்ந்து வந்தால் தான் நாடுசிறக்கும்.

வாழ்க அறம்.

---

மதிப்புரை

## தேவார இசையரங்கு

நூல் இலவசம். தொகுத்தவர், சங்கீதபூஷணம், திரு. P. சுவாமிநாதன் அவர்கள், தேவார வகுப்பின் ஆசிரியர், தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலயம் சென்னை. (பக்கம், 16.) நல்ல தாளில் அழகுற்று விளங்கும் நூல். சிறந்த தோத்திரங்கள் (23) அடங்கியது. பொழிப்புரை பலரும் பாடலை உணரச் செய்யும் பாங்குடையது. அமுத நிலயத்தின் சேர்மென், திரு. ஸ்ரீகண்டன் அவர்கள் (91மௌண்ட்ரோட்,தேனும்பேட்டை, சென்னை18.) தம் மகளது மணத்திற்காக வெளியிட்டது இது.

முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்.

சிறுவர் பகுதி

# தமிழ் நாட்டுத் தம்பி!

சொ. சி.

1. அன்பார்ந்த தமிழ்நாட்டுத் தம்பி!—என்றும்
அன்பாகப் பேசிடு என்சொல்லை நம்பி!
துன்பம் தொலைந்துவிடும் தம்பி!—நல்ல
தூய்மை நிறைந்திடும் கேளென்சொல் தம்பி!

2. உண்மை உரைத்திடணும் தம்பி!—உற்றார்
உறவைத் தழுவியிங்கே வாழ்கநீ தம்பி!
தண்மை நிறைந்திடு தம்பி!—இன்பத்
தமிழை மொழிந்தின்பம் தவறாதே தம்பி!

3. ஆண்டவனை மறவாதே தம்பி!—அவன்
ஆரருள் வெள்ளத்தை மறவாதே தம்பி!
வேண்டும் பொருள் பெறலாம் தம்பி!—இங்கு
வேதனைகள் தீர்ந்துஇன்ப வாழ்வுவரும் தம்பி!

4. சைவம் சிறந்துளது தம்பி!—தமிழ்ச்
சால்பு நிறைந்து செழித்துளது தம்பி!
தெய்வம் தொழுதிடணும் தம்பி!—தமிழ்த்
தேசம் தொழுதிங்கு வாழ்ந்திடணும் தம்பி!

5. ஒற்றுமை வேண்டுவாய் தம்பி!—நாட்டில்
ஊக்கமும் வேண்டி உழைப்பாய்சொல் நம்பி!
கற்றல் மட்டும் போதாது தம்பி!—கற்ற
கல்வியைப்போல் வாழ்ந்திடப் பழகிடணும் தம்பி!.



# மூடப் பழக்கமா?

திரு. கீ. இராமலிங்கம் அவர்கள் எம். ஏ.,

முதல்வர், ஆதீனக் கீழைக்கலைக் கல்லூரி, தருமபுரம்

'தம்பி! வடக்கே தலைவைத்துப் படுக்காதே அடா!' என்கிறார் தந்தை. மகன் பள்ளிக்கூடத்தில் படிக்கிறவன். தகப்பனாருக்கு எழுத்து வாசனையே கிடையாது. கூலி வேலை செய்து பிழைக்கிறவர். அவர்கள் குடும்பத்தில் இப்போது தான் முதல் முறையாக ஒரு பையன் பள்ளிக்கூடம் போய்ப் படிக்கிறான். படிக்காத அப்பா சொல்வது எப்படிச் சரியாய் இருக்க முடியும்? என்று எண்ணுகிறான் தொடக்கப்பள்ளியில் படிக்கும் அப்பையன். தந்தை சொன்னதுமே, 'இதெல்லாம் மூடப் பழக்கம் அப்பா! எப்படித் தலைவைத்துப் படுத்தால் என்ன?' என்று வெடுக்கென விடை கூறினான்.

அப்பாவுக்கு மகன்பேரில் ஆசை. இருந்தாலும் இப்படி விடை சொன்னது அவருக்கு எப்படிப் பிடிக்கும்? உள்ளேயே வருத்தப்பட்டுக்கொண்டார். பையன் புரிந்துகொள்ளும்படி விளக்கிச் சொல்ல முடியவில்லை. அவருக்கே புரியாத ஒன்று தானே 'வடக்கே தலைவைத்துப் படுக்கக் கூடாது' என்பது. என்றாலும் அவருடைய தந்தையும் பிறரும் அவ்வாறு சொல்லக் கேட்டிருக்கிறார். அவர்கள் சொன்னபடியே அவரும் நடந்து வந்திருக்கிறார். என்றைக்குமே, எந்தக் காரணத்தைக் கொண்டும் அவர் வடக்கே தலைவைத்துப் படுத்ததே கிடையாது. அப்படிப் படுத்துவந்ததால் அவருக்கு என்ன நன்மை என்று தெரியாது. ஆனாலும் அங்ஙனம் செய்துவந்ததால் எவ்வகைக் கெடுதியும் ஏற்பட்டதாக அவருக்கு எப்போதும் தோன்றியதில்லை.

சில ஆண்டுகள் ஆயின. பையன் இளைஞனாய்விட்டான். உயர்நிலைப்பள்ளியில் படிக்கிறான். காந்த ஆற்றலைப் பற்றிய பாடம் வகுப்பில் நடந்தது. ஆசிரியர் காந்த ஆற்றலுடைய இரண்டு இரும்புத் துண்டுகளைப் பிள்ளைகளுக்குக் காட்டினார்.

ஒவ்வொரு துண்டுக்கும் ஒரு முனை வடக்கு என்று சுட்டினார். மற்றொரு முனை தெற்கு என்றார். காந்த ஆற்றலின் செயல் களைப்பற்றிப் பேசிவிட்டு, இரண்டு துண்டுகளையும் ஒன்றன் பின் பக்கத்திலே ஒன்றை வைத்தார். வைக்கும்போதே சொன்னார்; 'இரண்டு துண்டுகளுடைய வடக்கும் ஒரே பக்கம் இருக்கும்படி நான் வைக்கவில்லை. கவனியுங்கள்!' என்றார். 'வைத்தால் என்ன நேர்ந்துவிடும் ஐயா?' என்றான் ஒரு இளைஞன். 'வைத்தாலா? வைத்தால், இரண்டு துண்டு களில் இருக்கும் காந்த சக்தி குறைந்துபோய்விடும்.' என்று விடைசொன்னார். 'ஏன் ஐயா அப்படிப் போய்விடவேண்டும்?' என்றான் இன்னொரு இளைஞன். 'அதற்குக் காரணம் சொல்ல முடியாது. அது காந்தத்தின் இயற்கை.' என்றார்.

அவர் மேலும் சொன்னார்; 'இளைஞர்களே! இப்போது இரண்டு சிறு காந்தத் துண்டுகளைக் கண்டீர்கள். மிகப் பெரிய காந்தத் துண்டாக இருப்பது எது தெரியுமா? அதுதான் நமது மாநிலம்!' என்றார். 'அப்படியென்றால் அந்தக் காந்தத் துண்டிற்கும் வடக்கு தெற்கு உண்டா ஐயா!' என்றான் ஒரு மாணவன். 'ஆம்! உண்டு; நிலத்திற்கு வடக்கு தெற்கு சொல்லுகிறோமே, அதே வடக்கும் அதே தெற்குந்தான்' என்றார்.

'பிள்ளைகளே' இன்னொரு வியப்பான காந்தத்துண்டு இருக்கிறது. அது எது தெரியுமா?' என்றார். பிள்ளைகள் வாயைப் பிளந்துகொண்டு ஆசிரியர் மேலும் என்ன சொல்லப் போகிறார் என்று கேட்டார்கள். 'அந்தக் காந்தத் துண்டு நமது உடம்புதான், அறியுங்கள்! என்றார். 'அப்படியா ஐயா! அப்ப்டியா ஐயா! என்று, பிள்ளைகள் ஒரு புதுப்பொருளைத் தெரிந்துகொண்ட மகிழ்ச்சியில் குதித்தார்கள். 'நமது உடம் பாகிய காந்தத் துண்டிற்கு வடக்கு நமது தலைப்பக்கம், தெற்கு கால்பக்கம் என்று மேலும் விளக்கியபோது பிள்ளைகள் மேலும் குதித்தார்கள்.

ஆம் இன்னொன்று சொல்லப்போகின்றேன், கேளுங்கள் உலகம் ஒரு காந்தத்துண்டு என்று தெரிந்துகொண்டீர்கள் அல்லவா? உங்கள் உடம்பும் ஒரு காந்தத்துண்டு என்று இப்போது அறிந்துகொண்டீர்கள் அல்லவா? ஆம். உலகமும்

623

உடம்பும் இரண்டு காந்தத்துண்டுகள். இந்த இரண்டு காந்தத் துண்டுகளில் இருக்கும் காந்த ஆற்றல் குறைந்து போகாமல் இருக்கவேண்டுமானால், இந்த இரண்டு துண்டுகளின் வடக்கும் ஒரேபக்கம் இருக்கும்படி வைக்கலாமா?'

'கூடாது ஐயா!' (எல்லோரது குரலும்.)

மேலும் சொல்லுகிறேன் உன்னுங்கள். உலகம் நமது உடம்பைப் பார்க்கும் போது எவ்வளவோ பெரியது. எனவே உலகத்தின் வடக்கும் நமது உடம்பின் வடக்கும் ஒரேபக்கம் இருந்தால் உலகத்திலுள்ள காந்த ஆற்றல் குறைவதைக் காட்டிலும், நமது உடம்பிலுள்ள காந்த ஆற்றல் விரைந்து குறைந்துபோய்விடும். ஆகவே நீங்கள் எவரும் வடக்கே தலைவைத்துப் படுக்கக் கூடாது. படுத்தால் உங்கள் உடம்பிலுள்ள காந்த ஆற்றல் குறைந்துபோய்விடும். காந்தம் குறைந்து போனால் உங்கள் உடம்பில் வலிவு குன்றிவிடும். எழுச்சி இருக்காது. சோர்வு ஏற்படும். மெலிந்து ஆற்றலற்றவர்களாகி விடுவீர்கள்.

இவ்வாறு ஆசிரியர் விளக்கியது, எல்லாப் பிள்ளைகளுக்கும் வியப்பாக இருந்தது. அவர்களில் ஒரு பையனுக்கு "இதெல்லாம் மூடப்பழக்கம் அப்பா! எப்படித் தலைவைத்துப் படுத்தால் என்ன?'' என்ற சொற்கள் காதுக்குள்ளே கணீர் கணீர் என ஒலித்தன. சிறிது நேரம் ஒலித்துக்கொண்டே இருந்தன. தன் தந்தையை வெடுக்கென எதிர்த்துப்பேசிய தற்காகப் பெரிதும் மனம் நொந்தான். விடுமுறை விட்டதும் ஊருக்கு ஓடினான். தந்தை காலில் விழுந்து வணங்கினான். அப்பாவுக்கு விளங்கவே இல்லை. காந்த ஆற்றலைப் பற்றித் தான் அறிந்தவற்றைக் கூறினான். 'எப்படி அப்பா! படிக்காமலேயே இந்த உண்மைகள் எல்லாம் தங்களுக்குத் தெரிந்திருக்கின்றன ? என்றான். நமது முன்னோர்கள் அறியாத உண்மை ஏதடா? என்றார். நமது பழக்க வழக்கங்கள் அவ்வளவும் அறிவியலின் அடிப்படையில் அமைந்தன என்பதை இளைஞன் படிக்கப் படிக்க அறிந்து மகிழ்ந்தான்.

624

தருமபுர ஆதீனம்

ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி மகோற்சவம்

# 7-வது திருநெறிய தெய்வத் தமிழ்மாநாடு

## மூன்றும்நாள் மாலை நிகழ்ச்சி:-

தலைவர் பன்மொழிப்புலவர். வித்துவான் திரு, தெ. பொ. மீனுட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் M. A. B. L. M. O. L. தலைமைத்தமிழ்ப் பேரா சிரியர், அரசினர் மாநிலக்கல்லூரி சென்னை. தலைமைப் பேச்சு:-

எதிர்கால மாணிக்கங்களாகிய மாணவ மாணவிகளுக்குத் தெய்வத் திருமுறைகளைத் தெளிவுறப்பயிலுமாறு சென்னை மாநகரில் பிரசாரநிலையத் தின் தலைவராக இருந்து பணியாற்றிவரும் சுவாமிகள் அவர்கட்கு முதற் கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பெண் மணிகளின் குரலைக் கேட்க இவ்வுலகோர் விரும்பும் காரணத்தினுலே பெண்களின் வாயிலா கத் தேவார திருவாசகங்களைப்பாடுமாறு செய்து மக்கள் அதில் மனம் கசிந்து உருகும்படி இவ் அரும்பெரும் தொண்டு செய்து வருகிருர்கள் குழந்தைகளின் முன்னேற்றமே எதிர்கால முன்னேற்றம், குழந்தைகள் நல் வழியில் திருந்தினுல்தான் எதிர்காலம் நன் முறையில் திருந்தும். மற்றும் ஒரு பசுவின் கன்றுனது தான் சுவைக்க வேண்டிய பகுதியாகிய மடியை விட்டு மற்ற பாகத்தைச்சுவைத்தால் அதனுல் அதற்குப்பயனில்லை. அது போல அடியவர்கள் இறைவனது திருவடித் தாமரையை வணங்குவதைத் தவிரமற்றெந்தப் பாகத்தையும் வணங்கினுல் அதனுல் நாம் அடையக்கூடிய துன்பம் பெரிதென நினைத்து இறைவன் கழலையே போற்றவேண்டும். இறைவன் என்னைப்படைத்தான், அவனே என்னை ஆட்டுவிக்கிருன், அவனருளாலே தான் எல்லாச்செல்வங்களும் நடைபெறுகின்றன, ஒவ் வொருவரும் எண்ணினுல் ஆணவம், அகங்காரம் முதலிய பேய்கள் அழியுமென்றும், ஆண்டவனுடைய செயலிலே, பெருமையிலே, சிறப்புக் களிலே நம்முடைய இச்சா சக்திகளையெல்லாம் ஒதுக்கி ஆண்டவனே எனக்கு உறுதுணையென்று எண்ணவேண்டும். ஆண்டவனுடைய இன் பத்திற்கெல்லாம் உரியவர்கள் அடியார்களே,

“ஆசையறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனேடாயினும் ஆசை அறுமின்கள்”

என்பது அறிவுரை இவ்வுலகத்தில் எதையும் பற்றுவதற்கில்லை. பற்றற்ரு னுடைய பாதத்தை நாம் பற்றுவதே குறிக்கோளாயிருக்கவேண்டும். நம் உடம்பின் கண்ணேயுள்ள உறுப்புக்களாகிய கண், வயிறு, தலை

625

முதலியவை இருப்பது நமக்கு நினைவு இல்லை அவற்றிற்கு இடையூறு நேர்ந்த காலத்தில்தான் அவற்றின் இருப்பும் சிறப்பும் தெரிகின்றன. அது போல் தமிழுக்கு ஏதாவது கோளாறு ஏற்பட்டால்தான் அதனுடைய பெருமை தெரிகிறது. கம்பராமாயணத்தைப் பற்றிச் சிலர் ஆர்வத்துடன் ராமனைப் போற்றுகின்றனர். டாக்டர் போப் (ஆங்கில அறிஞர்) திருவாசகம், திருக்குறள் முதலிய நூல்களின் இனிமையை அறிந்து மொழிபெயர்த்தாரென்றால் இதனது பெருமையை என்னென்பது ?

திருவாசகத்தைக் கேட்குமளவிலே கல் நெஞ்சராயினும் கரைந்துருகுவார் என்றால் இதனுடைய இன்பச்சுவையையும், பக்திச்சுவையையும் அறியவேறு எதுவுமே வேண்டியதில்லை என்று கூறிமுடித்தார்.

தருமை ஆதீனப்புலவர், வாசகமணி திரு. S. உருத்திரபதி அவர்கள் M. A. மைசூர் பல்கலைக்கழகத்தமிழ்த் துறைத் தலைவர், பெங்களூர் "திருவடிப்பெருமை" என்பது பற்றிப் பேசினார்கள்.

இறைவனைப்பற்றி வாயார வாழ்த்தவே ஆண்டவன் நம்மைப்படைத்தான். ஆதலால் அவனுடைய சிறப்பான தன்மைகளையே எண்ணி எண்ணி இன்புறவேண்டும். இங்ஙனம் மாணிக்கவாசகப் பெருமான் கூறுகிறார். பிறவிப்பிணியை அறுக்கச்சிறந்த மருந்தாக விளங்குவது ஆண்டவனுடைய திருவடியேயாகும் "மலர் மிசையேகினான் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடு வாழ்வார்" என்று வள்ளுவரும் திருவடிப்பெருமையைக் கடவுள் வாழ்த்தில் கூறுகிறார். கடலில் அலை ஓயாமல் வீசுவதுபோலப் பிறவிப்பிணிகள் ஓயாமல் ஓட்டிக்கொண்டே வருகின்றன என்றும் இதையொட்டியே சிந்தாமணி ஆசிரியர் ஆற்றிலுள்ள மணலைக்கணக்கிட்டாலும் கணக்கிடலாம் பிறவியின் எண்ணிக்கையைக் கணக்கிட முடியாதென்றும் கூறுகிறார். "அற வாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கல்லால் பிற வாழி நீந்தலரிது" என்று வள்ளுவர் வகுத்த இலக்கணத்திற்கு இலக்கியமாக விளங்குவது தேவார திருவாசகங்களில் கூறப்பட்ட அடியார்களின் பெருமையே யாகும். ஒருவன் தேடக்கூடிய பொருள் சிவன் திருவடியேயாகும் என்பது "தேடும்பொருள் சிவன் கழலே யாகும்" என்பதனால் விளங்கும். பல நூல்களைப்படிப்பதின் பயன் ஆண்டவனுக்கு அடியவர்களாக ஆவது தான் என்று பெரியபுராணத்தில் பொய்யில் புலவரைப் பற்றிப் பாடும்பொழுது குறிப்பிடுகிறார் சேக்கிழார் திருவடி தீட்சை வேண்டுமென்று அப்பர் சுவாமிகள் கூறுகிறார். இறைவனுடைய திருவடியை வணங்காத பிறவி பயனற்ற பிறவி என்று மாணிக்கவாசகர் இடித்துரைக்கின்றார்.

வித்துவான். ஸ்ரீமத், இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் (கட்டளை விசாரணை, திருநள்ளாறு தேவஸ்தானம்) "மணிவாசகர்." என்னும் தலைப்பில் பேசினார்கள்.

வாதவூரர் சிவபெருமானிடம் கொண்ட பக்தியையும், சிவபெருமான் வாதவூரரிடம் காட்டிய கருணையையும் விளக்கிக்கூறிப் பாடும்பணி நீ கூடும்பொருட்டு, மதுரைமா நகரிற் குதிரை மாறியும், விண்புகழ் முடி மிசை மண்பொறை சுமந்தும் நீற்றெழின் மேனியின் மாற்றடி பட்டும், நின்னைத் தொண்டனென்னக் கொண்டனன், என்ற அடிகளின் கருத்தை விளக்கிச் சிறப்புறப் பேசி முடித்தார்கள்.

நான்காம் நாள் நிகழ்ச்சு :

வித்துவான். திரு. G. சுப்பிரமணியப்பிள்ளை M. A., B. L அவர்கள் (தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர், அண்ணுமலைப் பல்கலைக்கழகம், அண்ணுமலைநகர்) தலைமையுரையாகப் பேசியது :-

சமயவுணர்வின் இன்றியமையாமையை, சமயவுணர்வை எல்லா மக்களிடமும் உண்டாக்கவே இது போன்ற மாநாடுகள் நிகழ்த்துவிக்கப் பெறுகின்றன என்று கூறி, 'முத்துக்குமாரசுவாமி திருவருட்பா'விலிருந்து இரண்டொரு சிறந்த கருத்துக்களையும், பாடல்களையும் கூறி, இத் திரு வருட்பா திருவருளாலேயே பாடப்பட்டதாதலின் மிகமிகச் சிறந்ததாகும் என்றும் கூறி முடித்தார்கள்.

வித்துவான் ஸ்ரீமத். சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள், (மௌன மடம், கட்டளை விசாரணை, திருச்சி.) "முத்துக்குமாரசுவாமி திருவருட்பா" என்பதுபற்றிப் பேசியது :-

முருகனைத்தான் முத்துக்குமரசாமி என்கிறோம். திருவருட்பா என்பது பக்திப்பாடலைக் குறிப்பது. எந்தப் பாடல் உள்ளத்தை உருக்கு கிறதோ; எது உள்ளத்தின் புரட்சிக்குக்காரணமாக இருக்கிறதோ அது தான் பக்திப் பாடல். அது உள்ளத்தை உருக்குவதோடு அமையாது எதை நினைக்கிருேமோ அதையும் செய்ய வல்லதாக இருக்கிறது. முன்னியது முடிக்கும் முருகன் என்று சங்க இலக்கியமும் பேசுகிறது. முத்துக்குமரசுவாமி திருவருட்பாவிற்கும் பிறவற்றிற்கும் எவ்வளவோ வேறுபாடுகள் இருக்கின்றன. மக்களிடத்தில் மன ஒருமைப்பாடு மிகமிகக் குறைவாகத் தென்படுகிறது. ஐம்புல ஒடுக்கத்தால் மன ஒருமை சித்திக் கிறது. இவைஇல்லாமையால்தான் நாட்டில் பக்திக் குறைவு ஏற்படுகிறது. இவைகளைக் கடைப்பிடிக்க ஒரு கருவியாகவுள்ளது இத்திருவருட்பா.

திரு. ச. சிவகுமாரன் அவர்கள், M. A., (செயலர், சைவ சித்தாந்த சமாஜம், சென்னை) "சமயவுணர்வு" என்பது பற்றி பேசியது :-

627

இங்கு குழுமியிருப்பவர்கள் அனைவரும் சமய உணர்வு மிக்கவர்கள். மதம் என்றால் கர்வம், (அல்லது) திமிர் என்பது பொருள். ஆகவேதான் மதம் என்று கூறாமல் சமயம் என்று சொல்லுகிறோம். ஆதிமனிதன் சக்திகளைக் கும்பிட்டான். சமய உணர்வு அவனையும் அறியாமல் அவனிடம் குடிகொண்டிருந்தது. சமய உணர்வு இறைவனது படைப்பிலேயே மனிதனுக்கு இயற்கையாகவே அமைந்திருந்தது. சமயச் சண்டைகள் நிகழ்ந்தன. இந்த நூற்றாண்டிலும் கண்டோம். சமய உணர்வினால் வரும் வழக்குகளை விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை யிருந்தால் சமயத்தின் பெயரால் சண்டைகள் வரா. மக்களுடைய மனப்பண்பு, மனப்பாங்கு திருந்தினால் ஒழியச் சமயச் சண்டைகள் நிகழாமல் இரா. சமய உணர்விற்கு அடிப்படை சமூக சேவை. எவன் மக்களிடத்து அதிக அன்பு செலுத்துகின்றானோ அவன்தான் கடவுளிடம் அன்பு செலுத்துவான். அன்பும் அடக்கமும் இருப்பது சமய உணர்விற்கு நல்ல எடுத்துக்காட்டு. சமய உணர்வு மிக்கவர்களைச் சேக்கிழார் குறிப்பிடுகிறார் :-

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்
ஓடுஞ் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார் ;

என்று சமய உணர்வினாலே, அன்பின் பாசத்தினாலே, இரத்தத்திலே ஓடுகின்ற சைவத்தினாலே, அன்பும், பணிவும், நம்பிக்கை முதிர்வும் இருந்தால் சமய உணர்வு உண்டாகும். அந்தச் சமய உணர்வோடு வாழும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

## ஐந்தாம் நாள் நிகழ்ச்சி:-

வித்துவான், திரு. ரா. சண்முகசுந்தரஞ் செட்டியார் அவர்கள் (சென்னை) "திருவிசைப்பா" என்னும் தலைப்பில் பேசியது:-

திருவிசைப்பா ஒன்பதாந்திருமுறையைச் சார்ந்தது. திரு என்பது தெய்வசம்பந்தம், இசை-புகழ், இசை அல்லது இராகம். தெய்வத்தமிழோடு வருகின்ற இசைப்பாடல்கள் திருவிசைப்பாவில் 29 திருப்பதிகம் காணப்படுகின்றன. 10 பதிகம் சிதம்பரத்தைப் பற்றியன. 10 பதிகம் கருவூர்த் தேவரால் யாக்கப்பட்டன. இந்நூலில் தேவாரத்தொடர்கள் பயன் படுத்தப் பட்டிருக்கின்றன. அணியில் சிறந்த நூல். ஒரே சொல் பல பொருள்களில் பயன்படுத்தப் பட்டுள்ளது. சுவையுள்ள பல கருத்துக்களையும் பல அரிய உவமைகளையும் காணலாம்.

628



நீர் ஊற்றப்பட்ட பாலைக் காய்ச்சும்போது முதலில் நீர் வற்றி, பிறகு பால் வற்றும். அதேபோன்று உயிரானது ஆண்டவனைத் தொழும்போது முதலில் பாவம் மறைகின்றது. பிறகு புண்ணியமும் மறைகின்றது.

வித்துவான், திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள் (தமிழ் ஆராய்ச்சித்துறைப் புலவர், அண்ணாமலைப்பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்) "வன்றொண்டர் என்னும் தலைப்பில் பேசியது:-

மூன்று திருமுறைகளை ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வெளியிடச் செய்துள்ளார்கள். இதுபோன்றே மற்றைய திருமுறைகளும் விரைவில் வெளிவரஇருக்கின்றன. தாயினும்சிறந்த அன்புடையவர் களாய்த்திகழ்கின்ற ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் புலவர்களையும் மற்றவர்களையும் காத்தருளுகின்றார்கள்.

வன்றொண்டர் நாட்டின் பாகுபாடுகளை நன்குணர்ந்தவர் அவைகளைப் பற்றி நாட்டுத்துறை என்று பாடி விளக்கியுள்ளார். சிவபெருமானுடைய உடலை நெருப்பாலான ஆறு ஓடுவதுபோன்றிருக்கிறது என்று கூறியுள் ளார் வன்தொண்டர். மேலும், இயற்பகை நாயனாரின் தொண்டு, மெய்ப் பொருள் நாயனார் உடைவாள் கொண்டு தாக்கிய நிலை, கண்ணப்பரின் திருவருள் முதலியவைகளை விளக்கிக் கூறினார்கள். பின்னர் தொண்டர் களுடைய வரலாறுகளையும், வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் கற்று ஆராய்ந்து உய்ய வேண்டும்.

## ஆறும் நாள் நிகழ்ச்சி:-

தலைவர்: சொல்லின் செல்வர், திரு. R. P. சேதுப்பிள்ளை அவர்கள் B. A, B. L., (தமிழ் ஆராய்ச்சித் துறைப் பேராசிரியர், பல்கலைக் கழகம் சென்னை) தமது தலைமையுரையில் பேசியது:-

மற்ற ஆண்டைவிட இந்த ஆண்டில் மிக்க மகிழ்ச்சியுடன் வந்திருக் கிறேன். ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் கேதாரம் சென்று நாடெல்லாம் நல்ல கதியடையத் தரிசித்து வந்துள்ளார்கள். சம்பந்தர் பிறந்த பெருமை அருமைத் தமிழகத்துக்கே உண்டு. கைலைமலையை (கேதாரத்தை) நம் ஆசிரியர் திருஞானசம்பந்தர் காணும்போது இறைவன் இயற்கை யோடு கலந்துள்ளார் என்கிறார். "கல்லதிர நின்று கருமந்தி விளையாடு காளத்தி மலையே" என்று கூறினார். குற்றால இயற்கைவளம் "தூங்கிக் காண்பது.........சுழலக் காண்பது திந்தயிர் மத்து. "சைவம் வைணவம்" ஒன்று என்பது முன்னோர் கொள்கை. வடமலை என்பது கைலாசத்திற்கு அமைந்தது. வடநாட்டிற்குப் பகுதிகொடுத்து வேங்கடமும் விட்டு கடைசியில் வாழ்கிறோம். தமிழ் நாட்டோடு திருவேங்கடமும் சேரும்

என்பது நம் ஆவல். சிவநெறி வளர இம்மாநாடும் கூட்டப்பெற்றது. திருஞானசம்பந்தர் திருநாள் இன்று ஆதலால் அவரை நாம் மனத்தில் நினைத்து வணங்க வேண்டும்.

இராவ்சாகிப், வித்துவான், திரு. கு. அருணாசலக் கவுண்டர் அவர்கள் (மதுரைத் திரவியம் தாயுமானவர் இந்து கல்லூரி, திருநெல்வேலி) 'சமய வாழ்வு'' என்னும் தலைப்பில் பேசியது:-

திருநெல்வேலியில் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் அருளால் வாழ்கின்றோம். தமிழ் விழாவில் பெருமக்கள் கூடுவர். சமயவாழ்வு என்பது சமயத்தில் வாழ்கின்ற வாழ்வு. பல பெரியோரால்தான் சமயம் நிலைத்திருக்கிறது. அதன் காரணமாகத்தான் தமிழர் உலகத்திலேயே உயர்ந்தவராக உள்ளனர். கிறித்துவமதம் ஐரோப்பா முழுதும் உள்ளது. தம்முடைய வாழ்க்கையில் "ஏசு" அரிய செய்கைகள் செய்தார் என்று கூறுகின்றனர். ஐரோப்பியர் பொருளாதாரம், கோபம் இவைகளில் முன்னேறினர். மறுயுத்தம் ஆரம்பிக்க சமயம் பார்க்கின்றனர். ஐரோப்பியர் சமயமும் அரசியலும் வேறு என நினைக்கின்றனர். ஐரோப்பியர் இரணியர் போல் இருக்கின்றனர். அறிவால் சாதிக்க முடியாதது இல்லை என்கின்றனர்.

அறிவை விட அருளாலே எல்லாம் சாதிக்கலாம். அறிவினால் அருளும், அருளால் ஒளியும் தோன்றும். இப்போது வாழ்க்கை மாறுதல் ஏற்பட்டுள்ளது. வள்ளுவர், கம்பர், சேக்கிழார் இவர்கள் கொண்ட நாகரிகமே சிறந்தது. நம் நாட்டில் அரசியல், சமயம், விஞ்ஞானம் மூன்றும் பொருந்தி இருந்தால் நம் சமயம் வளரும். நம் பாடத்தில் நம் சமயம் பற்றிய பாடம் கிடையாது. நம் பிள்ளைகள் சமய உணர்வற்றவர்கள். கல்விமுறை மாறுவதால், நம் சமய அறிவு வளரும் பாடத்திட்டத்தில் சமய பாடம் இருக்கச்செய்ய வேண்டும். குழந்தைகளுக்குச் சமய உணர்வைத் தூண்ட வேண்டும். இந்தியர்கள் சமய உணர்வுள்ளவர்கள் என்று ஐரோப்பியர் கூறினால் நாம் மகிழ்கிறோம். அதற்கேற்பச் சமய உணர்வை நாமும் பெருக்கவேண்டும்.

வித்துவான், திரு. S. V. வரதராஜ ஐயங்கார் அவர்கள் M. A., M. O. L., (தமிழ்த்துறைத் தலைவர், ஜெயின் கல்லூரி, சென்னை) "நாவலர்" என்னும் தலைப்பில் பேசியது:-

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அருளால் என் வாழ்க்கையில் ஞானசம்பந்தர் திருநாளில் ஒரு சிறந்த வாய்ப்பைப் பெற்றேன். சைவம், வைணவம் ஆகிய இந்த இரண்டும் ஒன்றே. இது முற்றும் உண்மை. அதற்கு எடுத்துக்காட்டு இந்த மேடையேயாகும். சைவத்திற்குக்

கேதாரமும், வைணவத்திற்கு வேங்கடமும் சிறந்த இடமாம். சைவத்தில் நாயன்மார்களும், வைணவத்தில் ஆழ்வார்களும் இருந்து இரு சமயத்தையும் வளர்த்தனர். சுந்தரருக்கு நாவலர் என்று பெயர் உள்ளது. சுந்தரர் தம்மைத்தாமே நாவலர் என்று சொல்லிக்கொள்ளும் இடம் தேவாரத்தில் உள்ளது. இவர் எப்படிப் பாடினாலும் சிவபெருமான் ஏற்றுக்கொள்வார். சுந்தரர் நாவலூரைச் சார்ந்தவர் ஆதலால் ஊர்பற்றி இவருக்கு நாவலூரர் என்று பெயரமைந்திருக்கலாம். நாவலூர் என்று தேவாரத்தில் பல இடங்களில் குறிப்பிடுகிறார். நாவல் நிறைந்தமையால் நாவலூர் எனப் பெயர் வந்தது.

## ஏழாம் நாள் நிகழ்ச்சி:-

சித்தாந்த சரபம், மகாமகோபாத்யாய சிவஸ்ரீ காசிவாசி ஈசான சிவாசாரியார் அவர்கள் (பழநி) ஆகமம், வேதம் முதலியவைகளின் கருததுக்களையும் சைவசித்தாந்தத்தையும் விளக்கிப் பேசினார்கள்,

சொற்பெருக்கு :- வித்துவான், திருமதி. சிவ. மீனாட்சி சுந்தர சிவை அவர்கள் சென்னை. "குமரகுருபரர்" என்னும் தலைப்பில் பேசியது :-

இவர் ஸ்ரீவைகுண்டத்திலே சைவ வேளாளர் குலத்தில் அவதரித்தவர். சண்முக சிகாமணிக் கவிராயருக்கும் சிவகாமி அம்மைக்கும் தவப்பயனால் அவதரித்த தோன்றல். ஐந்து வயது வரை ஊமையாகவே இருந்தார். வைதாரையும் வாழவைக்கும் முருகப்பெருமான் கனவில் தோன்றி ஐந்தெழுத்தை அறிவித்து அகன்றார். திருவருளின் துணைகொண்டு அப் பருவத்திலேயே கந்தர் கலிவெண்பாவைப் பாடினார். இன்னும் இது போன்ற நூல்கள் பல யாத்து இவ்வுலகுக்கு உதவினார். இலக்கணஇலக்கியங்களில் பெரும் புலமை பெற்றார். இப்படி இருக்கையிலேயே ஒரு நாள் "யாரிடம் உன் வாக்குத் தடைப்படுகிறதோ அவரே உன்ஞானாசாரியராவர்" என்று முருகன் இவர்கனவில் தோன்றி அருளினார். பலநூல்கள் பாடிவந்த பாவலர் குருபரர் பெருமைமிகு தருமையை அடைந்த போது ஆட்சிப் பீடத்திலே அருட் செங்கோல் ஓச்சியவர்கள் மாசிலாமணி தேசிகர் என்பவர். அவர் "ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள" என்ற பாடலுக்குப் பதப்பொருள் விளக்கம்கூற, அப்போது குருபரர் வாக்குத் தடைபட அவரையே ஞானாசாரியனாக அடைந்து காசி மடத்தை நிறுவி அறச் செயல் பல புரிந்தார்.

வித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள், தமிழாசிரியர், பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி, காஞ்சிபுரம். "சிவஞான சித்தியார்" என்னும் தலைப்பில் பேசியது :-

631

இந்நூலாசிரியர், அருணந்தி சிவாச்சாரியார் இவர் மெய்கண்ட தேவ நாயனாரின் மாணவர். சித்தியார் சித்தாந்தத்தின் ஆணி. முதல் நூல் சிவஞானபோதம், வழிநூல் சித்தியார். முற்கூறியது வித்து, பிற்கூறியது விளைவு. சிவஞானபோதம் விளக்குவது; சித்தியார் சித்திப்பது. இது திருத்தொண்டர் திருவந்தாதி வித்து. அதன் விளைவு திருத்தொண்டர் புராணம் போன்றது. சித்தியாருக்கு மேல் நூல் இல்லை; சிவத்துக்கு மேல் தெய்வம் இல்லை என்பது ஒரு முது மொழி.

ஸ்ரீமத் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள், "தட்சிணாமூர்த்தி திருவருட்பா" என்னும் தலைப்பில் பேசியது :-

இதனை இயற்றியவர் சிவஞான தேசிகசுவாமிகள். ஸ்ரீ தட்சிணாமூர்த்தியைப்பற்றிச் சங்க இலக்கியங்களில் ஆங்காங்கே பலகுறிப்புக்கள் காணப்படுகின்றன. இவரை ஆலமர் செல்வன் என்று அழைக்கிறது பத்துப்பாட்டு. அறம் வளர்த்த நாயனார் என்ற பதத்திற்கு உரை கண்ட நச்சர் இவரையே குறிப்பிடுகிறார். இதனில் பதினாறு பாடல்கள் உள. இதனில் ஆங்காங்கே திருமுறை கருத்துக்களும் அமைந்துள்ளதைக் காணலாம். பல பல முதுமொழிகள் மிளர்வதையும் நோக்கலாம். இத்தகைய சிறப்பு வாய்ந்த பாடல்களைச் சிந்தித்துப் பயனடையவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

**எட்டாம் நாள் நிகழ்ச்சி:-**

தலைவர் : திரு. வ, பொன்னுசாமிப்பிள்ளை அவர்கள் M. A., வைஸ் பிரின்ஸிபால், மதுரைத் திரவியம் தாயுமானவர் இந்து கல்லூரி, திருநெல்வேலி.

சொற்பொழிவாளர்: செந்தமிழ்ச் செல்வர், வாகீசகலாநிதி, வித்துவான் திரு. கி. வா, ஜகந்நாதன் அவர்கள் M. A., ஆசிரியர் 'கலைமகள்' சென்னை. "கற்றவர் விழுங்கும் கற்பகக்கனி" என்னும் தலைப்பில் பேசியது :-

சைவ சமய வளர்ச்சி அருள் நாதங்களின் வழியாக இருப்பது. நாம் அடைந்திருக்கும் பெரும் பேறு அதுதான். சைவமயாசாரியார்கள் மக்களுக்கு வழிகாட்டியாக இருந்தார்கள். கற்கோயிலாக அமைத்துச் சொற்கோயிலைக் காட்டினார். பாமர மக்களுப் பக்தி வெள்ளம் பரவும்படியாக அமைத்து வழிபட்டார்கள். நடராசர் திருமுன்பு நான் சொற்பொழிவாற்றுவது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது.

தேங்காய்க்குத் தெங்கம் பழம் என்றுதான் பெயர். தேங்காய் பழுத்து விழுந்தாலும் அது காய் என்று பெயர். காரணம் நாம் அதைக் கனி என்று சுவைக்காத காரணம் தான். விழுங்கப்படும் பொருளுக்குத் தகுதி

வேண்டும். ஆண்டவன்: நுகரத்தகும் பொருள். படித்தவர்கள் சமயாசாரியர்களாக வந்துவிட முடியும். ஆயிரக்கணக்காகப் புத்தகங்கள் படித்துவிட்டால் படித்தவன் என்று பொருள் இல்லை. இந்த நாட்டு முறைப்படி நேரடியாக ஒரு பொருளை அல்லது இடத்தைக் கண்டவன் தான் படித்தவன். ஆனல் இந்த நூற்ருண்டிலேயோ புத்தகத்தைப் படித்தவன் தான் படித்தவன் என்று கருதுகிருன்.

விவேகாநந்தர் மேல் நாட்டிற்குச் சென்று நம்முடைய சைவ சமயக் கொள்கையைப் பரப்ப உயிருக்கு இறுதி வந்த நேரத்திலும் உறுதியுடன் தாம் சொற்பொழிவாற்றினுர். கடவுளைக் காட்ட முடியுமா? என்று கேட்டவர்க்கு நான் கடவுளைக் கண்டேன் ஆகவே உறுதியாகக் காட்டு வேன் என்றுகூறி ஒரு சக்தியைக் காட்டிப் பெருமை யடைந்தார்.

மனம், மொழி, மெய் முதலியவைகளால் ஆண்டவனை வணங்க வேண்டும். நாம் மீண்டும் பிறவா நெறியைப் பெறவேண்டும். புற இருளைப்போக்கும் ஒளி வளராது. ஆனல் உள்ளத்தில் தோன்றும் ஒளி வளர்ந்து கொண்டே யிருக்கும். உள்ளொளி வளர வேண்டுமானல் ஆண்டவனுகிய விளக்கைத் தூண்டவேண்டும். உள்ளத்திலே அவ் விளக்கை வைத்தால் நமக்குத் தூண்டுகோல் கல்வியாக இருக்க வேண்டும்.

திரு. அ. நாராயணசாமி ஐயர் அவர்கள், தமிழாசிரியர், இராம கிருஷ்ண ஹைஸ்கூல் தி. நகர். "சொக்கநாத வெண்பா" என்னும் தலைப்பில் பேசியது :-

முக்தி நிலையை அடைய ஆசையை அகற்ற வேண்டும். பிறவியைப் போக்கும் நிலையை அடைய வேண்டும். இதனை 'ஆசையருப் பாசம் விடாய்' என்று கூறுகிறது இந்நூல். இன்னும் இது போன்ற எண்ணற்ற கருத்துக்கள் இதனிடை மிளர்வதைக் காணலாம்.

சைவ சித்தாந்த வித்தகி, திருமதி. C. E. N. ஈசுவரவடிவம்மையார் அவர்கள் (தூத்துக்குடி) "மங்கையர்க்கரசியார் தவநெறி" என்பதுபற்றிப் பேசியது :-

மங்கையர்க்கரசியார் 7-வது நூற்ருண்டினர். கூன் பாண்டியனின் மனைவி. தமிழ் நாட்டின் ஒழுக்கங்களைக் கடைப்பிடித்தவர். அவர் பெண்களுக்கு உரிய கட்டுப்பாட்டோடுதான் ஞானசம்பந்தரை வரவேற் ருர். ஞானசம்பந்தரை வரவேற்கும்போது இரு கைகளையும் கூப்பி "யானும் என் பதியும் செய்த தவம் என்கொல்" என்று வணங்கினுர். பெரியபுராணம் பெண்களுக்கு வேண்டியவற்றை ஆக்கிக் கொடுக்கும் சட்டம். அவை பொன்னேட்டில் பொறிக்கத்தக்கன.

ஒன்பதாம் நாள் நிகழ்ச்சி :

அருள்மொழி அரசு, திருப்புகழ் ஜோதி, குகஸ்ரீ, திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள், "ஒரெழுத்தில் ஆறெழுத்தை ஓது வித்த பெருமாளே" என்ற தலைப்பில் பேசியது :-

திருமூலர் ஒருவர்தாம் யோகத்தைப் பற்றித் தெளிவாகத் தெரிந்தவர். ஞான பரம்பரையில் வந்தவர். திருமூலர் காலத்தில் செப்பனிடப்பட்ட சாலைகள் நால்வர் காலத்தில் பழுதுபடவில்லை. ஆனால் அருணகிரிநாதர் காலத்தில் பழுதுபட்டு விட்டது. இன்று ஒன்றும் தெரியாதவர்களும் தங்களைச் சிவயோகி என்று கூறிக் கொள்ளுகின்றனர். பிறர் கொள்கை களை மறுத்தால் ஒழிய நம் கொள்கையை நிலை நிறுத்த முடியாது.

பத்தாம் நாள் நிகழ்ச்சி :

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் இளவரசு, வித்துவான். ஸ்ரீலஸ்ரீ மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் சொற்பொழிவின் சாரம்:

திரு என்றால் அழகு, கடவுள் தன்மை என்பது பொருள். நெறி என்றால் கடவுள் தன்மையுள்ள நெறி என்று பொருள். இதனோடு தெய்வத் தமிழ் மன்றம் என்றும் சேர்த்திருப்பது மிகப்பொருத்தம். இது நாம் கூறியதா? அல்லது வேறு யாரேனும் கூறியதா? இல்லை. அது அருள்வாக்கு. திருஞான சம்பந்தர் 'அருநெறிய மறை' என்ற பாடலில் திருநெறிய தமிழ் வல்லவர் என்றுகூறியுள்ளார். அதனையே வைத்திருப்பது மிகமிகப் பொருத்தம் என்று தெரிகிறது.

தருமை ஆதீனப் புலவர், வித்துவான், திரு. வை. மு. சண்முக தேசிகர் அவர்கள், தமிழாசிரியர், தேசிய உயர்நிலைப் பள்ளி, நாகை. "மும்மையால் உலகாண்டது" என்னும் தலைப்பில் பேசியது :-
மூர்த்தி என்றால் நடராசப் பெருமானைக் குறிக்கிறது. மூர்த்தியின் கீர்த்தி யைச் சொல்ல யாராலும் இயலாது. மும்மையால் உலகாண்ட மூர்த்தி யார்க்கு அடியேன் என்ற கூற்றை நோக்குங்கள். ஆண்டவன் பொது வுடைமை (சொத்து). திருநீறு, உருத்திராக்கம், முடி என்ற மூன்றும் தாம் அவை. சிவநேசச் செல்வர்கள் அடியார்களை கண்ட மாத்திரத்தில் எவ்வளவு ஆனந்தமடைகிறோமோ அவ்வளவு மகிழ்ச்சியடையவேண்டும்.

வித்துவான், திரு. ச. சேது சுப்பிரமணியப்பிள்ளை அவர்கள், தமிழ்ப் பேராசிரியர், பல்கலைக் கல்லூரி, தருமை; "திருவிளையாடல்" என்னும் தலைப்பில் பேசியது :-

634



சொக்கலிங்கம் என்பதற்கு அழகு என்பது பொருள். சம்பந்தருக்குத் திருப்பாற் கடலைக் கொடுத்தும், நரியைப் பரியாக்கியும் சிறப்புப் பெற்ருர். இந்த அற்புதச் செயல்களெல்லாம் அவருடைய திருவிளையாடல்கள். 3367 செய்யுட்களைக் கொண்டது திருவிளையாடல் புராணம். திருவிளையாடல் அன்பை அடிப்படையாகக் கொண்டது. யான் எனது அற்ற விடத்தில் அன்பு நிலைக்கும்.

தருமை ஆதீனப் புலவர், வித்துவான், திரு. இராம. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள், தமிழ்ப்பேராசிரியர், அரசர் கல்லூரி, திருவையாறு "கந்தபுராணம்" என்னும் தலைப்பில் பேசியது :-

முருகு என்ருலே மணம், அழகு, இளமை முதலிய பொருள்களில் உள்ளன. ஆகவே கந்த புராணம் என்பது முருகனைப் பற்றிய நூல் என்பது தெளியப்படும். இக்கந்தபுராணம் ஏழு காண்டமுடையது. உபதேச காண்டத்தைப் பாடியவர் ஒருவர், மற்றை ஆறு காண்டங்களைப் பாடியவர் கச்சியப்பசிவாசாரியார். இதைக் காப்பியம் என்று கூறுகிருர்கள். இதன்கண் திருக்குறள் கருத்துக்கள் பல பல பரவிக் கிடக்கக்காணலாம். செந்தமிழே முருகன் - என்பது பன்னிரண்டு கைகளும் உயிரெழுத்து 18 கண்ணும் மெய்யெழுத்தும் வேலே ஆய்தமாகக் காணப்படுவதால். மேலும் இவருக்குக் குகேசன் என்று பொருளும் பொருந்தும்- உள்ளமாகிய குகையில் இருப்பவன் என்ற பொருளும் படும். கணக்காயர் நூலை ஆராய்பவர். இந்திரர் என்ருல் பொருட் செல்வமுடையவர் என்பது பொருள். பிறப்பதும் வளர்வதும் இறப்பதும் இவ்வுலக இயற்கை. இந்நூல் மருத நிலத்தின் மாண்புகூறும் மாபெரும் நூல். உபதேச காண்டத்தில் சிறப்பாகச் சைவச் சமயத்தைப்பற்றிக் கூறியிருக்கிறது. முக்திப்பயனைப் பெறுவதற்கும் வழியுண்டு.

## இசை, நாடக நிகழ்ச்சி

### 2—6—55 முதல்நாள்

இரவு சுமார் 7-மணிக்குத் திரு. சொக்கலிங்கம் பிள்ளை (தேவார ஆசிரியர், வேலூர் தேவஸ்தானம்) அவர்களால் திருமுறைப்பாடல்கள் பாடப்பெற்றன. திரு. T. S. சம்பந்தம் பிள்ளை (முதல்வர், இசைக்கல்லூரி தருமபுரம்) அவர்கள் பிடில் திரு. விசுவநாதய்யர் (மிருதங்க ஆசிரியர், இசைக்கல்லூரி, தருமபுரம்) அவர்கள் மிருதங்கம்.

### 3—6—55 இரண்டாம்நாள்

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான திருப்பனந்தாள் தேவஸ்தானம் தேவார வகுப்புப் பெண்களைக்கொண்டு பண்ணிசை நிகழ்ச்சி நிகழ்த்துவிக்கப்பெற்றது. பாடியது பலருக்கும் பேரின்பம் விளைத்தது.

635

4—6—55 மூன்றும்நாள்

கானசரஸ்வதி திருமதி D. K. பட்டம்மாள் அவர்கள் குழுவினரால் இன்னிசையரங்கு நிகழ்த்தப்பெற்றது. நிகழ்ச்சிக்கு வந்திருந்தோரனைவரும் அமைதியுடனிருந்து கேட்டு இன்புற்றனர்.

5—6—55 நான்காம்நாள்

தேவார இசைமணி, பண்ணிசைமணி, சங்கீதபூஷணம், திரு. P. சுவாமிநாதன் அவர்கள் (திருமுறை வகுப்பு ஆசிரியர், தருமை ஆதீன சமயப் பிரசார நிலயம், சென்னை) குழுவினரால் இசையரங்கு நிகழ்த்தப் பெற்றது.

6—6—55 ஐந்தாம்நாள்

தருமை ஆதீன சமயப் பிரசார நிலயத்து மாணவர்களால் சுந்தர மூர்த்தி நாயனுர் என்ற நாடகம் சுமார் 8-மணிக்குத் தொடங்கி நல்ல முறையில் நடிக்கப்பெற்றது.

7—6—55 ஆறும்நாள்

தருமை ஆதீனக் கல்வி நிலயங்களின் மாணவர்கள் "கண்ணப்பர்" என்ற நாடகத்தை உணர்ச்சியோடு நடித்துக்காட்டினுர்கள். வந்திருந்தோர் அனைவரையும் நாடகத்தைக் கண்டுகளித்துப் பேரின்பத்தில் திளைக்குமாறு செய்தனர்.

8—6—55 ஏழாம்நாள்

திரு C, R. நாராயணசாமி முதலியார் B. A., அவர்கள் (நகராட்சி ஆணையர், திருவரங்கம்) திருநாவுக்கரசரின் வரலாற்றை இன்னிசைக் கதையாக நிகழ்த்தினுர்கள்.

9—6—55 எட்டாம்நாள்

தருமபுர ஆதீன வித்துவான், கீர்த்தன குலசேகர பாகவதர் எம்பார், பிர்மஸ்ரீ விஜயராகவாசாரியார் அவர்கள் குருஞானசம்பந்தரின் வரலாற்றை இன்னிசைக் கதையாக நிகழ்த்தினுர்கள்.

10—6—55 ஒன்பதாம்நாள்

தருமை ஆதீன சமயப்பிரசார நிலயத்து மாணவர்களால் "திருமுறை கண்ட வாய்மை" என்ற நாடகம் நன்முறையில் நடிக்கப்பெற்றது.

11—6—55 சனிக்கிழமை தருமபுர ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் குருபூஜை விழாவன்று காலை 11-மணிக்கு ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக அலங் காரங்கள் நிகழ்ந்தன. வழிபாட்டுக்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளியானதும் ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் ஆலயத்தில் திரளான மக்கள் வந்து வழிபட்டனர். திருப்பனந்தாள் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ அருணந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்களும் இளவரசு வித்துவான் ஸ்ரீலஸ்ரீ மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள் அவர்களும் எழுந்தருளி சொக்கலிங்கப்பெருமான் வழிபாட்டில் கலந்துகொண்டார்கள். திருஞான சம்பந்தசுவாமிகள் தேவாரம் மூன்றாவது திருமுறை குறிப்புரையும், திருக் கேதாரயாத்திரை என்ற நூலும் குருபூஜை விழாமலராக ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் திருவடிமலர்களில் சார்த்தப்பெற்றன.

12—6—55 ஞாயிற்றுக்கிழமை காலை 11-மணிக்கு ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானுக்கு விசேஷ பூஜை முதலியன நிகழ்த்தப்பெற்றன. பகல் ஒரு மணிக்கு மாகேசுவரபூஜை மிகச்சிறப்பாக நடந்தது. மாலை 6-மணிக்கு தருமை ஆதீன இசைப்புலவர், எட்டயபுரம் சமஸ்தான வித்துவான், இசையரசு, தேவாரமணி, சங்கீதசாஹித்ய சிரோமணி, அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைக்கல்லூரித் தலைவர், திரு. எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்கள் குழுவினரால் இன்னிசைக்கச்சேரி நிகழ்த்தப்பெறறது இசைக்கச்சேரி மிகவும் நல்லமுறையில் சுமார் மூன்று மணி நேரத்திற்கு மேல் நிகழ்ந்தது.

இரவு 11-மணிக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பட்டினப் பிரவேசத்திற்கு எழுந்தருளினார்கள். ஆயிரம் ஆயிரம் மக்கள் மத்தியிலே சிவிகை மிதந்தது. நான்கு வீதிகளிலும் நாதசுரக் கச்சேரிகள், வாண வேடிக்கைகள் முதலியன சிறப்பாக நடைபெற்றன.

மின்சார விளக்குகளால் சிறந்தமுறையில் நான்கு வீதிகளும், பந்தல் முகப்பும் ஆலயங்களும் அலங்கரிக்கப்பெற்றிருந்தன. இரவு சுமார் நான்கு மணிக்கு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் கொலுக்காட்சி வழங்கியருளினார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் நீடூழி வாழ்க!

———

639

மாயூரத்தில்

# ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கட்குப்

# பாராட்டு விழா

## அ. வ. த. கல்லூரித் திறப்பு விழா

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் கேதாரயாத்திரை முடித்து வந்ததைக் குறித்து மாயூரம் நகரப் பெருமக்களால் ஒரு பெரிய பாராட்டுவிழா நடத்தப்பெற்றது. 29—6—55 புதன்கிழமை விழா நடைபெறுதற்குரிய நாள் என்றும் அன்பநாதபுரம் வகையரா தர்மபாகத்திலிருந்து அமைக்கப்பெற்றிருக்கும் கலைக்கல்லூரித்திறப்பு விழாவிற் குரியநாள் என்றும் முன்னரே திட்டமிடப்பெற்றது. பாராட்டு விழாக்குழுவினர் முன்னரே அழகான அழைப்புகள் பலருக்கும் அனுப்பியிருந்தனர். உயர்ந்த முறையில் பாராட்டுரைகள் தயாராயின. முன்னேற் பாடுகள் பல முன்னரே செய்யப் பெற்றன. 29—6—55 காலை 9 மணிக்கெல்லாம் ஆதீன மடாலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்விக்கப்பெற்றன. வழிபாட்டுக்காலத்தில் மாயூரம் நகரப் பெருமக்களும் மற்றும் பல ஊர்களிலிருந்து அன்பர்களும் வந்து கலந்து கொண்டார்கள். நண் பகல் 12 மணிக்கு மாயூரம் பெருமக்களால் மகேஸ்வரபூசை செய்விக்கப்பெற்றது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களோடு வந்திருந்தோர் அனைவரும் நிழற்படம் எடுத்துக்கொண்டனர். பின் மாலை 6 மணிக்கு நடைபெற இருக்கும் பாராட்டு விழாவிற்குரிய ஏற்பாடுகளைக் கவனிக்க எல்லோரும் மாயூரம் சென்றனர்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களது வருகையை எண்ணிப் பல்லாயிரக்கணக்கான மக்கள் மாயூரம் தருமை ஆதீனம் சண்முகதேசிக சுவாமி அவர்கள் நினைவாக அமைக்கப்பெற்றுள்ள மருத்துவ விடுதிக்கு வந்திருந்தார்கள். வளைவுத்தட்டிகள் வரவேற்புரைகளைத் தாங்கி சாலைகளில் நின்றன.

### வரவேற்பு:

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மாலை 7-மணிக்கெல்லாம் தங்க நாற்காலிச் சவாரியில் எழுந்தருளினார்கள். மருத்துவ விடுதியருகே மாயூர பொதுமக்களின் சார்பில் மாலை அணிவிக்கப்பெற்றது. விபூதி பிரசாதங்கள் பார்க்கப்பெற்றன. ஆதீனஅடியார்களும் ஆதீன அலுவலர்களும் அருகில் வர அன்பர்களால் அழைத்துச்செல்லப்பெற்றார்கள். சிறந்த மேளவாத்தியங்கள் ஒலிக்கச் சவாரி நகர்ந்தது.

## பழங்காவிரிப் பிள்ளையார்:

மாயூரம் பெண்கள் உயர்பள்ளிக்கு முன்பமைந்து விளங்கும் பிள்ளையாருக்கு அபிஷேக அலங்கார அர்ச்சனைகள் நடைபெற்றிருந்தன. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆலயத்தில் இறங்கி வழிபட்டுச் சிதறு காய்கள் சிலவற்றை உடைத்துப் புறப்பட்டார்கள். பின்னும் சில மணித்துளிகள் தேங்காய்கள் கோயிலில் உடைபட்டுக்கொண்டிருந்தன.

## நகரப்பூங்காவில்:

மாயூரம் நகரப்பூங்காவில் அமைந்துள்ள நகரத்தொடக்கப்பள்ளியாக இருந்து கல்லூரியாக மாற்றப்பெற்றிருக்கும் கட்டிடத்தின் பெரிய மன்றத்தில் விழா நடைபெற இருந்தது. பந்தலும் மின் விளக்குகளும் அழகுற அமைக்கப்பெற்றிருந்தன. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் எழுந்தருளும் இடத்திற்குமேல் குருமொழியே அருள்மொழி, என்ற மின்விளக்குப் பொறித்த பலகை ஒன்று விளங்கிற்று. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் விழா மன்றத்திற்கு 9-மணிக்கு எழுந்தருளியானார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு மலர் மாலைகள் அணிவித்து வரவேற்றார்கள். விழா மன்றம் போதுமான இடம் இன்மையால் மக்கள் திறந்த வெளியிலும் பந்தலிலும் இருந்துகேட்க ஒலி பெருக்கிகள் அமைக்கப்பெற்றிருந்தன. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மன்றத்தில் எழுந்தருளியவுடன் வேளூர் தேவஸ்தானம் தேவாரவகுப்பு ஆசிரியர் திரு சொக்கலிங்கம் அவர்கள் கேதாரத்தேவாரத்தைக் கடவுள்வாழ்த்தாகப்பாடினார். விழா தொடங்கியது.

## தொடக்கவுரை :

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் துணை வேந்தருக்கு உதவியாக இருந்து மாயூரம் அன்பநாதபுரம் வகையரா தர்மபாகக் கல்லூரிக்குத் தலைவராக வந்துள்ள உயர்திரு. இராமநாதம் பிள்ளை அவர்கள், ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை வரவேற்றுப் பேசினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குரு மகாசந்நிதானம் அவர்களை மாயூரத்து மக்கள் சார்பிலும் கல்லூரியின் சார்பிலும் வரவேற்கிறேன். இக்கல்லூரி தெய்வ சம்பந்த முடையது. அம்பிகை மயிலாகத் தோன்றிப் பெருமானைப் பூசித்ததாக மாயூரத்து வரலாறு. அம்பிகை கலைமகளாகத் தோன்றி இக்கல்லூரியாகக் காட்சிதருகிறாள். மாயூரத்து மக்களின் பல நாளைய கனவு இன்று நனவாயிற்று. இச்செயலைத் துணிந்து மேற்கொண்ட அன்பநாதபுரம் தர்மபாக உரிமையாளர்களுக்குத் தமிழகம் கடமைப்பட்டுள்ளது. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் கேதார யாத்திரை முடித்துவந்தவர்கள். தமிழ்நாட்டுச் சைவமடத்தலைவர் கேதாரத்திலும், காசியிலும் நம்நாட்டையே நம்மையே எண்ணியிருப்பார்கள். அவர்கட்கு அளிக்கும் பாராட்டு விழாவிற்கும், இக்கல்லூரித் திறப்பிற்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. கேதாரம் எத்தனை உயரத்தில் உள்ளதோ அந்த அளவுக்கு இக்கல்லூரி

639

உயரவேண்டும் என்ற ஆசியை அவர்களிடமிருந்து பெறுவதுதான் இன்றைய விழாவின் சிறந்த நோக்கம். நம் நாட்டுச் சமயம் ஸ்வீடன் போன்ற நகரங்களில் பரவியிருக்கிறது. தன் பெருமையைத் தானறியாத நிலையில் தமிழர்களாகிய நாம் வாழ்கிறோம். இன்று இக்கல்லூரியைத் திறக்க எழுந்தருளிய ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை வரவேற்கின்றோம் என்பன அவர்கள் பேசிய பேச்சின் சுருக்கம்.

**பாராட்டுரைகள் :**

அடுத்து பாராட்டுக் குழுவினர் சார்பில் அன்பநாதபுரம் வகையரா தர்மபாகங்களின் மானேஜர் திரு. ஜகநாதப்பிள்ளை அவர்கள் பாராட்டுரை ஒன்றை வாசித்தார்கள். பின்னர் திரு. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் அ. வ. த. கல்லூரியின் சார்பில் வரவேற்புரை ஒன்றை வாசித்தார்கள். இரண்டும் வெள்ளிச் சுற்றுச் சட்டத்தால் மிக உயரிய முறையில் அமைந்தன.

**ஆண்டறிக்கை :**

கல்லூரியின் தோற்றத்திற்குக் காரணமானவற்றை விளக்கி மாயூரம் திரு. B திருஞானம் பிள்ளை அவர்கள் அறிக்கை ஒன்றை வாசித்துச் சமர்ப்பித்தார்கள். அதில் அன்பநாதபுரம் தர்மபாகம் இது வரை செய்து வந்த அறங்கள்; இக்கல்லூரி வளர்வதற்குப் பரிவர்த்தனையாக இடம் வழங்கியருளிய துறைசையாதீனம் மகாசந்நிதானம் அவர்கட்கு நன்றியுரை; கல்லூரித் தொடக்கத்திற்குத்துணையாக இருந்துதவியவர்கள் முதலிய செய்திகள் கூறப்பெற்றிருந்தன.

**பாராட்டுப் பேச்சுக்கள் :**

திரு. சுந்தரேசம் பிள்ளை அவர்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் குண நலன்களையும், செயல் திறன்களையும் எடுத்துக் கூறினார்கள், பின்னர் திரு. கிருஷ்ணமூர்த்தி பிள்ளை அவர்கள் மாயூரத்தில் கல்லூரி தோன்றும் நிகழ்ச்சியையும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் யாத்திரை முடித்து வந்த சிறப்பையும் எடுத்து விளக்கினார்கள். பின்னர் விழாவிற்கு வந்திருந்த வாழ்த்துரைகள் திரு. B திருஞானம்பிள்ளை அவர்களால் வாசிக்கப்பெற்றன.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆசியுரை வழங்கிய பின்னர் 'ஐயனே அரனே' 'தமிழ் மொழியே' முதலிய பாடல்கள் பண்ணோடிசைக்கப்பெற்றன.

கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. பரமசிவம் M. A., அவர்களால் நன்றியுரை கூறப்பெற்றது.

பின்னர் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பட்டமங்கலத்தெரு, மகாதானத்தெரு வழியாகத் தருமைக்கு எழுந்தருளினார்கள்.

640

# ஆதீனத்திலும்
# ஆதீன தேவஸ்தானங்களிலும்

## ஜன்மநக்ஷத்திர அபிஷேக ஆராதனை

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்ம நக்ஷத்திர நாட்களில் திருப்பதிகம்பெற்ற சிவதலங்களில் ஆதீனச்சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்து, தலப்பதிகங்களையும் அச்சிட்டு வழங்கி வருதல்போல இம் மாதத்திலும் 28—6—55 செவ்வாய்க்கிழமை திருத்தலையாலங்காடு ஸ்ரீ ஆடவல்லவரதர் ஆலயத்தில் அபிஷேகஆராதனை கள் ஆதீனச் சார்பில் செய்விக்கப்பெற்றன. ஆதீன வெளியீடாக அச்சிட்ட திருத்தலையாலங்காடுத் திருப்பதிக உரையை வழங்கி, அன்பர்களைக் கொண்டு, பண் முறைப்படி பதிகம் முழுவதும் பாராயணமாக ஓதப் பட்டது.

## திருப்பனந்தாள் கும்பாபிஷேகம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான திருப்பனந்தாள் பிருகந்நாயகி சமேத ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி தேவஸ் தானத்தில் எழுந்தருளியுள்ள அறுபத்து மூன்று நாயன் மார்களுக்கு 25-வது குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவுள்ளப்பாங்கின் வண்ணம் நிகழும் மன்மத ஆண்டு ஆனித்திங்கள் 17-ம் நாள் (1—7—55) வெள்ளிக்கிழமை யன்று மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. கும்பாபிஷேகத்திற்குக் காசி வாசி ஸ்ரீலஸ்ரீ அருணந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்களும் இளவரசு ஸ்ரீலஸ்ரீ மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள் அவர்களும் எழுந்தருளி யாக சாலைவழிபாடு கும்பாபிஷேகம் இவ்விரண்டிற்கும் உடனிருந்து எல்லாம் சிறப்புற நிகழுமாறு செய்துதவினார்கள். பின்னர்த் தருமையாதீனத்தில் வெளியிட்ட "அறுபத்து மூவர்" என்ற நூலை, காசிவாசி ஸ்ரீலஸ்ரீ அருணந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள், வந்திருந்தோ ரனைவருக்கும் வழங்கினார்கள்.

அன்று மாலை 6-மணிக்கு திருக்கருகாவூர்த்தொண்டர் சிவஞானம் என்பவரால் "அறுபத்துமூவர்" என்ற தலைப்பில் அவர்களின் வரலாறு களை விளக்கி ஓர் சிறந்த சொற்பொழிவாற்றப்பெற்றது.

641

# தில்லையில் திருமுறைவிழா

2—7—55 அன்று இரவு சுமார் ஏழு மணிக்கு யாகசாலையின் தென் கீழ் பகுதியில் திருமுறைக்கொடியேற்றிப் பாராயணம் தொடங்கப்பெற்றது. சுமார் 10-30 வரை பாராயணம் நடைபெற்றது. அன்றைய யாகசாலை வழிபாட்டிற்குத் திருப்பனந்தாள் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ அருணந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்களும் இளவரசு வித்வான் ஸ்ரீலஸ்ரீ மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள் அவர்களும் எழுந்தருளியிருந்தார்கள்.

3—7—55 அன்று காலை 8-30 மணிக்கு திருமுறைப் பராயணத்துடன் ஆலயத்தை வலம் வந்து யாகசாலைப்பந்தலில் யாகசாலைப்பூர்ணுகுதி வழிபாட்டுக்காலம்வரை தேவார பாராயணம் செய்யப்பெற்றது.

இது போன்றே ஒவ்வொருநாளும் காலை மாலை இரு வேளைகளிலும் கும்பாபிஷேக தினம் வரை நல்லமுறையில் தேவாரபாராயணம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் ஆணையின் வண்ணம்நிகழ்த்துவிக்கப்பெற்றது.

தருமை ஆதீனத் தேவாரக்கோஷ்டியினர் பல விருதுகளுடன் நாள் தோறும் காலை மாலை கோயிலுக்குச்சென்ற காட்சி பேரின்பத்தை விளைத் தது. வழியில் பலர் வணங்கி இன்புற்றனர்.

---

<u>மதிப்புரை</u>

## மெய்கண்ட சாத்திரம்

சிவஞான சித்தியார் பரபக்கம் மூலமும் - உரையும். முகவுரை, உரைநடை, நூல் எல்லாம் சேர்ந்து (600) பக்கத்திற்கு மேல் உள்ள பெரியதொரு சிறந்த ஞானசாத்திரப் பதிப்பாகிய இது, திருவாவடுதுறை ஆதீனம் 21-ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவுளப் பாங்கின் வண்ணம், வெளியிடப்பெற்றது. வழக்கம் போல அறிஞர் போற்றத்தக்க அழகிய வெளியீடாய்த் திகழ்வது, திருவொற்றியூர் - தத்துவப்ரகாசர் எழுதிய இவ்வுரையே பரபக்கத்திற்கு இப்போதுள்ளவற்றில் சாலச்சிறந்தது.

இவ்வெளியீட்டுடன் மெய்கண்ட நூல்கள் எல்லாம் துறைசை ஆதீனத்தில் வெளியிடப் பெற்றன என்று பலர் அறிந்திருக்கலாம். ஆதீன வித்துவான், திரு. த. ச. மீனுட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் முயற்சி மிகப் பாராட்டற்குரியது. சைவ நன்மக்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பெருங்கருணையை என்றும் மறவாமல் போற்றி வரக்கடவர்கள். இதுவரை, எங்கேனும் எவரேனும் மெய்கண்ட நூல்கள் எல்லாவற்றை யும் தனித்தனியாக உயரிய பதிப்புக்களாக இலவசமாக வழங்கியருள வெளியிட்டவர்கள்உண்டோ? வாழ்க துறைசையாதீனம். வாழ்கருமணி.

542

# வருங்காலம்

ஜோதிஷார்ணவம்
பிர்மஸ்ரீ முத்துஜோதிடர் அவர்கள், திருவிடைமருதூர்.

(மன்மதஹு ஆடிமீ 1-உ முதல் 31-உ முடிய)
17—7—55 முதல் 16—8—55 முடிய)

## 1. மேஷ: அசுவதி, பரணி, கார்த்திகை $\frac{1}{4}$.

மேஷராசி சம்பந்தப்பட்ட அசுவதி நான்கு பாதங்களும், பரணி முதல் பாதமும், கார்த்திகை முதல் பாதமும், சுப சந்தோஷத்தையும், வியவசாய விருத்தியையும், சகல காரியத்திலும் ஜயத்தையும், உல்லாச யாத்திரையையும் தனவிரயத்தையும் தொழில் விருத்தியையும் செய்யும் பரணி 2, 3, 4 பாதங்கள் அசுப பலனைப் பலவிதத்திலும் தந்து துக்கம் உண்டுபண்ணும். புதன் சனி சுப வாரமாகும்.

## 2. விருஷபம்: கார்த்திகை $\frac{3}{4}$ ரோஹிணி, மிருக்சீரிஷம் $\frac{1}{2}$.

கார்த்திகை 2, 3, 4 பாதங்கள் அலைச்சலையும் ஆயாசத்தையும் ரோக பீடையையும் உண்டுபண்ணும். ரோகிணி நான்கு பாதங்களும் பிறரைச் சதா எதிர்பார்க்கும்படியும், விக்னங்களையும் கவலையையும் தரும். மிருகசீரிஷம் 1, 2 பாதங்கள் மிசிரமாய் நடக்கும். வியாதி பீடை துன்பம் வீண் செலவுகள் கலகங்கள் மனக்கவலை இவைகளைத்தரும். சனி செவ்வாய் சுப வாரமாகும்.

## 3. மிதுனம்: மிருகசீரிஷம் $\frac{1}{2}$ திருவாதிரை, புனர்பூசம் $\frac{3}{4}$.

மிதுனம் சம்பந்தப்பட்ட திருவாதிரை நான்கு பாதங்கள் சுப சந்தோஷம் உத்தியோக மேன்மை கீர்த்தி பத்திரம் கிடைத்தல் மேலோர் பெரியோர் தரிசனம் தரும். மற்ற மிருகசீரிஷம் 3, 4. புனர்பூசம் 1, 2, 3 பாதங்கள் மிகுந்த துன்பப் பலன்களையே தரும். அடிக்கடி வீண் அலைச்சல் வியாதி சாந்தியாகி மறுபடியும் கிளைத்தல். பெரியோர் மேலோருடைய கோபம், தேவ கோபம் முதலியன ஏற்பட்டுக் குடும்பம் க்ஷீணமடையச் செய்தல் பலவித ஈதி பாதைகள் இவைகளை உண்டுபண்ணும். குரு வாரமும் புதவாரமும் சுபம் தரும்.

## 4. கடகம்: புனர்பூசம் $\frac{1}{4}$ பூசம், ஆயில்யம்.

புனர்பூசம் 4-ம் பாதமும், ஆயில்யம் நான்கு பாதங்களும் கஷ்டத்திலிருந்து விலக்களித்து துன்பம் நீங்கச்செய்யும். பூசம் நான்கு பாதங்

களும் ஆடம்பரச் செலவுகளையும் கட்டிட வேலைகளையும் தந்து ஏராள செலவுகளையும் [illegible]கும். சனி செவ்வாய் சுப வாரமாகும்.

## 5. சிம்ம: மகம், பூரம், உத்திரம் ¼.

மகம் நான்கு பாதங்களும் தொழிலைத் தந்து இடம் மாறச்செய்து சந்தோஷம் தரும். வியவசாயத்தில் நூதன முறையால் கியாதி ஏற்படச் செய்யும் வியாபார விருத்தியாகும். பூரம் நான்கு பாதங்களும் உத்திரம் முதல் பாதம் அதிக விரயம் ஆகுதல். தானதர்ம பல பிராப்தி தேவதா குரு பக்தி தூர யாத்திரை வியாபார பெருக்கம் சுப சந்தோஷ சமாசாரக்கேள்வி இல்லற சுகம் காணல் பெரியோர் தரிசனம் முதலியன கிடைத்துச் சுபம் தரும். சனி செவ்வாய் மங்களமாகும்.

## 6. கன்னி: உத்திரம் ¾. ஹஸ்தம், சித்திரை ½.

கன்னி சம்பந்தப்பட்ட ஒன்பது பாதங்களும் ஷ மாதம் விசேஷ நன்மை தரும். எங்கும் பிரசித்தியைத் தரும். நினையாத காரியமெல்லாம் தானே கைகூடும். தெய்வபலம் ஓங்கும். குடும்பம் தழைக்கும். தனதானிய விருத்தியாகும். கட்டட வேலைகளும் கிரஹபூமி லாபங்களும் சந்தோஷ மும் தரும்.

## 7. துலாம்: சித்திரை ½, சுவாதி, விசாகம் ¾

விசாகம், 1—2. 3. பாதங்கள் நிராம்பச் சிரமத்தைப் பலவிதத்திலும் உண்டுபண்ணும். பல நஷ்டங்கள் ஏற்படும். தொழில் கெடும். துர்புத்தி ஓங்கும். நாஸ்திகம் ஏற்படும். மற்ற சித்திரை 3, 4, பாதமும் சுவாதி நான்கு பாதங்களும் விசேஷ ஜயம் தந்து பலவித சௌகரியங்கள் காட்டும். தொழில் மூலம் விசேஷ லாபமும் அடிக்கடி ஸஞ்சார பலனும் தீர்த்த யாத்திரைகளும் தான தர்ம பல பிராப்தியம் தெய்வ பலமும் கிட்டும் ஆரோக்கியமுண்டாகும். திங்களும் புதனும் சந்தோஷம் தரும்.

## 8. விருச்சிம்: விசாகம் ¼, அனுஷம், கேட்டை.

விருச்சிகம் சம்பந்தப்பட்ட 9. பாதங்களும் பாக்கிய விருத்தி தன தான்ய விருத்தி விஜயம் கீர்த்தி ஸஞ்சாரத்தில் லாபகரம். விவசாய லாபம் வியாபார லாபம். சத்துரு நாசம். ஆரோக்கியம் தொழில்விருத்தியாகும். பந்துமித்திராளுடைய சேர்க்கை முதலிய சுபங்களை உண்டுபண்ணும் சனி ஞாயிறு சுபம் தரும்.

9. தனுசு: மூலம், பூராடம், உத்திராடம் $\frac{1}{4}$.

மூலம் நான்கு பாதங்களும் கவலையைத் தீர்த்து இல்லறசுகம் உண்டு பண்ணும். மிசிரமாய் நடக்கும் பூராடம் நான்கு பாதங்களும் அதிக பிரயாசையின்பேரில் நன்மைதரும். அதிக விரயம் உண்டுபண்ணும். உத்திராடம் முதல் பாதம் வியாதி நீங்கி ஆரோக்கியத்தையும் சுகத்தையும் தரும். கட்டடங்களும் ஆபரணாதிகளும் சேரும். மனம் சந்தோஷமடையும். பெரியோர்கள் ஆசிகிட்டும். புதனும் சனியும் சுபம் தரும்.

10. மகம்: உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம், அவிட்டம் $\frac{1}{2}$.

மகரம் சம்பந்தப்பட்ட 9 பாதங்களும் சுபமே உண்டு பண்ணும். தொழில் ஓங்கும். உத்தியோக லாபம் ஏற்படும். ஆரோக்கியமுண்டாகும். மேலோர் அன்பும் பரிசும் கிடைக்கும். சகல காரியமும் வெற்றியடையும். அடிக்கடி அழைப்புப் பத்திரங்கள் வரும். சபாபூஜ்பத்துவ முண்டாகும். புண்ணிய பலன்கள் கிட்டும். ஆஸ்திகம் விருத்தியாகும். குரு வாரமும் சுக்கிர வாரமும் சுபம் தரும்.

11. கும்பம் அவிட்டம் $\frac{1}{2}$, சதயம், பூரட்டாதி $\frac{3}{4}$.

அவிட்டம் 3, 4 பாதம் சுபம் தரும். அதிகச் செலவினங்களைப் பல விதத்திலும் உண்டுபண்ணும். வரத்துக் குறையும், சதயம் நான்கு பாதங்களும், பூரட்டாதி 1, 2, 3 பாதங்களும் வியாதி சாந்தியாகி ஆரோக்கியத்தைத் தரும். குடும்பம் சுபமாக வளரும் தெய்வபலம்கிட்டும். நஷ்ட தனம் சேரும். தொழில் ஓங்கும். மங்களமுண்டாகும். புதனும் திங்களும் சுபமாகும்.

12. மீனம் பூரட்டாதி $\frac{1}{4}$, உத்திரட்டாதி, ரேவதி.

ரேவதி முதல் பாதம் தவிர மற்ற நக்ஷத்திரம் சம்பந்தப்பட்ட பூரட்டாதி 4-ம் பாதம் உத்திரட்டாதி நான்கு பாதங்கள், ரேவதி நான்காம் பாதமும் விசேஷ சுபத்தைத் தரும். தீர்த்த யாத்திரை புண்ணிய காரிய பிரவிருத்தி ஆஸ்திக விருத்தி உத்தியோக லாபம் கீர்த்தி பத்திரம் கிடைத்தல். தொழில் ஓங்குதல் நூதன பிரபுவால் நன்மை இவைகளைத்தரும். ரேவதி 2, 3 பாதங்கள் மிசிரமாய் நடக்கும். ஆனாலும் கிரகணத்திலிருந்து விடுபட்ட சூரியன்போல் பிரகாசம் தந்து கஷ்டங்களை நீங்கச் செய்யும், சகலமும் மங்களமாகும். வியாழனும் புதனும் சுபம் தரும்.

குறிப்பு :- உலகம் சுபிக்ஷமடையும். சாந்தி ஏற்படும்.

**அநுபந்தம் :**

# திருக்கேதார யாத்திரை

[முன்தொடர்ச்சி]

அங்கே தங்கமயமான மான் ஒன்று ரிஷிகளுடைய ஆசிரமத்துப் புறத்திலே தாவி ஓடியது: ரிஷிகளைக் கொன்ற பிறகுதான் மான் கிட்டு மென நினைத்தான்; வில்லில் நாணேற்றினான்; ரிஷிகள் மறைந்தனர்; மானும் மறைந்தது; நின்ற இடத்தில் ஒரு தவளையை அரவு ஒன்று விழுங்கும் கோரக்காட்சியைக் கண்டான்; அக்காட்சியும் மறைந்தது; அந்த இடத்திலேயே யானைத்தோல் போன்றதொரு பொருள் புலப் பட்டது.

சற்று நேரத்துக்கெல்லாம் சிவ உருவமாகி பிறையும் சடையுமணிந்த கோலத்தைக்கண்டான்; அதுவும் சிலகணமே; ஒன்றுமே புரியவில்லை அவனுக்கு; எல்லாம் மாயக்காட்சிகளாகப் பட்டன; அவன் நினைத்தான்: ‘‘இன்று முழுதும் விபரீதமாக இருக்கிறதே! இது பூதங்கள் நிறைந்ததோ? ஐயகோ! என்னைக் காக்க இங்கு ஆரும் இல்லையே’’ ஓடுகிறான்; கொஞ்ச தூரத்தில் தான் முன்பார்த்த தங்கமானைச் சிங்கமொன்று பிடித்துக்கொன்று கொண்டிருக்கிறது; மிக்க அச்சம் அவனுக்கு; பார்த்து நின்றான்; சிங்கம் மறைந்தது; அங்கே ஐந்து முகமும், முக்கண்ணும், அரவணியுமான சிவப் பொருளின் காட்சி; அதுவும் அவனுக்குப் புரியவில்லை. அச்சம் மேலும் அதிகரித்தது. அதுவும் சிலகணமே; மறைந்த சற்றுக்கெல்லாம் சிங்கமே மீண்டும் வந்தது; அதை ஒருவன் கொல்கிறான். என்னவியப்பு! சிங்கமும் எருமையாகி அங்கு நின்றது; சற்றுக்கெல்லாம் அவ்வெருமை சிவ உருவ மாக ஆயிற்று; எல்லாம் வியப்பாக இருந்தன; மயங்கினான்.

நாரதர் மீண்டும் எதிர்ப்பட்டார்; நாரதரைக் கேட்டான்: ‘‘நான் சாதுவா அதாவது தவமுனிவரா? அல்லது கெட்டவனா? புரியவில்லையே; இந்த வனம் மகா சாதுவைப்போலத் தோன்றுகிறதே. சாதுக்களைக் கொல்ல வல்லவா நான் எண்ணினேன். மாறிமாறி எனக்கு மாயக்காட்சி கிடைக்கிறதே! காரணம் என்ன? நான் ஞானியா?’’ ‘‘சிவதரிசனம் உனக்குக் கிடைத்துவிட்டது. நீ சிறந்த தவப்பேறுடையவனாய். ஞான மில்லாமற் போனால் என்ன்? உன்னைக் கண்டதும் எருமையும் சிவ உருவமாயிற்றல்லவா! உன் உள்ளே பார்; நீ நல்லவன்; பெரியவன்’’. என்று சொன்னார் நாரதமுனிவரும். வேடனுக்கு ஞானம் உண்டாயிற்று; ‘முனிபுங்கவ! தங்கள் தரிசனத்தால் உய்ந்தேன்; எனக்கு உய்யும் வழி மேலும் காட்டவேண்டும்; எனக்கும் தவம் சித்திக்குமா?’ என்று கவலை யோடு கேட்டான். ‘இங்கேயே இரு’ என்று சொல்லி நாரதர் மறைந்தார். பிறகு நெடுநாள் தவமிருந்து சிவலோகத்தை அடைந்தான் அவ்வேடன்.

பாரத யுத்தம் முடிந்த பிறகு கலி பிறந்தது; பஞ்சபாண்டவர்கள் உலகியலைவிட்டு வானுலகம் ஏறப் (சொர்க்காரோகணம்) புறப்பட்டனர். வழியிலே பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு கேதாரம் வந்தடைந்தனர். பீமன் விரைவிலே விண் ஏற விரும்பினன். அவனுக்குப் பெருமான் எருமை உருவத்திலே காட்சி யளித்தார். வழிபடச் சென்றான். வேகமாக நடந்தது அவ் எருமை; கண்டுகொண்டான் அதிலே பரம்பொருளை; அவன் வழிபட்டான்.

இவை கேதார புராணத்தில் சொல்லப்பட்ட சிறப்புச் செய்திகள். கேதாரம் கயிலாயம் - பரசிவம் என்று சொல்லப்படுகிறது; நினைத்தால் முத்தி என்பது விளக்கம்.

உஷா, அநிருத்யன், நளன், பஞ்சபாண்டவர்கள், சங்கராச்சாரியர், பின்னும் பல தவமுனிவர்கள் சென்ற சொர்க்காரோகணம் என்ற சொர்க்க வாசல், கோயிலின் பின்புறத்தில் ஈசானதிசையில் இரண்டுகல் தொலைவில் மலை வழியில் காட்டப்படுகிறது. வடமேற்கு மூலையில் மந்தாகினி மலைச் சிகரத்திலிருந்து கீழிறங்கி வருகிறாள்.

இந்திர நீலப் பருப்பதத்தில் இந்திரன் தவமிருந்து பேறு பெற்றதாக ஐதிகம் கூறப்படுகிறது. விஸ்வபர்வதம் கோயிலுக்குப் பின்புறமும், வாசுகி பர்வதம் மேற்புறமும் அமைந்துள்ளன. வாசுகி தவமிருந்த இடம் வாசுகி பர்வதமாயிற்று. வாசுகி தளம் என்ற பெரிய ஏரியும் அதன் பக்கத்தில் இருக்கிறது. கேதாரத்திலிருந்து மூன்று நான்கு கல் தொலைவில் அவ்வேரி இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. ஆனல் எப்போதும் பனி உறையும் இடமாதலால் அதற்குத் தக்க ஏற்பாடோடுதான் அங்கு செல்லவேண்டும். மேற்கில் உள்ள மலையிலிருந்து, **தேன்கங்கா, பால்கங்கா** என்ற இரண்டு நதிகளும் பனி உச்சியிலிருந்து உற்பத்தியாகி, நேரே செங்குத்தாக வழிந்து வந்து மந்தாகினியோடு கலக்கின்றன. தெற்குப்பார்த்த சந்நிதி. கேதாரேஸ்வரர், கேதாரகௌரி, பஞ்சபாண்டவர், திரௌபதி, கிருஷ்ணன், வீரபத்திரன், கார்த்திகேயர், நந்தி, விநாயகர் மூர்த்தங்கள் இருக்கின்றன. இங்கே இருக்கும் விஷ்ணுவைத் தரிசித்தால் பத்ரியிலிருக்கும் நரநாராயணனைத் தரிசித்த பலன் உண்டாகும் என்றும் தெரிய வருகிறது. இதுபோலவே பத்ரியிலும் ஆலயத்தில் சிவலிங்கம் எழுந்தருளி யிருப்பதாகவும், கேதாரம் வரமுடியாதவர்கள் பத்ரியிலேயே கேதார நாதனை வழிபடலாமென்றும் சொல்லப்படுகிறது. அதிலிருந்து வடநாட்டிலே உள்ள ஆலயங்களின் சைவ வைணவ ஒற்றுமை புலனுகும். இத்தலத்தில் நெய் விளக்குப் போடுதல், பெருமானுக்கு நெய்யினல் திருமுழுக்காட்டுதல், சிவலிங்கத்தைத் தழுவுதல், முட்டிக்கொள்ளுதல் நியமம். பார்வதி, பரமசிவ தரிசனம் கண்டு தெளிந்த திருத்தலம்.

647

# சென்ற வழி

## ஒருநாள்:

"ஒருநாள் நிகழ்ந்தது சொல்லவற்றோ நின்றுயிர்ப்பறவே
தருகாயம் இன்றியோர் ஆனந்தம் எங்கும் தலைப்பட்டதே"

—குருஞானசம்பந்தர்.

நாலைந்து ஆண்டுகளுக்கு முன் ஒருநாள். தருமபுரத் திருமடத்திலே ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அருளாட்சிக்குவந்த சில ஆண்டுகளுக்குப்பின், பண்டாரக்கட்டிலிருந்து உத்திரவாயிற்று. அந்த உத்தரவு ஒரு சிந்தனையின் விளைவு. சிந்தனையோ சிவசிந்தனை. ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானத்தின் சிந்தனை மகாதேவனைப்பற்றியதாகத்தானே இருக்கும்! அதுவும் 'சித்தம் சிவன்பாலே வைத்த' புனிதமான சந்நிதானத்திலிருந்து அருளாணை. என்ன தெரியுமா? இமயத்தைப் பற்றிய சிந்தனைதான். இமயத்திலே பனிமலைக்கு நடுவே கோயில்கொண்டிருக்கும் கேதாரநாதர் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் திருவுள்ளத்திலே ஞான எழுச்சியைத் தூண்டி ஆணைக்கு வித்திட்டிருக்கிறார். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மலர் வாயிலிருந்துவந்த பொன்னுரைகள் இவை:- "காவியமும் ஓவியமும் பற்றிக் கதையளக்கிறதே புது உலகம்! காவியமும் ஓவியமும் திருமுறையில் இல்லையா என்ன? திருமுறையே ஒரு தனிக் காவியந்தானே? அங்கே உயிராவணம் இருந்து உற்று நோக்கி உள்ளக்கிழியில் உருவெழுதவில்லையா? ஒருவன் திருவுள்ளத்தில் அழகொழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியம் அதில் இல்லைய்யா? திருமுறையில் காவியச் சுவையும், ஓவியக்கலையுணர்வும் உண்டன்றோ. திருக்கேதாரப் பதிகத்தைப் பாருங்கள். அங்கே காவியமும் ஓவியமும் எப்படி கலந்து நிற்கின்றன என்று தொண்டர்கள் கேதாரத்திலே ஐம்பொறி அடக்கத்தோடு மலர் கொய்கிறார்கள், மாலை கட்டுகிறார்கள்: இண்டை மாலை. கேதார நாதருக்குச் சார்த்துகிறார்கள்; வணங்கி வழிபடுகிறார்கள். அங்கே பூத்துக் குலுங்கும் புது மலர்கள், அவற்றிலே வண்டுகள் பாடுகின்றன பண்ணிசை! சோலைகள்! சோலைகளிலே ஆடுகின்றன சுந்தரமான மயில்கள்! துள்ளிக் குதித்து ஓடுகின்றன மான் கன்றுகள். அந்த சுனைகள்! அதோ பாய்கின்றன கெண்டைகள்! அந்தக் கெண்டைகள் பாய்வதால் சுனையிலே, மலர்கின்றன மொட்டுகள்; இத்தகையது கேதாரம் என்றது திருமுறை! எவ்வளவு அருமையான இயற்கைச் சொல்லோவியம்! இது அப்படியே ஓவியமாகத தீட்டப்படவேண்டும்" ஆணை ஆக்கமாயிற்று. இந்தக் கேதாரக் காட்சி நல்ல சித்திரக்காரர் ஒருவரால் அழகான ஓவியமாக எழுதப்பட்டது. "ஞானசம்பந்தம்" இதழின் ஏழாவது ஆண்டு மலரிலும் இடம்பெற்றது. இப்படியாக

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் உள்ளத்தில் பல ஆண்டுகளுக்கு முன்பே திருக்கேதாரத்தைப்பற்றிய தெய்வசிந்தனை தெளிவாகத் தோன்றி வளர்ந்து வரலாயிற்று. அந்த எண்ணத்தின் வளர்ச்சிதான் இந்த யாத்திரைக்கு அடிகோலியது. இந்தச் சிந்தனையை அடிக்கடி பலரிடமும் சொல்லி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் மகிழ்வதும் உண்டு.

## தூண்டுகோல்:

திருக்கேதாரத்துக்கு அடிக்கடி சென்று, கேதாரநாதரின் பாதார விந்தத்தில், மீதூரும் காதலால் மீளமீள வணங்கிக் காசியிலும் கேதார கட்டத்திலுமாக வாழ்வின் பலநாட்களையும், கழித்து வருகின்ற அருள். வாழ்வு வாழ்பவர்கள் திருப்பனந்தாள், காசிமடத்துத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ அருணந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள்.

> "நாளோடிய நமனார்தமர் நணுகாமுனம் நணுகி
> ஆளாய்உய்மின் அடிகட்கிடம் அதுவேஎனில் இதுவே
> கீளோடு அரவு அசைத்தானிடம் கேதாரம் எனீரே"

என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் உலக மக்களுக்கு உரைப்பதை உளங் கொண்டார்கள் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள், திருக்கேதார யாத்திரை வாழ்வில் ஓர் இலட்சிய வெற்றியாக இருக்க வேண்டுமென்பது அவர்கள் திருவுள்ளம். அவர்கள் யாத்திரை சென்று திருக்கேதாரப் பெருமான் முன் உருகி நின்றபோது உள்ளத்தில் ஒன்று தோன்றியது. தருமபுரத்துத் தங் குருநாதராகிய ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களையும் இத்துணைச் சிறப்புடைய இத்தெய்விகச் சந்நிதி வந்து தரிசிக்கச் செய்யவேண்டும் என்று உடன்வந்திருந்த ஓதுவா மூர்த்திக்கு அங்கேயே ஒரு உத்தரவு பிறப்பித்தார்கள். 'தருமபுரம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களைச் சென்று தரிசிக்கவேண்டும். தரிசித்துத் "தொண்டரஞ்சு களிறும்மடக்கி" என்ற திருமுறைப் பதிகத்தைப் பாடி நிற்கவேண்டும். எப்பொழுது எங்கே எந்தநிலையில் கண்டாலும் அப்படியே. மறுபடிதான் மற்ற செய்திகளைக் கூறுவதெல்லாம்' என்று. அதுமட்டுமா? 'கேதாரம்' என்றே அவர்க்குச் சிறப்புப் பெயரும் சூட்டி விட்டார்கள்.

திருக்கேதார யாத்திரை முடிந்ததும் ஓதுவாமூர்த்திகள் பிரசாதங் களோடு வந்தார். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் திருவடிகளில் விழுந்து வணங்கிப் பின் கரங்குவித்து நின்று திருக்கேதாரத் திருப் பதிகத்தை ஓதினார். பின்னரே செய்திகளைக் கூறினார். பின்னர் பல முறை அவர் தருமைக்கு வந்தபோதெல்லாம் இப்பதிகத்தையே ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் திருமுன்பு பாடுவார். அடியேங்களுக்கெல்லாம்

649

ஒரே வியப்பு. 'வேறு பதிகமே ஓதாதவாறு ஒரேபதிகத்தை யாண்டு எங்குக் கண்டாலும் ஓதுவதன் உள்ளுறை என்னவாயிருக்கும்?' என்று ஓடி ஓடித் தேடும் எங்கள் உள்ளம். ஆனல் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களோ பதிகத்தின் நாத ஒலி செவியிற் பாயத் தொடங்கியவுடனேயே கண்களை மூடிச் சிந்தனையில் இருந்துவிடுவார்கள்; திருக்கேதாரநாதன் திருவடி நீழல் சென்று தரிசித்துவருதல் என்று வருமோ?' என்பதுதான் அந்த சிந்தனையின் பயனாக இருந்திருக்க வேண்டும்.

காசிவாசி ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளவர்கள் யாத்திரையை முடித்துக் கொண்டு தருமபுரத்துக்குக் குருநாதரைத்தரிசிக்க வந்திருந்தார்கள். திருக் கேதாரத்து மகிமைகளையும், யாத்திரை போகும் வழியையும், முடிவில் ஏற்படும் முடிவிலா இன்பத்தையும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களிடத் தில் விண்ணப்பித்தார்கள். மகாசந்நிதானம் அவர்களுக்கும் பல்லாண்டு களாக இருந்த திருக்கேதாரச் சிந்தனை இன்னும் தீவிரமாகியது. வெள்ளிப் பனிமலையின் மீது விளங்கும் செம்மேனி அம்மானை என்று காண்பது என்ற ஞான வேட்கையும் ஒருகாலைக்கொருகால் பெருகி வரலாயிற்று.

இதற்கிடையில், ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆட்சியில் ஆங்காங்கு நடத்திவரும் குடமுழுக்கு விழாக்களைப்போல் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான திருநின்றியூர் ஸ்ரீ லட்சுமிபுரீசுவரசுவாமி ஆலயத்துக்கும் குடமுழுக்கு விழா நிகழ்த்தத் திட்டமிடப்பெற்றது. வேலைகள் விரைந்து நடந்தன. 7—4—1955 வியாழக்கிழமை அன்று குடமுழுக்கு விழா. ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளி யிருந்தார்கள். விழாவன்று திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமி களும் இளவரசரோடு தரிசனத்திற்கு வந்து சேர்ந்தார்கள். கோயிலிலே சந்திப்பு. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களைத் தரிசித்த திருப்பனந்தாள் கேதார ஓதுவா மூர்த்திகள் வழக்கம்போல் திருக்கேதாரத் திருப் பதிகத்தைப் பண்ணிசையோடு பாடினர். ஆனல் இந்தமுறை பாடும் போது ஓதுவாமூர்த்திகளின் குரலில் ஒரு புதுநயம் இருந்தது. பதிகச் சொற்றொடர்களில் உருக்கம் மிகுதியாக இருந்தது. ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானமவர்களின் திருவுளத்தில் பல்லாண்டுகளாக முறுகி வளர்ந்த கேதார யாத்திரை தொடங்கப்போகிற தூய்மையின் விளைவே அது என்பதைப் பின்னர் உணர முடிந்தது. அங்கேயே ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களிடம் இவ்வாண்டு கேதாரத்திற்கு எழுந்தருளுவதாக ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் உத்திரவாயிற்று. ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களுக்கு எல்லையற்ற மகிழ்ச்சி. காசியிலிருந்து திருப் பனந்தாளைச் சேர்ந்த குமரசாமி மடத்து ஏஜண்ட் திரு. கல்யாண சுந்தரம் பிள்ளை அவர்களும் வந்திருந்தார். இதுவும் ஒரு எதிர்பாராத நிகழ்ச்சியே.

ஸ்ரீ காசிமடத்துத் தலைவர், ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் எழுந்தருளு வதைக் குறிப்பிட்டு உரிய முறையில் வரவேற்க ஆணையிட்டார்கள். திரு. பிள்ளையும் உடனே புறப்பட்டார்.

குடமுழுக்கு விழாவுக்குப்பின் யாத்திரைக்குவேண்டிய ஆயத்தங்கள் விரைந்து நிகழ ஆரம்பித்தன. யாத்திரை முடிய குறைந்தது ஆறுவார மாவது வேண்டும். மே முதல்வாரத்திலிருந்து அக்டோபர் முடிய அதற்குள்ளேயே பனி விலகிக் கதிரவன் வெயிலில் திருக்கேதாரம் திகழ்ந்து விளங்குவது. ஆதலால் யாத்திரைக்கு முன் செய்யவேண்டிய ஆக்க வேலைகளில் அதிவிரைவு இருந்தது. இவ்வாறு ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானமவர்களின் திருக்கேதார யாத்திரை என்ற ஞான விளக்குச் சுடர்விட்டெரியத் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களின் விண்ணப்பமும் வேண்டுகோளுமே தூண்டுகோலாக இருந்தன.

## *யாத்திரைக் கால்கோள்:*

11—4—'55 திங்கட்கிழமை மாலையில் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தில் யாத்திரை தொடக்கநாள் குறிப்பிடப்பெற்றது. விரைவிலே இச்செய்தி அன்பர்கள் பலருக்கும் எட்டியது. குருமூர்த்தங்களுக்கெல்லாம் வழிபாடு கள் நிகழ்ந்தன. ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி ஆலயம், ஸ்ரீ தருமபுரீசுவர சுவாமி ஆலயம் மற்றும் ஆதீனத் தொடர்புள்ள பல ஆலயங்களிலும் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்தப்பெற்றன. யாத்திரை வெற்றிகரமாக முடிய வேண்டுமென்று எல்லோரும் பிரார்த்தித்தனர்

## *சோமவாரத்தன்று:*

திங்கட்கிழமை காலையிலேயே ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானுக்கு சிறப்பான வழிபாடுகள் நிகழ்ந்தன. அன்பர்கள் வந்து கூடிக்கொண்டே இருந்தார்கள். மாகேசுவரபூசை சிறப்பாக நடைபெற்றது. மாலையிலே, ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆதி குருமூர்த்தமாகிய ஸ்ரீ ஞான புரீசுவரசுவாமியை வழிபட்டார்கள். சரியாக இரவு ஏழு மணிக் கெல்லாம் புறப்படுவதென்று திட்டம்.

அன்பர்கள் எல்லோர் உள்ளத்திலும் ஒரு நெகிழ்ச்சி. பிரிவுணர்ச்சி எல்லோரையும் ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது. கண்ணீர் பொழிய எல்லோரும் உந்தூர்தியின்பின் 'அரஹர' முழக்கம் செய்தது மிக உருக்கமாக இருந்தது. இன்னும் ஒன்றரைமாதம் குருநாதரைப் பிரிந் திருக்கவேண்டுமே என்று அடியார்கள் மனத்துயர். அன்பர்கள் எண்ணத் தளர்ச்சி எல்லாம் எழுதியோ சொல்லியோ முடிக்க முடியாது. எல்லா மாக மறக்கமுடியாத நிகழ்ச்சியாக இருந்தது ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் புறப்பாடு.

651

# சொக்கநாதர் திருமுன்பு:

''பின்னமற நின்ற பிரான்'' —உமாபதி சிவம்.

மாலை ஆறரைமணி. ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் திருமுன்பு வந்து கண்மூடி நின்றார்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள். அன்பர்களின் கூட்டம். அடியார்களின் இணக்கம். ஆதீனக் கீழைக்கலைக் கல்லூரி முதலிய கல்வி நிலையங்களின் ஆசிரியப் பெருமக்களும், மாணவர்களும் நிறைந்துநின்றார்கள். மாயூரம் முதலிய நகரங்களிலிருந்து வந்திருந்த அன்பர்களின் குழாம். ஆதீன நிருவாகத்துறைபைச்சேர்ந்த எல்லோரு மாக ஆதீன அலுவலர்களின் தொகுதி. இப்படியிருந்தது அந்தக்கூட்டம். ஓதுவாமூர்த்திகள் திருமுறை ஓதினார்; பஞ்சபுராணம் சொல்லிக் கொண்டே வந்தார். திருவிசைப்பா சொல்லும்போது மிகமிக உருக்கமாக இருந்தது. கற்றவர்கள் விழுங்குகின்ற கற்பகக்கனியாக உள்ளான் நம் பெருமான், அதுமட்டுமா? கருணைக்கடலாகவும் இருக்கிறான். கடல் என்றதும் கரைக்கு அடங்கிய ஒன்றுதானே என்று கருதவேண்டாம். அது கரையில்லாத அகண்டமான கருணைக்கடல். மெய்ஞ்ஞானப் படிப்புள்ளவர்களே அவனை அறிவார்கள். மெய்ஞ்ஞானப் படிப்பின்றி வெறும் பொய்ஞ்ஞானப் படிப்பாம் புத்தகப் படிப்பால் மட்டும் அவனை அறியமுடியாது. அவன் செவ்வண்ணத்தனாய் - செம்மேனியனாய் மாணிக்கத்தாலான மலையாக மன்னிநிற்கிறான். மலையாக உள்ளவனா என்று மலைத்துவிடுமே மனம்; மலைக்கவேண்டாம். தன்னை மதிப்பவர்கள் மனத்துள் எல்லாம் உண்மை ஒளி வளர்க்கும் மணிவிளக்காக இருக் கிறான். அவன் வெறும் படைபலத்தால் வையத்தை ஆட்டிய திரிபுராதி களை எரித்த எம் சிவபெருமான்; அரசன்; திருவீழிமிழலையில் இருந்து அருளரசு புரிகிறான். அவனைக் கண்டுகண்டு உள்ளம் குளிரவேண்டும்; கண்கள் குளிரவேண்டும்' இப்படி இசைக்கிறது அந்தத் திருஇசைப்பா. மாணிக்கமலையைக் கண்டுதானே மனங்குளிரப் போகிறார்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள்! எனவே இது மிகவும் பொருத்தமாக இருந்தது. விழுந்து வணங்கி மெய்ம்மறந்த ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு நேரமாயிற்றே, புறப்பட வேண்டுமே என்ற கவலை. ஆலவாய்ச்சொக்க நாதரைப் பிரியவேண்டுமே என்ற சிறுசோர்வு. 'பிரிவு என்பது எப்படி? பெருமானைத்தான் உள்ளத்தில் பின்னமறப் பிணைத்துவிட்டோமே' என்ற சமாதான உணர்ச்சி; அடியேங்களுக்கெல்லாம் திருக்கைவழக்கம் வரிசையறிந்து நிகழ்ந்தது. முடிந்தபின் ஆன்மார்த்த மூர்த்தியிடம் பிரியா விடைபெற்று முகப்புக்கு எழுந்தருளினார்கள். முகப்பில் நின்றுகொண் டிருந்தது உந்தூர்தி. மாலை 7 மணிக்கெல்லாம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத் தொடு தருமபுரத்தை விட்டுப் புறப்பட்டது.

652



*அன்றிரவு:*

உந்தூர்தி சென்னை போகும் பெருஞ் சாலையிலே விரைந்து சென்றது; தென் பெண்ணையாற்றங்கரையிலே நின்றது. இரவு உணவு அங்கே முடித்துக்கொள்ளப்பட்டது. உண்ணுதற் கமைந்த இடம் ஒரு பரந்த பெரிய மணற்பரப்பு. தென்பெண்ணையாறு; முழு நிலவு; அமைதியான சூழ்நிலை; மெல்லவீசும் மந்தமாருதம்; சூழ்நிலை மிக மிக இனிமையாக இருந்தது. உணவின் ஒவ்வொரு கவளமும் ஒவ்வொரு சிந்தனையை ஒவ்வொருவருக்கும் தூண்டியது. காட்சியினுடைய அருமையிற் தோய்ந்தனர் சிலர்; மந்தமாருதத்தின் இனிமையை வியந்தனர் சிலர்; இயற்கையின் எழிலைச் சுவைத்தனர் சிலர்; இப்படி இருந்தது எங்கள் கோஷ்டி. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் சிந்தனையையும் தூண்டியது அந்தக் காட்சி; ஆனால் அந்தச் சிந்தனை சிவ சிந்தனையாக வெளிவந்தது.

*சிவசிந்தனை:*

அப்பர் பெருமான் காட்சியளித்தார். அவர் திருவாய்மலர்ந்தருளிய தேவாரம் ஒன்றும் அந்த இயற்கைக் காட்சிக்கு ஒரு அளவுகோலாக நின்றது. அதுவே அந்த சிவசிந்தனை. அது சொல்கிறது.

"எங்கள் பெருமான் இணையடி நீழல் மிகவும் இன்பம் பயப்பது. அந்த இன்பம் தெவிட்டாத இன்பம். அனுபவம் சொல்லால் விளக்கமுடியாத ஒன்று. ஆனாலும் மக்களாகிய உங்களுக்கு உலகியலிலே வைத்தும் கொஞ்சம் சொல்லித் தருகிறோம். எங்கே! உங்கள் அநுபவப்படியே சிந்தித்துப் பாருங்கள். ஒரு நல்ல சங்கீத கோஷ்டி. குற்ற மற்ற வீணையினுடைய நாத ஒலி எழும்புகிறது. காலமோ இளவேனிற் காலம். தென்றல் வீசுகிறது. மாலை மதியமும் காட்சியளிக்கிறது. இடமோ தாமரை பூத்த தடாகக் கரை; அங்கே தாமரையிலே தேன் சொரிகிறது. மகரந்தம் நாறுகிறது. இவை வண்டுகளை அழைக்கின்றன. அந்தக் களிவண்டுகள் சும்மாவா வருகின்றன? இசை பாடிக்கொண்டே வருகின்றன. அந்த ரீங்காரமும் வீணையின் நாத ஒலியும் ஒன்றோடொன்று போட்டி போடுகின்றன. எங்கே, இந்தக் கதம்பக் காட்சியைச் சுவைத்துப் பாருங்கள், ஏதோ ஓரளவு எந்தை இணையடி நீழலின் இன்பத்தை உங்களுக்கு எடுத்துச்சொன்னதாக இருக்கும்."

இப்படி ஓடியது அந்தச்சிந்தனை. எங்களுக்கொரு நாடகக்காட்சியாகத் தோன்றியது. சற்றுநேரம் இவ்விதமாகவே பேசிக்கழித்தோம். சென்னை சேரவேண்டுமே; இரவு ஏறிக்கொண்டே வருகிறதே; புறப்படுவோம் என்று அந்தக் காட்சி இன்பத்துக்கும் பேச்சு இன்பத்துக்கும் முற்றுப்புள்ளி வைத்துப் புறப்பட்டன எங்கள் உந்தூர்திகள். சென்னையை அடையும்போது நள்ளிரவு.

[தொடரும்]

தருமபுர ஆதீனம் 25-ஆவது குரு மகாசந்நிதானம் அவர்களைப்

## பாராட்டி எழுதிய பாடல்கள்

தண்ணந் தமிழோ டியைந்துநலஞ்
சாருங் கலைகள் மணக்கின்ற
வண்ணம் புலவர் தமைப்புரந்து
வண்மை காட்டும் திருக்கரத்தோய்
திண்ண மென்றே ஒருசைவ
சித்தாந் தத்தின் கொடிஉயர்த்தும்
அண்ணல் தருமை யாதீனத்
தமரும் ஞானத் தவஅரசே. 1

சயிலாதி மரபுவளர்க் கின்றபுகழ் மேன்மேலும்
தழைக்கு மாறே
மயிலார்வ முடையசிவத் தொண்டுபுரி தவராச
பண்பு சான்றோய்
குயிலாரும் தருமையிற்சுப் பிரமணிய தேசிகப்பேர்
கொள்ளுங் குன்றே
வியனூர்நின் றனைவாழ்த்தி வணங்கிவரை
கின்றதனை விழைந்து காண்க. 2

மாசி லாதவர் நித்தலும் கூடியே
மகிழ்தரு திருத்தலமாம்
காசி மேவியக் கங்கையி லாடிமேற்
கவினுறு மிமயத்தே
தேசு சேர்தரு பல்லிடங் களுந்தரி
சித்தனை கேதாரத்
தீச னூர்திருக் கோயிலுங் கண்டனை
இன்பொடு மீண்டனையால். 3

போன போனநற் றலத்தினில் எளியனேள்
புண்ணியப் பயனென்றே
சான மோடணிந் துய்வுற அக்கதை
சார்திரு நீறுதி
யான அன்பொடு முய்த்தனை நின்னருட்
களவிலை யெனல் கண்டேன்
ஞான நாயக சால்வையும் உய்த்தனை
நன்றுநின் கொடைவளமே. 4

நன்னலம் பெற்று மீண்டும்
ஞானநற் பீட மாக
மன்னிய தருமை மேவி
மகிழ்ந்தனை என்னல் கேட்டேன்
பொன்னறுங் கடுக்கை சூடும்
புங்கவ னருளிற் பூத்த
நின்னலம் மேன்மே லோங்க
நீடுற வாழி வாழி. 5

அன்பன்
கி. வா. ஜகந்நாதன்

உ
குருபாதம்

# தருமபுர ஆதீன வெளியீடுகள்

| எண் | புத்தகம் | விலை ரூ.அ. பை. | தபாற்செலவு ரூ. அ. பை. |
|---|---|---|---|
| 1. | திருஞானசம்பந்தர் தேவாரம் முதல் திருமுறை (ராப்பர்) | 3—8—0 | 1—5—0 |
| 2. | இரண்டாந்திருமுறை (காலிகோ) | 5—0—0 | 1—8—0 |
| 3. | சமயபோதச்சொற்பொழிவுகள் | 1—0—0 | 0-13—0 |
| 4. | பரமாணு புராணம் | 1—4—0 | 0—9—0 |
| 5. | நித்தியபூஜா லக்ஷண சங்கிரகம் | 1—8—0 | 0—9—0 |
| 6. | திருக்குறள் உரைவளம் பொருட்பால் (காலிகோ) | 13—8—0 | 2—4—0 |
| 7. | காமத்துப்பால் ,, | 6—0—0 | 1—8—0 |
| 8. | திருவாசகம் ,, | 2—0—0 | 0-14—0 |
| 9. | நால்வர் நான்மணிமாலை | 0—4—0 | 0—4—0 |
| 10. | திருக்கேதாரயாத்திரை | ... ... | 1—0—0 |

தொகையை முன்பே அனுப்பிப் பெறல்வேண்டும்.

**கிடைக்குமிடங்கள் :—**

1. மானேஜர்,
   தருமபுர ஆதீனம், தருமபுரம், மாயூரம் போஸ்ட்.

2. தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலயம்,
   41, உஸ்மான் ரோடு, தியாகராயநகர், சென்னை-17.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram. (Mayuram). 10—7—1955.